21 Years
கனடாவின் மூத்த தமிழ் இதழ்
விளம்பரம்™
VLAMBARAM™
416-282-8059
E-mail: vlambaram@sympatico.ca
Web: www.vlambaram.com
416-282-4978

RBC Insurance
இளமையோ முதுமையோ காப்புறுதி ஒரு வழமை
உங்கள் அனைத்து காப்புறுதி தேவைகளிற்கும் கலந்து ஆலோசிக்க அழையுங்கள்
Jey Ahamparam P.F.P
Insurance Advisor
RBC காப்புறுதியில் விஷேடத்துவம் பெற்றவர்
(Specialized in RBC Insurance)
அத்துடன் உங்கள் வீட்டு வாகன காப்புறுதிகளிற்கும் (Home & Auto) உதவி வழங்கப்படும்.
Call: 416.301.1733



Join Our Brokerage Real Estate Needs
Raja Mahendran, P.Eng.
416.315.9397



நதி 21 | பாலம் 24 | சமூக முன்னேற்றப்பத்திரிகை | மாதமிருமுறை | இலவசம் | DECEMBER 15, 2011

# “கடவுள் துகள்” கண்டுபிடிப்பு!


எமது உலகம் ஒரு பெரிய வெடிப்பின் பின்னர் (Big Bang) உருவாகியதாக விஞ்ஞானிகள் கூறுகிறார்கள். இக்கொள்கையை விளக்கும்போது விஞ்ஞானிகள் கூறுவது இப்பெரிய வெடிப்பிற்கு முன்னர் திணிவற்ற (Mass) துகள்கள் (Particles) அண்டவெளியில் (Universe) இருந்தன. அவை ஒரு பெரிய சக்தியால் ஈர்க்கப்பட்டு மோதியே உலகத்தை தோன்ற வைத்த பெரிய வெடிப்பு ஏற்பட்டது.

இவ்வாறான விளக்கத்தை நிறுவுவதற்காக பல தசாப்தங்களாக உலகில் விஞ்ஞானிகள் பல பரிசோதனைகளை செய்து வந்தனர். அவர்களது முழு நோக்கமும் திணிவற்ற துகள் ஒன்றை உருவாக்கி தமது உலகம் பிறந்த கதையை நிருபிப்பதே. இவ்வாறு திணிவற்ற துகள் ஒன்றை கண்டிபிடிக்க முடியாவிட்டால் நாங்கள் இதுவரை காலமும் படித்த பௌதீகவியல் (Physics) கொள்கைகள் சில மீள்பரிசோதனை செய்து புதிதாக எழுத வேண்டி வந்திருக்கும்.

இவ்வாறு பல ஆயிரம் விஞ்ஞானிகளால் பல தசாப்தங்களுக்கு மேலாக கண்டுபிடிக்க முயன்று கொண்டு இருந்த திணிவற்ற துகளை, அதை கண்டு பிடிக்க பல சிரமங்கள் பட்ட படியால் “கடவுள் துகள்” (God Particle) என விஞ்ஞானிகளால் செல்லமாக அழைக்கப்பட்டது.

இக் “கடவுள் துகள்” விஞ்ஞானிகளால் “Higgs boson” என உத்தியோகபூர்வமாக அழைக்கப்படும். இது 1960 இல் University of Edinburgh (UK) இல் பௌதீகவியல் பேராசிரியராக இருந்த Peter Higgs இன் பெயராலேயே இவ்வாறு அழைக்கப்படுகின்றது. Boson எனப்படுவது அணுவைவிட சிறிய துகள். (Sub Atomic Particle) ஆகும்.

இந்த Higgs boson என அழைக்கப்படும் கடவுள் துகளை கண்டு பிடிக்கும் ஆராய்ச்சியில் 5000 இற்கு மேற்பட்ட விஞ்ஞானிகள் கிட்டத்தட்ட கடந்த ஐம்பது ஆண்டுகளாக ஆய்வுகளை மேற்கொண்டு வருகின்றனர். இதில் University of Toronto ஐ சேர்ந்த ஏழு விஞ்ஞானிகள் உட்பட பல பட்டப் மேற்படிப்பு பயிலும் மாணவர்களும் அடங்குவர்.




இவ் ஆய்விற்காக Geneva வில் Large Hadron Collider (LHC) என அழைக்கப்படும் 27 கி.மீ நீளமான வட்டவடிவமான குகை நிலத்திற்கு கீழ் 100 மீற்றர் ஆழத்தில் அமைக்கப்பட்டு சோதனைகள் நடத்தப்பட்டு வருகின்றன. இப்பரிசோதனை நிலையம் அமைக்க 10 பில்லியன் டொலர் செலவழிக்கப்பட்டது.

இங்கு பல வருடங்கள் நடைபெற்ற ஆய்வின் பலனாக “கடவுள் துகள்” இருப்பது முதல் தடவையாக டிசெம்பர் 13, 2011 இல் கண்டபிடிக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது. கடந்த ஜனவரி 2011 இல் இருந்து கடவுள் துகள் உருவாக்கும் முயற்சியில் ஒளியின் வேகத்தில் இரண்டு புரோத்தன் கற்றைகள் மோதவிடப்பட்டன. இவ்வாறாக 400,000 பில்லியன் புரோத்தன்கள் இதுவரை மோதவிடப்பட்டுள்ளன.

இப்பரிசோதனைகளை நடத்தும் விஞ்ஞானிகளில் ஒருவராக Fabiola Gianotti ஊடகங்களுக்கு தெரிவிக்கையில் December 13, 2011 இல் நடைபெற்ற பரிசோதனையின் போதுதான் முதல் தடவையாக “கடவுள் துகள்” இருப்பதற்கான சாத்தியக் கூறுகள் தென்பட்டன என்றார். தாங்கள் இந்த கடவுள் துகளை மூன்று அல்லது நான்கு முறை திரும்ப திரும்ப செய்து பெறும் வரை இக்கண்டு பிடிப்பை உறுதி செய்ய முடியாது என்றார். 2012 ஆம் ஆண்டு முடிவடைவதற்குள் நாங்கள் இக்கண்டு பிடிப்பை உத்தியோகபூர்வமான உறுதி செய்ய விடுவோம் என்றார்.

இப்பரிசோதனையை

தொடர்ச்சி 02ஆம் பக்கம்






Raj A. Rasaratnam
Sales Representative
Cell: 416-726-8055
Bus: 416-321-6969
HomeLife/GTA Realty Inc
Real Estate Brokerage*
5215 Finch Ave. E. Suite #203 Scarborough, ON M1S 0C2
*Independently Owned and Operated

RBC Royal Bank®
உங்கள் அனைத்து அடமானக் கடன் தேவைகளுக்கும்
Gteat Options for all your Mortgage needs
• Lowest interest rates and best prepayment options. • 1st time Home buyers. • Pre-approvals.
சுலபமாக, துரிதமாக குறைந்த வட்டி வீதத்தில் மோட்கேஜ்க்கு அழையுங்கள்
Paskaran K. (Paski) Mortgage Specialist
416.569.3099 /416.288.9855
E-mail: paski.kanagasabapathy@rbc.com



வீடு வாங்கவும் விற்கவும்...
ரவி பரமு
Real Estate Broker
Cell: 416-262-4176
Bus: 416-298-3200
HomeLife/Today Realty Ltd., Brokerage*
31 Progress Ave. Suite 210, Toronto
*Independently owned and operated



Sales & LEASING
MARKVILLE TOYOTA
KUMAR JEGASOTHY
905.294.8100 & 416.798.7234
Cell: 416.451.0565
கவர்ச்சியான உலக தரம் வாய்ந்த பாவித்த புதிய வாகனங்களை தமிழில் உரையாடி மிக மலிவு விலையில் பெற்றுக்கொள்ள அழைக்கவேண்டியவர்
>குமார் ஜெகசோதி<
8 ஆண்டுகள் அனுபவம்
E-MAIL: kjegasothy@markville.com 1.800.828.6585



துரித பணமாற்றுச் சேவை
• 53 ஆண்டுகள் வர்த்தகத்துறையில் முன்னோடிகள்
• கனடாவில் தொடர்ந்து 20 வருடங்கள் சேவை
• தந்தையுடன் மைந்தர்களும் இணைந்த சேவை
மு. காசிப்பிள்ளை சக புத்திரர்கள்
3228 Eglinton Ave. E. #3
416.267.8221
3351 Markham Rd. #109
416.321.8221




இப்பொழுது 2 இடங்களில்
DENTAL OFFICE
DR. Iru VIJAYANATHAN, BDS, FAGD
DENTAL SURGEON
☞ அவசரகால பல் வைத்திய சேவைகள்
☞ பல் அடைத்தல் (White Filling / Silver Filling)
☞ பல் பிடுங்குதல், ஞானப்பல் பிடுங்குதல்
☞ பல்வேர் அடைத்தல் (Root Canal) மூலம் பல் பிடுங்காமல் பாதுகாத்தல்
☞ முரசு கரைதல், முரசிலிருந்து இரத்தம் வடிதல், வாய்துர்நாற்றம் ஆகிய முரசு வியாதிகளுக்குச் சிகிச்சை
☞ சிறுவர்களுக்கான பற்சிகிச்சைகள்
3150 Eglinton Ave. E., Unit 5
Markham & Eglinton
Tel:416.264.3232
3351Markham Rd., #129
Markaham & Steeles
Tel: 416.609.2022

# ரொறொன்ரோ...

01ஆம் பக்கத்தொடர்ச்சி

(LHC) நடத்தும் நிறுவனம் CERN என அழைக்கப்படும் Geneva இல் உள்ள ஐரோப்பிய அணு ஆராய்ச்சி நிறுவனம் ஆகும். இந்நிறுவனத்தை 113 நாடுகளில் உள்ள 608 பல்கலைக்கழகங்களை சேர்ந்த 7,931 விஞ்ஞானிகளும் பொறியிலாளர்களும் பிரதிநிதித்துவப் படுத்துகிறார்கள்.



அருகில் உள்ள படத்தில் இருப்பது Geneva இல் உள்ள CERN ஆய்வு கூட வாசலில் வைக்கப்பட்டிருக்கும் 2 மீற்றர் உயரமான Cosmic Dance ஆடும் நடராஜருடையது. இச்சிலை 2004 இல் “துகள்” களை பற்றி ஆய்வு செய்யும் இந்நிறுவனத்தின் முன்னால் நிறுவப்பட்டது.

CERN ஆய்வு கூடத்துடன் தொடர்பு உடையவரும் Berkeley இல் உள்ள University of California பேராசிரியருமான Fritjof Capra, Ph.D என்பவரால் 1975 இல் பிரசுரிக்கப்பட்ட அண்டவெளியில் இருக்கும் துகள்களும் இந்துக்களுடைய நடராஜரின் சிவநடனமும் பற்றிய கட்டுரையில் எழுதப்பட்ட வாசகங்கள் இச்சிலைக்கு கீழ் பதியப்பட்டுள்ளன. இவரிற்கு நூறு ஆண்டுகளுக்கு முன்னரே கலாநிதி ஆனந்த குமாரசாமி நடராஜரின் Cosmic Dance பற்றி புத்தகம் எழுதியுள்ளார்.

நன்றி: CBC, Toronto Star, CERN

## நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தின் உத்தியோகபூர்வ இணைய செய்தித்தளத்தினை வி. உருத்திரகுமாரன் தொடக்கி வைத்தார்!

நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தின் உத்தியோகபூர்வ இணைய செய்தித்தளமான www.naathamnews.com இணையத் தளத்தை பிரதமர் வி.உருத்திரகுமாரன் அவர்கள் தொடக்கிவைத்தார். நா.த. அரசாங்கத்தின் உத்தியோகபூர்வ மூன்றாவது நாடாளுமன்ற அமர்வு அமெரிக்காவில் இடம்பெற்று வருகின்றது. இந்த அமர்வின் போதே நாதம் செய்திகள் இணையத் தளத்தை பிரதமர் வி.உருத்திரகுமாரன் அவர்கள் தொடக்கிவைத்தார். நாதம் செய்தித்தளத்தில் நா.த.அரசாங்கம் உத்தியோகபூர்வ செய்திகள் மற்றும் அறிக்கைகளை அனைவரும் பார்வையிடலாம். இதேவேளை தமிழர் நலனை முன்னிறுத்திய பிற செய்திகளும் இத்தளத்தில் இணைக்கப்படும் என தகவல் துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது. இதேவேளை நா.த.அரசாங்கத்தின் தகவல்துறை அமைச்சகத்தின் செயற் திட்டங்களின் விரிவாக்கத்தின் ஒரு கட்டமாக நாதம் தகவல் இணையம் பதிவு செய்யப்பட்ட நிறுவனமாக இயங்கவுள்ளது.



# கனடிய தமிழ் இளைஞனின் கின்னஸ் சாதனை!

தலையில் ஊசிகளை ஏற்றி கின்னஸ் சாதனை ஒன்றை முறியடித்துள்ளார் கனடிய தமிழரான திரு. மோகனதாஸ் சிவநாயகம்.




ரொறொன்ரோ, கனடாவில் டிசெம்பர் 03, 2011 சனிக்கிழமை அன்று மோகனதாஸ் சிவநாயகம் தலையில் 2020 ஊசிகளை ஏற்றி கின்னஸ் சாதனை ஒன்றை நிகழ்த்தியுள்ளார். இதற்கு முதல் ஏப்பிரல் 2009 இல் சீன நாட்டை சேர்ந்த Wei Shengchu என்பவர் தலையில் 2009 ஊசிகளை ஏற்றி கின்னஸ் சாதனையை செய்திருந்தார். அவரின் இந்த சாதனையை முறியடித்து 2020 ஊசிகளை தலையில் ஏற்றி மோகனதாஸ் சிவநாயகம் புதிய கின்னஸ் சாதனையை புரிந்துள்ளார்.

மோகனதாஸ் சிவநாயகம் அவர்கள் இச்சாதனையின் வெற்றி விளம்பரம் பத்திரிகையும் வாழ்த்தை தெரிவிக்கின்றது.

## வாசகர்கள் கருத்து

ஆசிரியர் விளம்பரம்

கடந்த ஒக்ரோபர் 15 வரை தொடர்ந்து 19 வாரங்களாக தங்கள் பத்திரிகையில் அகணி அவர்களால் எழுதப்பட்டு வெளிவந்த நினைவாற்றல் கட்டுரைகள் எம்மைப்போன்ற முதியவர்களுக்கு பயனுள்ளதாக அமைந்தது என்பதை மிகவும் நன்றியுடன் தெரிவித்துக்கொள்கின்றோம். அகணி அவர்கள் இது போன்ற கட்டுரைகளை தொடர்ந்து எழுதி வரவேண்டும் என்று அன்புடன் கேட்டுக்கொள்வதோடு அவரது முயற்சிகள் வெற்றிபெறவும் வாழ்த்துகின்றோம்.

அன்புடன்
மார்க்கம் சந்திரன்
பவானி சந்திரன்.

விளம்பரம் ஆசிரியர் அவர்களுக்கு,

விளம்பரம் பத்திரிகையை நீண்ட காலம் வாசித்து வரும் நான் கனடாவில் 1999 ஆம் ஆண்டிலிருந்து வாழ்ந்து வருகின்றேன். நவம்பர் மாதத்தில் அனேகமானவர்கள் சிவப்பு நிற “Poppy” ஐ தமது ஆடையில் அணிவதைப் பார்த்துள்ளேன். போரில் உயிர் இழந்தவர்களை நினைவில் வைத்துக் கொள்வதற்காக மட்டுமே குத்திக்கொள்வர் என்பதுதான் எனக்கு தெரிந்த விடயம். நவம்பர் 15, 2011ஆம் திகதி விளம்பரம் பத்திரிகையில் சிறுவர் பகுதியில் வந்த ஞா. ஆரணி எழுதிய விடயத்தின் மூலம் “Poppy” பற்றிய பல விடயங்களை அறிந்தேன்.

நன்றி விளம்பரம். ஆரணி வாழ்க! தொடர்ந்து எழுதவும்.

மகிந்தன்
ஸ்காபரோ

விளம்பரம் VLAMBARAM

விளம்பரம் பத்திரிகை 'விளம்பரம் பப்ளிக்கேஷன்ஸ் இங்' ஆல் வெளியிடப்படுகிறது. விளம்பரத்தில் வெளியாகும் ஆக்கங்களுக்கு எழுத்தாளர்களே பொறுப்பாளர்கள். **பதிப்புரிமை:** 2004 விளம்பரம் பப்ளிக்கேஷன்ஸ் இங். விளம்பரத்தில் வெளியாகும் ஆக்கங்களை முழுமையாகவோ, பகுதியாகவோ ஆசிரியரின் எழுத்து மூல அனுமதியின்றி மறுபிரசுரம் செய்தலாகாது.

**பதிப்பாளர்:** ராஜா மகேந்திரன்
**பத்திரிகை ஆசிரியர்:** சத்தியா மகேந்திரன்
**ஊடகப்பொறுப்பாளர்:** விஜே பாலன்
**தட்டச்சு:** கலா
**அலுவலக முகாமையாளர்:** நிலானி
**பதிப்பு:** *Can Media Publishing Inc.*

*Vlambaram Publications Inc.*
*GTA SQUARE, 5215 FINCH AVE. E., #201, TORONTO, ON M1S 0C2, CANADA*
*TEL: 416-282-8059* *FAX: 416-282-4978*
*e-mail: Vlambaram@sympatico.ca* *Web: www.vlambaram.com*

## வாசகர் எண்ணங்கள்

விளம்பரம்™ ஐ வாசிப்பவர்கள் தங்கள் எண்ணக்கருவை தெரியப்படுத்துமாறு கேட்டுக் கொள்கின்றோம். ஆக்கபூர்வமான உங்கள் கருத்தை இப்பகுதியில் வெளியிடுவோம். உங்கள் அபிப்பிராயங்களைக் கடிதம் மூலம், தொலைநகல் மூலம் அல்லது மின்னஞ்சல் மூலம் அனுப்புமாறு கேட்டுக்கொள்கிறோம்.

1. *Vlambaram Publications Inc., 5215 Finch Ave. E. #201, Toronto, ON M1S 0C2*
2. *Tel.: 416.282.8059*
3. *Fax: 416.282.4978*
4. *email: vlambaram@sympatico.ca*
5. *web: vlambaram.com*

# அரசியல் தீர்வுக்கான பேச்சுவார்த்தை:

## மூன்று முக்கிய விடயங்களில் சர்ச்சை, பேச்சுக்கள் முறியுமா, தொடருமா?

---இலங்கையிலிருந்து மங்களநாதன் அரவிந்தன்---

பேச்சுவார்த்தைகள் என்றால் பிணக்குத்தான். இணங்கிப் போவதென்பதும், விட்டுக் கொடுத்து விடயங்களுக்குத் தீர்வு காண முயல்வதென்பதும், குதிரைக் கொம்பாகவே இருக்கின்றது.

இலங்கையின் இனப்பிரச்சினை விவகாரத்தில் காலம் காலமாக நடைபெற்று வந்த பேச்சுவார்த்தைகளில் இதைத்தான் தமிழ் மக்கள் அனுபவமாகப் பெற்றிருக்கின்றனர். இழுபறிகளுக்குப் பின்னர் ஒப்புக்கொள்ளப்படு கின்ற விடயங்கள் கூட, அரசாங்கத் தரப்பினரால் நடைமுறைப்படுத்தப்படுவ தில்லை. ஒப்புக்கொண்டு கைச்சாத்திடப்பட்ட பல ஒப்பந்தங்கள் கிடப்பில் போடப்படுவதே வரலாறாக இருக்கின்றது. இதைவிட, அரசி யல் தீர்வுக்காக முன்வைக்கப்பட்ட யோசனைகள் அடங்கிய ஆவணம் நாடாளுமன்றத்தில் கிழித்தெறியப்பட்ட சம்பவமும் நடைபெற்றிருக்கின்றது.

இத்தகைய ஒரு பின்னணியிலேயே, இலங்கை ஜனாதிபதியின் தலைமையிலான ஆளும் கட்சியாகிய சிறிலங்கா சுதந்திரக் கட்சி பிரதிநிதிகளுக்கும், தமிழ்த்தேசிய கூட்டமைப்புப் பிரதிநிதிகளுக்கும் இடையில் பேச்சுவார்த்தைகள் நடைபெற்று வருகின்றன.

கடந்த 2009 ஆம் ஆண்டு மே மாதம் யுத்தம் முடிவுக்கு வந்தது. விடுதலைப் புலிகள் இராணுவ ரீதியாக அழிக்கப்பட்டார்கள். யுத்தம் முடிவடைந்ததும், இனப்பிரச்சினைக்குப் பேச்சுவார்த்தைகளின் மூலம் முடிவு காணப்படும் என்று ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச உறுதியளித்திருந்தார். அத்துடன், அரசாங்கத்திற்குப் பெரும்பான்மை பலம் போதாது என்றும், மீண்டும் தான் ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட வேண்டும் என்றும் அவர் கூறியிருந்தார். பொதுத் தேர்தலில் தமிழ் மக்கள் யாருக்கு ஆதரவு வழங்குகின்றார்களோ, அவர்களுடன் அரசாங்கம் பேச்சுவார்த்தைகளை நடத்தி ஓர் அரசியல் தீர்வைக் காணும் என்றும் அவர் குறிப்பிட்டிருந்தார்.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச கோரியிருந்த படி, நாடாளுமன்றத்தில் அவரது கூட்டணிக்குப் பெரும்பான்மை பலத்தை மக்கள் தேர்தல் மூலமாக வழங்கியிருந்தார் கள். அத்துடன் விடுதலைப்புலிகளுக்கு எதிரான யுத்தத்திற்குத் தலைமையேற்று வெற்றிகரமாக நடத்தி முடித்த முன்னாள் இராணுவத் தளபதி ஜெனரல் சரத் பொன்சேகா அவருக்கு எதிராக ஜனாதிபதி தேர்தலில் களமிறங்கயிருந்த போதிலும் மக்கள் மகிந்த ராஜபக்சவுக்கே அதிகப்படியாக வாக்களித்திருந்தார்கள்.

எனினும் வடக்கு கிழக்குப் பிரதேசத்தைச் சேர்ந்த தமிழ் மக்கள் அவருக்கு எதிராகவே வாக்களித்திருந்தார்கள். தமிழ்த்தேசிய கூட்டமைப்பிற்கு அவர்கள் அமோக ஆதரவை வழங்கியிருந்தார்கள். இது அவருக்குப் பெரும் ஏமாற்றத்தையே கொடுத்திருந்தது. விடுதலைப்புலிகள் அவர்களைத் தமது இராணுவ கிடுக்குப்பிடியில் வைத்திருந்தார்கள் என்றும் அரசாங்கம் மனிதாபிமான இராணுவ நடவடிக்கையின் மூலம் அவர்களை மீட்டெடுத்து அவர்களது வாழ்க்கையில் அமைதியைக் கொண்டு வந்தது என்றும் அவர் பெருமை பேசியிருந்தார். அத்துடன், விடுதலைப்



புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்த பிரதேசங்களில் தமிழ்த்தேசிய கூட்டமைப்போ அல்லது வேறு எந்தத் தமிழ்க்கட்சியோ தேர்தலில் வெற்றிபெற்றுவிடக் கூடாது என்பதிலும் அவர் மிகவும் கவனமாக செயற்பட்டிருந்தார். இதற்கேற்ற வகையில் தேர்தலுக்கான வேட்பு மனுக்கள் தாக்கல் செய்யப்பட்ட வேளையிலும், தேர்தல் பிரசார காலத்திலும் நுணுக்கமான முறையில் காய்களை அவர் நகர்த்தியிருந்தார். எனினும் அவர் எதிர்பார்த்த வகையில் தேர்தல் முடிவுகள் வடக்குகிழக்குப் பகுதிகளில் இருந்து அவருக்குக் கிடைக்கவில்லை. இது ஒரு வகையில் அவருக்கு சீற்றத்தையே ஏற்படுத்தியிருந்தது.

இந்த சீற்றம் காரணமாகவோ என்னவோ, யுத்தம் முடிவடைந்து தேர்தல்கள் நடந்து முடிந்த பின்னரும் ஏற்கெனவே உறுதியளித்திருந்தபடி, இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண்பதற்கான பேச்சுவார்த்தைகளை அவர் தமிழ்த்தேசிய கூட்டமைப்பினருடன் உடனடியாக ஆரம்பிக்கவில்லை. காலம் போய்க் கொண்டிருந்தது. உள்ளூரிலும், சர்வதேச மட்டத்திலும் இனப்பிரச்சினைக்கு இலங்கை அரசாங்கம் அரசியல் தீர்வு காணப்பதற்கான பேச்சுவார்த்தைகளை உடனடியாக ஆரம்பிக்க வேண்டும் என்ற அழுத்தங்கள் அதிகரித்துக் கொண்டிருந்தன. இதனடிப்படை யில் யுத்தம் முடிவடைந்து, சுமார் இரண்டு வருடங்கள் முடிவடைந்த பின்னர், 2011 ஜனவரி மாதத்திலேயே தமிழ்த்தேசிய கூட்டமைப்புப் பிரதிநிதிகளுடனான பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்பட்டன.

இந்தப் பேச்சுவார்த்தைகளில் முதன்மைப் பிரச்சினையாக காணாமல் போயுள்ளவர்கள், கைது செய்யப்பட்டும், சரணடைந்த பின்பும் குடும்ப உறவினர்களுக்கு விபரங்கள் தெரி யாத வகையில் சிறைக்காவலில் வைக்கப்பட்டுள்ளவர்கள், வழக்கு விசாரணைகளின்றியும், நீண்ட கால வழக்குத் தவணைகள் போடப்பட்ட நிலையிலும் வருடக்கணக்காக சிறைகளில் வாடுகின்ற தமிழ் அரசியல் கைதிகள் ஆகியோர் பற்றிய விடயமும், பல்வேறு பிரச்சினைகளைக் கொண்டிருக்கின்ற மீள்குடியேற்ற விடயமும் அரசாங்கத் தரப்பிற்கு எடுத்துக் கூறப்பட்டது.

சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டிருப் பவர்களின் பெயர்ப்பட்டியல் உடனடியாக வெளியிடப்பட வேண்டும் என தமிழ்த்தேசிய கூட்டமைப்பினால், இந்தப் பேச்சுவார்த்தை யின் ஆரம்பத்தில் வலியுறுத்தப்பட்டது. எனினும் பேச்சுவார்த்தைகள் மூன்று நான்கு சுற்றுக்களைக் கடந்த பின்னர் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களின் பெயர் விபரங்கள் அடங்கிய பட்டியலை வெளியிடுவதற்கு அரசாங்கம் இணங்கியது. ஆயினும் அந்தப் பெயர்ப்பட்டியல் வெளியிடப்படும் என தெரிவிக்கப்பட்ட குறித்த தினத்தில் வெளியிடப்படவில்லை. மாறாக, பயங்கரவாதத் தடுப்பு பொலிஸ் பிரிவின் வவுனியா அலுவலகத்தில் அது காட்சிக்கு வைக்கப்படும் என்றும் அங்கு தமிழ்த்தேசிய கூட்டமைப்புப் பிரதிநிதிகள் சென்று பார்வையிடலாம் என்றும் பேச்சுவார்த்தைகை-ளின்போது தெரிவிக்கப்பட்டது, ஆயினும் உறுதியளித்தபடி, குறித்த தினத்தில் அதுவும் செய்யப்படவில்லை. பேச்சுக்களில் ஒப்புக்கொள்ளப்பட்டவாறு சிறைச்சாலைக-ளில் அல்லது வேறிடங்களில் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களின் பெயர் விபரங்களை வெளியிடுவதற்குப் பாதுகாப்பு அமைச்சு குறிப்பாக அமைச்சின் செயலாளர் கோட்டாபய ராஜபக்ச உடன்படவில்லை என பின்னர் தெரிவிக்கப்பட்டிருந்தது. எனினும் சில தினங்களின் பின்னர் ஒரு பெயர்ப்பட்டியல் வெளியிடப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டதையடுத்து, காணாமல் போயுள்ளவர்களின் உறவினர்கள் வவுனியாவுக்குப் படையெடுத்துச் சென்ற போது, வழக்கு விசாரணைகளுக்குத் தயாராக இருப்பவர்களின் பெயர் விபரங்கள் மாத்திரமே அங்கு வழங்கப்பட்டிருந்தமை தெரியவந்தது. இவர்கள் ஏற்கெனவே தமது குடும்பத்தினருடன் தொடர்புகளைப் பேணி வந்தார்கள் என்பதும், காணாமல் போயிருந்த வர்களின் விபரங்கள் எதுவும் அங்கு இருக்கவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

இந்தச் சம்பவத்தையடுத்து, பேச்சுவார்த்தை களில் ஒருசில விடயங்களுக்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அரசாங்கத் தரப்பில் உறுதியளிக்கப்பட்ட அதேவேளை, அரசியல் தீர்வுக்குரிய அடிப்படை யோசனைகள் அடங்கிய திட்டம் ஒன்றையும் தமிழ்த்தேசிய கூட்டமைப்பு அரசாங்கக்குழுவினரிடம் வழங்கி அதனடிப்படையில் பேச்சுக்களைத் தொடர்ந்து நடத்தலாம் என தெரிவித்திருந்ததாகத் தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் சார்பில் பேச்சுக்களில் கலந்து கொண்டிருக்கின்ற நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஸ் பிரேமச்சந்திரன் தெரிவித்திருந்தார்.

எனினும் பேசப்பட்ட விடயங்களில், ஒப்புக்கொள்ளப்பட்டவாறு நடவடிக்கைகளை எடுப்பதற்கு அரசாங்கம் தவறிவிட்டது என்பதைச் சுட்டிக்காட்டி, தமிழ்த்தேசிய கூட்டமைப்பு பேச்சுவார்த்தைகளில் இருந்து விலகியது. எனினும், பேச்சுவார்த்தைகள் தொடர்ந்து நடத்தப்படும் என தெரிவித்த அரசாங்கம் இறுதித் தீர்வு நாடாளுமன்றத் தெரிவுக் குழு ஒன்றின் ஊடாகக் காணப்படும்


தொடர்ச்சி 04ஆம் பக்கம்

APPLEMORE AUTOMOTIVE
உட்புற, வெளிப்புற திருத்த பராமரிப்பு வேலைகளுக்கு என்றும் உங்கள் மத்தியில்
ONTARIO'S DRIVE CLEAN
Accredited Test & Repair Facility
• Detailing
• Motor Shampoo
• Interior Shampoo
• Exterior Wash
• Waxing
• Repairs
• Safety Certification
• Overall Maintenance
• Under Coating
• Rust Proofing
416-285-4998
435 Midwest Road. Unit B5, Scarborough, ON. M1P 3A6
SPECIAL



# தலைமையை வளர்க்கும் விளையாட்டுக்கள்

நீங்கள் அரை மனதோடு வேலைக்குச் செல்லலாம். அரை மனதோடு வாழ்க்கை வாழலாம். எதை வேண்டுமானாலும் செய்யலாம். ஆனால் விளையாட்டு என்று வரும்போது, அதை நீங்கள் அரைமனதோடு செய்ய முடியாது. யாராக இருந்தாலும் முழுமையாக ஈடுபடாதபோது அது விளையாட்டே அல்ல. ஒருவர் ஒரு விளையாட்டில் ஈடுபடும் கணமே தெரிந்தோ, தெரியாமலோ அதில் 100 சதவீதம் பங்கேற்கிறார். 100 சதவீதம் பங்கேற்பு - இதுதான் தலைவராக இருப்பதற்கும் மிகவும் இன்றியமையாதது. தன்னைச் சிறிதும் பிடித்து வைத்துக் கொள்ளாமல் முழுமையாக தந்து பங்கேற்பவர்தான் தலைவர். இது தலைவராக இருக்கும் ஒருவர் கற்றுக்கொள்ள வேண்டிய ஒன்று.



சத்குரு வாசுதேவ்

Contact: 1 866 424 ISHA (4742)
Email: toronto@ishafoundation.org
Website: www.ishafoundation.org /
**Inner Engineering Program is now online with Sadhguru**: www.innerengineering.org

பல வகைகளில் விளையாட்டு என்பது ஒவ்வொரு மனிதனையும் தன்னளவில் ஒரு தலைவராக ஆக்குகிறது. விளையாட்டின் முக்கியமான இன்னொரு தன்மை வெற்றி பெற வேண்டும் என்ற விருப்பம். வெற்றி பெற வேண்டும், சாதிக்க வேண்டும் என்பது ஒவ்வொரு தலைவரின் நோக்கமாக உள்ளது. இது இயற்கையாகவே ஒவ்வொரு விளையாட்டின் நோக்கமாகவும் உள்ளது. வெல்ல வேண்டும் என்ற தீவிரமான விருப்பம் இல்லாவிட்டால், ஒருவர் விளையாட்டில் ஈடுபட முடியாது. தீவிரமான விருப்பம் இல்லை என்றால் அது விளையாட்டே இல்லை என்று சொல்லலாம். அதே சமயம் இந்த விளையாட்டில் தோற்றாலும் பரவாயில்லை என்ற பக்குவமும் மிகவும் முக்கியமானது. இது ஒரு தலைவருக்கும் பொருந்தும். அவர் சாதிக்கும் நோக்கில் எவ்வளவு தீவிரமாக இருந்தாலும், தோற்றாலும் பரவாயில்லை என்ற மனநிலையில் இருக்க வேண்டும். அப்போதுதான் தான் நினைத்த படியான முடிவுகள் ஏற்படாத போது துவண்டு போக மாட்டார்.

உங்கள் வாழ்வில் மிகப்பெரிய நோக்கங்களை நீங்கள் நிர்ணயம் செய்யும் போது, பொதுவாக பல விடயங்கள் நடப்பதில்லை. பெரிய நோக்கங்கள் நிர்ணயிக்காத மனிதர்களுக்கு தம் வாழ்வில் பல பெரிய விடயங்கள் நடப்பது போன்ற தோற்றம் ஏற்படலாம். பல விடயங்கள் நடக்கலாம். ஏனென்றால் அவர்கள் பெரிதான எதையும் நோக்கமாகக் கொள்ளவில்லை.

எனவே தலைமை என்பதன் அடிப்படையே ஏதோ ஒன்றை சாதிப்பதற்கான முயற்சி. உயர்ந்த நோக்கத்தை நோக்கி மக்களை வழிநடத்திச் செல்லுதல். ஆனால் ஏதோ சில காரணங்களால் அவை நிறைவேறாமல் போய்விட்டால், விரக்தியே வடிவமாக ஆகாமல், அதை எப்படி செயல்படுத்தலாம் என்று மட்டுமே பார்ப்பது தலைமைக்கான குணம். ஒரு விளையாட்டும் இதே தன்மையில்தான் உள்ளது.

தலைவர்களை உருவாக்குவதில் விளையாட்டு மிக முக்கியமான ஒரு கருவியாக உள்ளது. இதை நாங்கள் ஈஷாவின் அனுபவத்திலும் பார்த்திருக்கிறோம். ஈஷா கிராமப்புற விளையாட்டுப் போட்டிகளிலும், ஈஷாவின் மற்ற நிகழ்ச்சிகளிலும் விளையாட்டு என்பது ஒரு முக்கிய அங்கமாக உள்ளது. ஒரு விளையாட்டில் ஈடுபடும் போது, மக்கள் தங்களுடைய கட்டுப்பாடுகளைத் தகர்த்தெறிந்து விட்டு, அந்த கணத்திற்குத் தேவையான தலைமையை ஏற்று, சூழ்நிலையை சிறப்பாகக் கையாள்வதைப் பார்க்கிறோம். இது அவர்களுடைய தலைமை ஏற்கும் பண்பை வளர்க்கிறது.

எனவே தலைமையும், விளையாட்டும் மிகவும் நேரடியான தொடர்பை உடையவை. ஒரு விளையாட்டை ஒருவர் விளையாட கற்றுக் கொள்ளும்போதே, தலைவராகத் திகழ்வதற்குத் தேவையான அடிப்படை குணங்களையும் சேர்த்தே கற்றுக்கொள்கிறார்.

விளையாடுவோம்! தலைமை ஏற்போம்!




# அரசியல் தீர்வுக்கான...

03ஆம் பக்கத்தொடர்ச்சி

என அறிவித்து அந்தத் தெரிவுக்குழுவை அமைப்பதற்கான நடவடிக்கைகளை முன்னெடுத்ததுடன், தெரிவுக்குழுவில் பங்கு பற்றுவதற்குரிய பிரதிநிதிகளின் பெயர்களை தமிழ்த்தேசிய கூட்டமைப்பு உடனடியாக வழங்க வேண்டும் என வலியுறுத்தியது. ஆயினும் தமிழ்த்தேசிய கூட்டமைப்பினர் தமது நிலைப்பாட்டில் இருந்து சற்றும் விட்டுக்கொடுக்கவில்லை. பேச்சுக்களில் ஒப்புக்கொள்ளப்பட்ட விடயங்கள் அமல் செய்யப்பட வேண்டும். பேசித் தீர்க்கலாம் என ஒப்புக்கொள்ளப்பட்ட விடயங்கள் பற்றி முதலில் பேச்சுக்கள் நடத்தி, அவற்றிற்குத் தீர்வு காண வேண்டும். அதன்பின்னர் நாடாளுமன்றத் தெரிவுக்குழுவுக்கான பிரதி நிதிகளின் பெயர்களை நாங்கள் தருவோம் என உறுதியாகக் கூறிவிட்டார்கள்.

பேச்சுக்களை முறித்துவிட்டார்கள் என்ற பழிச்சொல்லிற்கு ஆளாக நேரிடும் என்பதைத் தமிழ்த்தேசிய கூட்டமைப்பினரும், அரசாங்கத் தரப்பினரும் நன்றாகவே உணர்ந்திருந்தார்கள். இதனால் சில நிமிடங்கள் பேச்சுவார்த்தை மேசையில் மயான அமைதி நிலவியது. இறுதியில் அரசாங்கத்தரப்பில் பேச்சுக்களில் கலந்து கொண்டிருந்த அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் மெதுவாக ஆசனத்தில் இருந்து எழுத்ததும் தமிழ்த்தேசிய கூட்டமைப்பினரும் தமது ஆசனங்களில் இருந்து எழுந்தார்கள். இதன் காரணமாக பேச்சுவார்த்தைகளில் விரிசல் ஏற்பட்டிருந்தது. இந்த விரிசல் பேச்சுவார்த்தைகளை முறித்துவிடும் என அஞ்சப்பட்ட போதிலும், டிசம்பர் 6 ஆம் திகதி பேச்சுவார்த்தைகள் நடைபெறும் என்று அரசாங்கம் அறிவித்து பேச்சுக்கள் நடைபெற்றன.



இது டிசம்பர் மாதம் 3 ஆம் திகதி நடைபெற்ற பேச்சுக்களின்போது நடைபெற்றது. தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் இந்த உறுதியான நிலைப்பாடு அரசாங்கத்தை நிலைகுலையச் செய்துவிட்டது என்றே கூறவேண்டும். அன்றைய சந்திப்பின்போது கிட்டத்தட்ட, பேச்சுவார்த்தைகள் முறிந்து விட்டது என்று கூறுமளவிற்கு இரு தரப்பினரும் உணர்ச்சி வசப்பட்டிருந்தனர். எனினும் எவரும் தமது உணர்வுகளை வார்த்தைகளில் கொட்டிவிடாமல் நா காத்ததுடன், பேச்சுவார்த்தை மேசையில் இருந்து யார் முதலில் எழும்புவது என்ற ஒரு சிக்கலான அனுபவத்திற்கும் ஆளாகியிருந்தார்கள். ஏனெனில் தெரிவுக்குழுவுக்கான பெயர் விபரங்களைத் தெரிவிக்க வேண்டும் என்பதில் பிடிவாதமாக இருந்த அரசு ஏனைய எந்த விடயம் பற்றியும் பேச்சுக்கள் நடத்த முடியாது எனக் கூறிவிட்டது. தமிழ்த்தேசிய கூட்டமைப்பினரோ, ஒப்புக்கொள்ளப்பட்ட விடயங்கள், ஒப்புக்கொண்ட நிகழ்ச்சிநிரலின்படி பேசப்பட வேண்டும், அவற்றிற்குத் தீர்வு காண வேண்டும், அதன் பின்னர்தான் தெரிவுக்குழுவுக்குப் பிரதிநிதிகளை நியமிப்பது பற்றி தெரிவிக்கப்படும் எனக் கூறி, தமது நிலைப்பாட்டில் அழுங்குப்பிடியில் நின்றிருந்தார்கள்.

இந்த நிலையில் யார் முதலில் ஆசனத்தில் இருந்து எழும்புகின்றார்களோ, அவர்கள் பேச்சுவார்த்தையைக் குழப்பிவிட்டார்கள்.

இந்தப் பேச்சுவார்த்தைகளின்போது தமிழ்த்தேசிய கூட்டமைப்பினர் ஏற்கெனவே முன்வைத்திருந்த காணி, பொலிஸ் அதிகாரங்கள், வடக்கு கிழக்கு இணைப்பு ஆகிய மூன்று விடயங்கள் தொடர்பாகவும் ஆராயப்பட்டது. எனினும் இந்த மூன்று விடயங்களிலுமே இணக்கப்பாடு காணப்படவில்லை. காணிகள் விடயத்திலும் காவல்துறை விடயத்திலும் அதிகாரங்களைப் பகிர்ந்து கொள்வதற்கு அரசாங்கம் தயாரில்லை. வடக்கு கிழக்கு இணைப்பு என்ற பேச்சுக்கே இடமில்லை என்ற நிலையில் பேச்சுவார்த்தைகள் ஒரு முட்டுக்கட்டை நிலைமையை எட்டியிருக்கின்றது. எனினும் அடுத்த கட்டப் பேச்சுவார்த்தைகள் நடைபெறும் என்றும் அதற்கான திகதியும் குறிப்பிடப்பட்டிருக்கின்றது.

நாட்டில் நடைமுறையில் இருக்கின்ற மாகாண ஆட்சி முறைமையின் கீழ் தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகளுக்குத் தீர்வு காணப்பட வேண்டும் என்ற நோக்கத்தில் நடைபெறுகின்ற இந்தப் பேச்சுவார்த்தைகளில், மாகாண சபைக்கு குறிப்பாக வடக்குகிழக்கு இணைந்த மாகாண சபைக்கு காணி அதிகாரம் வழங்கப்பட வேண்டும். பொலிஸ் அதிகாரம் வழங்கப்பட வேண்டும் என்பது தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் கோரிக்கையாகும்.

தொடர்ச்சி 12ஆம் பக்கம்

# முல்லைப் பெரியாறு தண்ணீர் அரசியல்

தமிழ்நாட்டுக்கும் கேரளாவுக்கும் இடையே யான முல்லைப் பெரியாறு பிரச்சினை உச்சத்தில் வந்து நிற்கிறது. விரதம் இருந்து, மாலை போட்டு, இருமுடி கட்டி ஐயப்பன் கோயிலுக்கு செல்லும் தமிழக பக்தர்களை வழிமறித்து தாக்கப்படுவது, தேனி, குமுளி பகுதிகளில் இருந்து கேரளாவுக்கு காய்கறிகள் கொண்டுசெல்லும் வாகனங் களையும், கூலித் தொழிலாளர்களையும் தாக்குவது இன்னொரு பக்கம், தமிழகத்தில் மலையாளிகள் வைத்திருக்கும் சிறுகடைகள், வணிக நிறுவனங்கள் அடித்து நொறுக்கப் படுவது என கேரளா மாநிலத்துக்கும் தமிழ்நாட்டுக்கும் இடையே பதட்டம் நாளொரு முகமாக அதிகரித்துக் கொண்டே வருகிறது. இது இந்தளவில் நிற்குமா அல்லது இன்னும் மோசமாகி பெரிய கலவரமாக ஆகுமா என்ற பயத்தில் உறைந்து போயிருக்கிறார்கள் இரு பக்கமும்.

கர்நாடகத்துக்கும் தமிழ்நாட்டுக்கும் இடையேயான காவிரி பிரச்சினை தொடர் கதை மாதிரி சமரச பேச்சு, நீதிமன்றம் என கேரளாவுக்கும் தமிழ்நாட்டுக்கும் இடையே கடந்த 30 வருடங்களாக இழுத்தடிக்கப்படும் பிரச்சினை முல்லைப் பெரியாறு அணை.

சிக்கல் என்ன என்பதைப் பார்க்கும் முன்பு முல்லைப் பெரியாறு அணை பற்றி ஒரு சிறு அறிமுகம்...

முல்லை பெரியாறு அணை, மேற்குத் தொடர்ச்சி மலையில் தொடங்கி மேற்கு நோக்கி கேரளாவுக்குள் பாயும் பெரியாற்றின் மீது கட்டப்பட்ட அணையாகும். தமிழ்நாடு - கேரளா எல்லையில் அமைந்துள்ளது. அணை கட்டப்பட்ட இடம் கேரளாவுக்கும் அணை தமிழகத்திற்கும் உரியது. கன்னியா குமரி மாவட்டத்தில் உள்ள பத்மநாபபுரம் அரண்மனையின் இடம் தமிழ்நாட்டுக்கும் அரண்மனை கேரளாவுக்கும் சொந்தம் என்பது மாதிரி. அணை தமிழகத்துக்குத்தான் சொந்தம் என்பதால் தமிழக பொதுப்பணித் துறைதான் இவ்வணையை பராமரித்து வருகிறது. இதன் கொள்ளளவு 15.5 டி.எம்.சி., உயரம் 155 அடி. இந்த அணையின் நீர்பிடி பகுதியில்தான் தேக்கடி வன சரணாலயம் உள்ளது.

1895ஆம் ஆண்டு, அப்போதைய ஆட்சியாளர் களான ஆங்கிலேயர்களால் கட்டப்பட்டது இந்த அணை. கேரளாவில் விவசாய நிலங்கள் குறைவு என்பதால், பயன்படுத்தப் படாமல் அரபிக் கடலில் கலந்து விரயமாகும் பெரியாற்று தண்ணீரை, மெட்ராஸ் மாகாணத்தின் உள்ள வறண்ட பகுதிகளான மதுரை, சிவகங்கை, ராமநாதபுரம் பகுதி களுக்கு திருப்பிவிட்டால், வானம் பார்த்த பூமியாக கிடக்கும் தரிசு நிலங்களை விவசாயத்துக்குப் பயன்படுத்திக் கொள்ள லாம் என்னும் நோக்கத்தில் இந்த



**- மா. கிருஷ்ணன் -**

அணையை கட்டினார்கள். இந்த அணையைக் கட்டியவர் இங்கிலாந்து பொறியாளர் ஜான் பென்னி குயிக்.
ஆனால், பென்னி குயிக்கு முன்னாலே பலரும் இதற்கான முயற்சியில் ஈடுபட்டுள்ளனர். முல்லைப் பெரியாறு அணையின் மூலகர்த்தா இராமநாதபுரம் மன்னர் சேதுபதிதான். 1798இல், மேற்குத் தொடர்ச்சி மலையின் காடுகளில் உருவாகி அரபிக்கடலில் சென்று வீணாகக் கலந்து கொண்டிருந்த பெரியாற்று நீரை, குறுக்கே அணை கட்டி தடுத்து, கிழக்கு பக்கமாக முல்லை ஆற்றுக்கு திருப்பினால், அத்தண்ணீர் முழுவதையும் மதுரை, இராமநாதபுரம் ஜில்லாக்களுக்கு கொண்டு வந்து, இப்பகுதி வறண்ட நிலங்களை பயனுள்ள விளைநிலங்களாக மாற்றிவிடலாம் என்ற எண்ணம் முதன்முதலில் சேதுபதிக்குதான் உதயமானது. இதன் சாத்தியங்கள் குறித்து ஆராய முத்து இருளப்பபிள்ளை தலைமையில் 12 பேர் அடங்கிய குழுவை மேற்கு தொடர்ச்சி மலைக்கு அனுப்பினார், மன்னர். அந்த குழு தங்கி காடுகளை அழித்து, அணை கட்டும் இடத்தை தேர்வு செய்து மதிப்பீடு தயார் செய்தது. ஆனால், நிதி வசதியின்றி அத்திட்டம் நிறைவேறாமல் நின்றுவிட்டது. அதன்பிறகு, 1807இல் மதுரை கலெக்டராக இருந்த ஜார்ஸ்பேரிஸ் என்ற ஆங்கிலேயர், மேற்கு தொடர்ச்சி மலைக்கு சென்று அணை கட்ட திட்டமிடப்பட்ட இடத்தை பார்வையிட்டு, ஆய்வு செய்ய மாவட்ட பொறியாளர் ஜேம்ஸ் கார்டுவெல்லுக்கு உத்தரவிட்டார். 1808இல் ‘இது நடைமுறைக்கு ஒத்துவராத திட்டம்’ என கார்டுவெல் அறிக்கை தந்தார். ஆனாலும், அடுத்தடுத்து வந்தவர்கள் முயற்சித்துக்கொண்டேதான் இருந்தார்கள். 1837இல் கர்னல் பேபர் என்பவர் தலைமையில் சின்ன முல்லையாறு தண்ணீரை மண் அணை மூலம் திருப்பும் பணி நடைபெற்றுள்ளது. ஆனால், பணியில் ஈடுபட்ட வேலையாட்களுக்கு காய்ச்சல் ஏற்பட்டதாலும், கூலி அதிகம் கேட்டதாலும் தொடர்ந்து பணிகள் நடக்கவில்லை என்று ஆவணங்கள் தெரிவிக்கின்றன. 1867இல் மேஜர் ரைவ்ஸ் என்பவர் அணை கட்ட எவ்வளவு செலவாகும் என அறிக்கை ஒன்றை தயாரித்துள்ளார். அன்றைய மதிப்பில் 17.50 லட்சம் ரூபாய் ஆகும் என மதிப்பிடப்பட்டுள்ளது. அதன்பிறகு, பெரி யாற்றின் குறுக்கே மண் அணை அமைத்து அந்த ஆற்றின் நீரைக் கிழக்குப் பக்கமாகத் திருப்புவதற்கான வரைவுத் திட்டம் ஒன்றை சுமித் என்கிற ஆங்கிலேயர் தயார் செய்தார். இந்தத் திட்டத்திற்கு தலைமைப் பொறியா- ளராக இருந்த வாக்கர் என்பவர் எதிர்ப்பு தெரிவித்ததால், இந்தத் திட்டம் தள்ளிப் போனது. அதன்பிறகு, 1876ஆம் ஆண்டில் சென்னை மாகாணம் கடுமையான பஞ்சத்தால் பாதிக்கப்பட்டதால் இந்த அணைத்திட்டம் மேலும் காலதாமதம் ஆனது.

இக்காலகட்டத்தில் இராணுவப் பணிப் பொறி யாளராக இந்தியாவிற்கு வந்தார் கர்னல் ஜான் பென்னி குயிக். கிடப்பில் கிடந்த முல்லைப் பெரியாறு திட்டம் அவரை வசீகரித்தது. இதனால் ஒரு பெரும்பகுதி மக்கள் பயனடைவார்கள் என்பதை உணர்ந்த பென்னிகுயிக் அதனை செயல் படுத்த தீர்மானித்தார். அதற்கான திட்டத்தை ஆங்கிலேய அரசின் பார்வைக்கு மீண்டும் அனுப்பி, 1882இல் அரசின் அனுமதி பெற்றார். அணை கட்டுவதற்கான திட்டம் மீண்டும் தயாரானது. பென்னி குயிக் திட்டத்தின்படி ஆற்றின் அடிப்பகுதியிலிருந்து 155 அடி உயரத்தில் அணை கட்டவும், அணையில் தேங்கும் தண்ணீரை மேற்குத் தொடர்ச்சி மலையின் கிழக்குப் பகுதிக்கு கொண்டு செல்ல மலையினுள்ளே 5900 அடி சுரங்கம் அமைக்கவும், சுரங்கம் வழியே வந்து வைரவன் ஆற்றில் கலக்கும் தண்ணீரை அப்படியே சுருளி ஆற்றில் கலந்து, பிறகு வைகை ஆற்றுக்கு கொண்டு செல்லவும் தீர்மானிக்கப்பட்டது.

அணை கட்டப்படும் பகுதி திருவாங்கூர் சமஸ்தானத்தில் இருந்ததால் அதனுடன் இடம், லாபப் பங்கீடு போன்றவைகளுக்கான பேச்சு வார்த்தை நான்கு ஆண்டுகளாக நடத்தப்பட்டது. முடிவாக, 1886ஆம் ஆண்டு அக்டோபர் 26ஆம் தேதி ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட்டது. இதன்படி திருவாங்கூர் சமஸ்தானத்திற்கு (தற்போதைய கேரளா), சென்னை மாகாணம் (தற்போதைய தமிழ்நாடு) அணையின் 155 அடி உயரத்திற்குத் தண்ணீர் தேங்கும் போது நீர்பிடிப்பு பகுதியில் மூழ்கும் 8000 ஏக்கர் நிலப்பரப்பு மற்றும் அணைகட்டுவதற்கும் பிற பணிகளுக்குமாக 100 ஏக்கர் சேர்த்து 8100 ஏக்கருக்கு, குத்தகையாக ஏக்கருக்கு 5 ரூபாய் வீதம் 40,500 ரூபாயை பிரிட்டிஷ் நாணயமாக தரவேண்டும். குத்தகைப் பணம் தவிரவும் 6 அம்சங்கள் அந்த ஒப்பந்தத்தில் இடம்பெற்றது. ஒப்பந்தம் 999 ஆண்டுகளுக்கு செல்லுபடியாகும் என குறிக்கப்பட்டது.

அதன்பிறகு, எழுபத்தைந்து இலட்சம் ரூபாய் திட்ட மதிப்பீட்டில் 1895ஆம் ஆண்டு அக்டோபர் 11ஆம் தேதியில் அப்போதைய

தொடர்ச்சி 18ஆம் பக்கம்

TBC Toronto Business College
கணக்கியல் கல்வியில் ஓர் முதன்மை நிறுவனம்
SECOND CAREER

DIPLOMA PROGRAMS
Computerized Accounting
26 weeks
Personal Support Worker
26 weeks
Medical Office Administrator
32 weeks
★ EI பெற்றுக்கொண்டிருப்பவர்கள்
★ 4 வருடங்களுக்குள் EI பெற்றவர்கள்
★ 5 வருடங்களுக்குள் MATERNITY BENEFITS பெற்றவர்கள்
அரசாங்க நிதி உதவியில் இலவசமாகக் கற்று
உங்கள் எதிர் காலம் மிளிர்வதைக் காண்பீர்கள்
Tuition Fees,Books,Living Expenses,
Day care & Transportation up to $28000
அனைத்தும் இலவசம்
QUICK BOOKS,SIMPLY ACCOUNTING , ACCPAC
PHOTO SHOP,WEB PAGE,COMPUTER HARDWARE
Experienced Instructors
416-291-5155
4465 SHEPPARD AVE. EAST #208
( SHEPPARD & BRIMLEY ) SCARBOROUGH
www.tbcollege.com info@tbcollege.com
(Registered as a Private Career College under the Private Career Colleges Act 2005)

# சேவாக்கின் அதிரடியில் நிகழ்ந்த உலக சாதனைகள்!

## விளையாட்டுத் தகவல்கள் 320

• கிரிக்கெட் வரலாற்றில் டெஸ்ட் போட்டியில் இரண்டு முச்சதம், ஒருநாள் போட்டியில் இரட்டைச் சதமடித்த ஒரே வீரர் வீரேந்திர சேவாக்.

• மேற்கிந்திய தீவுகளுக்கு எதிராக 140 பந்துகளில் இரட்டைச் சதமடித்ததன் மூலம் ஒருநாள் போட்டியில் அதிகவேக இரட்டைச் சதமடித்தவர் என்ற பெருமையைப் பெற்றார். ஒருநாள் போட்டியில் சச்சின், சேவாக் ஆகியோர் மட்டுமே இரட்டைச் சதமடித்துள்ளனர். சச்சின் 147 பந்துகளில் இரட்டைச் சதமடித்தார்.

• சச்சின், சேவாக் இருவருமே மத்தியப் பிரதேச மாநிலத்தில் நடைபெற்ற போட்டியில்தான் இரட்டைச் சதமடித்துள்ளனர். சச்சின் குவாலியரிலும், சேவாக் இந்தூரிலும் இரட்டைச் சதம் கண்டனர்.

• சேவாக்-கம்பீர் ஜோடி முதல் விக்கெட்டுக்கு 176 ரன்கள் குவித்தது. இதன் மூலம் மேற்கிந்திய தீவுகளுக்கு எதிராக சேவாக் -கங்குலி ஜோடி குவித்த அதிகபட்ச ரன்னான 176 ரன்கள் சமன் செய்யப்பட்டது. 2002-ல் ராஜ்கோட்டில் நடைபெற்ற ஆட்டத்தில் சேவாக்-கங்குலி ஜோடி முதல் விக்கெட்டுக்கு 176 ரன்கள் சேர்த்தது.

• ஒருநாள் போட்டியில் சேவாக் முதல்முறையாக 7 சிக்ஸர்கள் அடித்தார்.

• அதிக சதமடித்த இந்திய வீரர்களில் 15 சதங்களுடன் சேவாக் 3-வது இடத்தில் உள்ளார். சச்சின் (48) முதலிடத்திலும், கங்குலி (22) இரண்டாவது இடத்திலும் உள்ளனர்.

• சேவாக் சதமடித்த ஆட்டங்களில் 14-ல் இந்தியா வெற்றி கண்டுள்ளது.

• மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிராக 2-வது முறையாகவும், ஒருநாள் போட்டியில் 23-வது முறையாகவும் ஆட்டநாயகன் விருதை வென்றார் சேவாக்.

• இந்த ஆண்டில் மட்டும் 12 இன்னிங்ஸ் களில் 2 சதம், ஒரு அரைசதத்துடன் 645 ரன்கள் குவித்துள்ளார் சேவாக்.

• இந்த ஆட்டத்தில் 7 சிக்ஸர், 25 பவுண்டரிகள் மூலம் 142 ரன்கள் குவித்து சிக்ஸர், பவுண்டரிகள் மூலம் அதிக ரன் எடுத்தவர்கள் வரிசையில் இரண்டாவது இடத்தைப் பிடித்தார் சேவாக். ஆஸ்திரேலியாவின் ஷேன் வாட்சன் 15 சிக்ஸர், 15 பவுண்டரிகள் மூலம் 150 ரன்கள் குவித்து முதலிடத்தில் உள்ளார். வாட்சன் வங்கதேசத்துக்கு எதிராக 96 பந்துகளில் ஆட்டமிழக்காமல் 185 ரன்கள் எடுத்தபோது இந்த சாதனையை செய்தார்.

• மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிராக 69 பந்துகளில் சதமடித்தார் சேவாக். இதுதான் இந்திய வீரர் ஒருவர் அந்த அணிக்கு எதிராக அடித்த அதிவேக சதம். இதற்கு முன் அந்த அணிக்கு எதிராக சேவாக் 75 பந்துகளில் சதமடித்ததே சாதனையாக இருந்தது.

• இந்த ஆட்டத்தில் இந்தியா 153 ரன்கள் வித்தியாசத்தில் மேற்கிந்தியத் தீவுகளை வென்றது. அந்த அணிக்கு எதிராக இந்தியா பெற்ற இரண்டாவது பெரிய வெற்றி. இதற்கு முன் 2007 ஜனவரியில் வடோதராவில் நடைபெற்ற ஆட்டத்தில் இந்தியா 160 ரன்கள் வித்தியாசத்தில் மேற்கிந்தியத் தீவுகளை வீழ்த்தியதே அதிகபட்ச ரன் வித்தியாசத்திலான வெற்றி.

• 4-வது முறையாக மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிரான ஒருநாள் தொடரை வென்றுள்ளது இந்தியா. இதற்கு முன் 2006-07-ல் 3-1, 2009-ல் 2-1, 2011-ல் 3-2 என்ற கணக்கில் தொடரை வென்றுள்ளது.

• மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிராக இந்தியா 45 ஆட்டங்களில் வெற்றி கண்டுள்ளது. 57 ஆட்டங்களில் தோல்வி கண்டுள்ளது. ஓர் ஆட்டம் டையில் முடிந்துள்ளது. இரண்டு ஆட்டங்களில் முடிவு எட்டப்படவில்லை.

• ஒருநாள் போட்டியில் 4 முறை 400 ரன்களுக்கு மேல் குவித்த ஒரே அணி இந்தியாதான். இலங்கை, தென் ஆப்பிரிக்கா, பெர்முடா, மேற்கிந்திய தீவுகளுக்கு எதிராக இந்தியா இந்த சாதனையை செய்துள்ளது.

• மேற்கிந்திய தீவுகளுக்கு எதிராக இந்தியா குவித்த 418 ரன்கள், ஒருநாள் போட்டியில் எடுக்கப்பட்ட 4-வது அதிகபட்ச ஸ்கோர். நெதர்லாந்துக்கு எதிராக இலங்கை குவித்த 443 ரன்களே ஒருநாள் போட்டியில் எடுக்கப்பட்ட அதிகபட்ச ஸ்கோர்.

• இந்திய வீரர் ரவீந்திர ஜடேஜா 34 ரன்களை விட்டுக்கொடுத்து 3 விக்கெட்டு களை வீழ்த்தி ஒருநாள் போட்டியில் தனது சிறப்பான பந்துவீச்சைப் பதிவு செய்ததோடு, 50 விக்கெட்டுகளையும் வீழ்த்தினார். இது அவருக்கு 47-வது போட்டியாகும்.

• கம்பீர் (67 ரன்கள்) மேற்கிந்திய தீவு களுக்கு எதிராக 2-வது அரைசதத்தையும், ஒருநாள் போட்டியில் 28-வது அரை சதத்தையும் பதிவு செய்தார்.

### கடவுளின் ஆசி இருந்ததால் தான் உலக சாதனை நிகழ்த்த முடிந்தது: சேவாக்

மேற்கிந்திய தீவுகள் அணிக்கு எதிராக இந்தியாவின் இந்தூரில் நடந்த 4வது ஒருநாள் போட்டியில் இந்திய அணி வெற்றி பெற்று தொடரை வென்றது. இந்திய அணித்தலைவர் சேவாக் 219 ஓட்டங்கள் எடுத்து புதிய உலக சாதனை படைத்தார். அவர் 140 பந்துகளில் இரட்டை சதம் விளாசினார். 149 பந்துகளை எதிர்கொண்ட சேவாக் 7 சிக்சர், 25 பவுண்டரியுடன் 219 ஓட்டங்கள் விளாசினார். இதன் மூலம் சச்சினின் இரட்டை சதம் சாதனையை முறியடித்தார். சச்சின் கடந்த ஆண்டு தென் ஆபிரிக்காவுக்கு எதிராக குவாலியர் ஆட்டத்தில் 200 ஓட்டங்கள் எடுத்திருந்தார்.

இரட்டை சதம் விளாசியது குறித்து சேவாக் அளித்த பேட்டி: சச்சின் இரட்டை சதம் விளாசிய போது நான் மிகவும் மகிழ்ச்சி அடைந்தேன். அவர் சாதனை படைத்த போது சீற்றி ல் இருந்து எழுந்து கைத்தட்டி ஆரவாரம் செய்தேன். மகத்தான வீரரின் சாதனையை தற்போது நான் முறியடித்ததில் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன். ஒருநாள் போட்டிகளில் இரட்டை சதம் விளாச வேண்டுமென்று நான் எப்போதுமே நினைத்து இல்லை. ஆனால் 10 வருட அனுபத்திற்கு பிறகு இரட்டை சதம் எண்ணம் வந்தது. களத்தில் 50 ஓவர்கள் நிச்சயம் நின்றால் என்னால் இரட்டை சதம் விளாச முடியும் என்பது தெரியும். உலக கிண்ணப் போட்டியில் வங்கதேசத்திற்கு எதிராக 46 ஓவர்கள் வரை நின்று 175 ஓட்டங்கள் எடுத்தேன். அப்போது தவறவிட்டு விட்டேன். 170 ஓட்டங்கள் எடுத்த போது சமி எனது கேட்சை தவறவிட்டார். அப்போது தான் கடவுள் என்னுடன் இருப்பதாக அறிந்தேன். 46 ஓவர்கள் வரை களத்தில் இருந்தால், உன்னால் இரட்டை சதம் அடிக்க முடியும் என கடவுள் கூறியது போல் உணர்ந்தேன். அந்த நிலையிலும் எனது பேட்டிங் ஸ்டைலை மாற்றவில்லை. ரசிகர்கள் நான் இரட்டை சதம் விளாச வேண்டுமென்று நீண்ட நாட்களாக விரும்பினர். தற்போது அவர்களது எண்ணங்களை நிறைவேற்றியுள்ளேன்.

### ஐ.சி.சி கிரிக்கட்: ஒருநாள் போட்டிக்கான தரவரிசைப் பட்டியல் வெளியீடு

சர்வதேச கிரிக்கட் கவுன்சில்(ஐ.சி.சி) ஒருநாள் போட்டிக்கான துடுப்பாட்ட வீரர்கள் மற்றும் பந்துவீச்சாளர்களின் புதிய தரவரிசை பட்டியலை வெளியிட்டுள்ளது. துடுப்பாட்ட தரவரிசையில் ஹஷிம் ஆம்லா (தென்ஆப்பிரிக்கா), டிவில்லியர்ஸ் (தென்ஆபிரிக்கா), ஜோனதன் டிராட் (இங்கிலாந்து) முறையே முதல் 3 இடங்களில் தொடர்ந்து நீடிக்கிறார்கள். இந்திய வீரர்களில் ரோகித் ஷர்மாவும், விராட் கோக்லியும் முன்னேற்றம் கண்டுள்ளனர். மேற்கிந்திய தீவுகள் அணிக்கு எதிரான ஒருநாள் போட்டியில் சதம் அடித்த விராட் கோக்லி, ஒரு இடம் ஏறி இந்திய அணித்தலைவர் டோனியுடன் 4-வது இடத்தை பகிர்ந்து கொண்டுள்ளார். மேற்கிந்திய தீவுகள் அணியுடன் ஹாட்ரிக் அரைசதம் விளாசிய ரோகித் ஷர்மா 21 இடங்கள் உயர்ந்து 35-வது இடத்தை பெற்றுள்ளார். கவுதம் கம்பீர் 7 இடங்களை இழந்து 19-வது இடத்திற்கு தள்ளப்பட்டுள்ளார். சச்சின் தெண்டுல்கர் 18-வது இடத்திலும், தற்காலிக இந்திய அணித்தலைவர் ஷேவாக் 24-வது இடத்திலும் உள்ளனர்.

பந்து வீச்சாளர்களின் தரவரிசையில் முதலிடத்தில் பாகிஸ்தான் வீரரான சயீத் அஜ்மல் இருக்கிறார். 3-வது இடத்தில் நியூசிலாந்தின் வெட்டோரியும், 4-வது இடத்தில் இங்கிலாந்தின் ஸ்வானும் உள்ளனர். இதேபோல் வங்காளதேச தொடரில் அசத்திய பாகிஸ்தான் சுழற்பந்து வீச்சாளர் முகமது ஹபீஸ் 6 இடங்கள் கிடுகிடுவென எகிறி 2-வது இடத்தை ஆக்கிரமித்துள்ளார். இந்திய சுழற்பந்து வீச்சாளர் தமிழகத்தை சேர்ந்த அஸ்வின் முதல் முறையாக 20-க்குள் நுழைந்துள்ளார். சமீப காலமாக அவரது பந்துவீச்சு சீராக இருந்து வருவதால் இந்த உயர்வு கிடைத்துள்ளது. அவர் 21-வது இடத்தில் இருந்து 18-வது இடத்திற்கு முன்னேறியுள்ளார். முதல் 10 வரிசைக்குள் இந்திய பந்துவீச்சாளர்கள் யாரும் இல்லை. இந்தியாவின் அதிகபட்ச தரநிலையாக அஸ்வினின் 18-வது இடம்தான் உள்ளது.



எஸ். கணேஷ்


MOHAN
HOMEOPATHIC CLINIC
& MASSAGE CLINIC

• கழுத்து, முதுகு நோவு • வாகன விபத்து • மன அழுத்தம் • விளையாட்டுக் காயங்கள் • தலையிடி, தலைவருத்தும்

போன்ற நோய்களிற்கு அழையுங்கள் டாக்டர் ஜே. மோகன்



Dr. J. Mohan
D.H.M.S., N.H.C.

WE OFFER CONSULTATION
REGARDING ALL HEALTH PROBLEMS INCLUDING:

• STRESS
• SKIN PROBLEM
• RESPIRATORY PROBLEMS
• DIGESTIVE PROBLEMS
• VARICOSE VEINS
• BACK PROBLEM /NECK PROBLEM
• TENNIS ELBOW PROBLEM
• TREAT WITH MASSAGE THERAP
• ALLERGIES
• SEXUAL PROBLEMS
• SEXUAL PROBLEMS
• CHOLESTEROL
• TUMOR
• FOOT PROBLEM

HOMEOPATHIC TREATMENT ABOUT FOLLOWING

| | | | |
|---|---|---|---|
| Cough | Tonsillitis | Migraines | Prostatitis |
| Flu | Gout | Hair Loss | Obesity |
| Depression | Arthritis | Diabetes | Hemorrhoids |
| Anxiety | P.M.S | Cystitis | Stumatitis |
| Asthma | Leucorrhea | Cancer | Colitis |

Also other Acute & Chronic Problems
HOMEOPATHIC PRACTITIONER

TEL: 416-298-7537/416-291-3022

5200 Finch Ave, East Suite 210
At Middle Field, Scarborough, M1S 4Z4

# புதிதாக நிர்மாணம் செய்யும் ஆதனத்தின் எண்ணிக்கை குறைகின்றதா?



புதிதாக நிர்மாணம் செய்யப்படும் ஆதனத்தின் எண்ணிக்கையில் நவம்பர் 2011, கனடா ரீதியாக 13% அளவில் கீழ்நோக்கிய இறக்கம் ஏற்பட்டுள்ளது. இருந்த போதிலும், பொதுவான ஆதன வியாபாரத்தில் தொடர்ச்சியான அதிகரிப்பே காணப்படுகின்றது. விற்று/ வாங்கும் எண்ணிக்கை, ஆதனத்தின் விலையில் இறக்கம், கீழ்நோக்கிய பாதையில் செல்லுமா என்ற கேள்வி பொதுவாக மக்கள் மனதில் தொக்கி நிற்கின்றது. ஆனால் இன்றைய காலத்தில் நடைபெறும் ஆதன வியாபாரம் இதற்கு எதிர்மாறாக நடைமுறையில் காணக்கூடியதாக உள்ளது.

**நாமும் நமது இல்லமும்**

**ராஜா மகேந்திரன்**

**தொடர் - 356**

கனடிய மோட்கேஜ் மற்றும் கவுஸிங் கோப்பரேசனின் (CMHC= CANADIAN MORTGAGE AND HOUSING CORPORATION) மாதாந்த அறிக்கையின் உறுதிப்பாட்டின் பிரகாரம் கனடிய அளவில் நவம்பர் மாதத்தின் அளவு ஒக்ரோபர் மாதத்தின் நிர்மாணம் செய்யப்படும் வீடுகளின் அளவை விட ஏறத்தாள 27,000 எண்ணிக்கையான வீடுகள், மனைகள் குறைந்து காணப்படுகின்றது. அதாவது ஒக்ரோபர் 2011 இன் அளவு 208,800 ஆகவும் நவம்பர் 2011 இன் அளவு 181,100 ஆகவும் இருப்பது தெரியவந்துள்ளது.

நாடளவில் நவம்பர் மாதத்தில் புதிதாக நிர்மாணம் செய்யப்படும் ஆதனங்களில் குறிப்பிட்டளவு இறங்கு முகம் தெரியவருகின்றது. கடந்த சில வருடங்களாக அடுக்குமாடிக் கட்டிடத்தின் நிர்மாணத்தில் ஏற்பட்ட அதீத அதிகரிப்பு, குறிப்பாக வன்கூவர், ரொறொன்ரோ பகுதிகளில் ஏற்பட்டது.

இந்த இறக்கம் இறங்குமுகத்தின் ஆரம்பமா? என்று கூறமுடியுமா? ஏற்கெனவே போதியளவு புதிதாக நிர்மாணம் செய்யப்பட்டு கொண்டு இருக்கும் ஆதனங்கள் சந்தையில் உள்ளன. அண்மைக்காலங்களில், நாடளவில் தனி வீடுகளின் எண்ணிக்கை குறிப்பிட்டளவு குறைந்துள்ளது. இதற்கு கட்டக்கூடிய நிலத்தின் அளவு அருகி வருவதே ஆகும். இதனால் அடுக்குமாடி மனைகளின் அளவே அதிகரித்து வந்துள்ளன. இதற்கு ரொறொன்ரோ, வன்கூவர்

தொடர்ச்சி 16ஆம் பக்கம்


HomeLife/GTA
Realty Inc. Brokerage* *Independently Owned & Operated

"கனவு உங்களுடையது, பொறுப்பு எங்களுடையது"



Raja Mahendran, P. Eng.
Broker/Owner

STORE FOR LEASE
KENNEDY & EGLINTON
Yogas Plaza
Retail Store For Lease. 1000 sq.ft. Suitable For Salon, jewellery . Kind Of Uses, Close To TTC, Kennedy Subway Station.

SPACE FOR LEASE



5200 Finch. Ave. East. (Embassy store building) 2nd Floor unit. About 745 sq.ft. 4 Rooms & Large common area Rent $973. Clean unit.

CONDO. FOR SALE




KENNEDY & 401
1 + 1 Bedroom condo. for sale. Close to all facilities. Asking price $264,900. Excellent view.

SALE / LEASE
Over 90% of units occupied in "GTA SQUARE".
Don't miss the opportunity
* Dental Office
* Trophy, Gift stores
* Acupuncture
* Optometrist / optician Office
* Ayurvedic Therapy
* Travel Agency Office
* Cheque - cash in
* Nails
* Many more

Lease Starts from $900 all inclusive Sales starts from $129, 900

5215 Finch Ave. E, #203, Toronto - Tel: 416.321.6969 & 145 Traders Blvd #29, Mississauga - Tel: 905.712.2666

# ‘மன்னிப்பு என்பது ஒருவரை மென்மேலும் குற்றங்கள் செய்யத் தூண்டாது’ சாத்தியமா?

அவதார புருஷராக விளங்கி, உலகத்தவரின் வணக்கத்துக்குரிய இயேசு கிறிஸ்துநாதர் பிறந்த நாளாக-மாதமாக கொண்டாடப்படும் புனித நத்தார் தினம் டிசம்பர் மாதம் 25ஆம் திகதி ஆகும். திரித்துவத்தின் சர்வேஸ்வரன் சுதன் ஆவி என்பதில் சுதனே ஜீஸஸ். பனி பெய்யத் தொடங்கும். முன் பனிக் காலம் இந்த மாதத்திலிருந்து ஆரம்பமாவதால் வெள்ளைக் கிறிஸ்மஸ் ஆக இருக்குமா என்பது பலரும் ஆவலுடன் எதிர்பார்க்கும் ஒன்று. (White Christmas).

விடுமுறை தினங்களான இந்நாட்கள் துருவப் பிரதேசத்திலிருந்து தமக்குப் பரிசுகளைக் கொண்டுவரும் கிறிஸ்மஸ் பப்பா பனிச்சறுக்கு வண்டியில் வருவது சுலபமாக இருக்குமோ என குழந்தைகளும், பிள்ளைகளும் பனி பெய்வதை ஆவலோடு காத்திருப்பர். இந்த நேரத்தில் இயேசு பிரானைக் காட்டிக் கொடுத்தவரான யூதாஸ் என்பவர் பற்றித் தமிழறிஞர் ஈழத்துப் பூராடனார் தமது காவியத்தில் கூறியிருப்பது நினைவுக்கு வருகிறது. காட்டிக் கொடுக்கும் கயவர் கூட்டம் நாளுக்கு நாள் பெருகிக் கொண்டே வருகிறது. அப்படிப்பட்டோரின் மனநிலை என்ன என எம்மால் புரிந்து கொள்ளவும் முடியும். தூற்றுவதா மன்னிப்பதா என விடை காணவும் முடியும். ஈழத்துப் பூராடனார் ‘ஒன்பதாவது வெள்ளிக்காசின் குரல்’ எனும் கட்டுரையில் இயேசு நாதர் சிலுவையில் அறையப் பெற்று உயிர் நீத்ததைக் கண்ட யூதாஸ் இப்படி நடக்குமெனத் தனக்குத் தெரியாது போய்விட்டதே என மனம் வருந்திக் கதறுகிறான்.

“உங்களில் ஒருவன் என்னைக் காட்டிக் கொடுப்பான்” என இயேசுவே, நீங்கள் சொன்னபோது அதை செய்யப் போறவன் நான் தான் எனத் தெரிந்திருந்தும் என்னை ஏன் அரவணைத்தீர்கள்?” என்றே புலம்புகிறான்.

‘செய்தபிழைக்கு அழுங்குபவன் மனம் போல ஒன்று’ என எங்கள் சோமசுந்தரப்புலவர் கன்னியாய் ஊற்றுப்பற்றிப் பாடினாரே அதுபோல யூதாவின் உள்ளம் வேகுகின்றது.

‘வல்லமைமிக்கவர் வரம்தர வல்லவர்
எல்லாம் யேசு என்னும் உண்மை
நல்லாய் பரவும் நாடெல்லாம் என்ற
நப்பாசை கொண்டதும் உண்டல்லோ’
- ஈழத்துப்பூராடனார்

‘பிசாசுகளைத் துரத்த வல்லவரான யேசுபிரான் தீமை செய்வோரையும் மன்னித்து அவர்களுக்கு வேண்டியதைத் தருபவர். தம்மரணத்தையும் வெற்றி கொள்வார் எனும் விசுவாசம் எனக்கு நிறையவே இருந்தது. நான் அவரைக் காட்டிக் கொடுப்பதால் மரணம் விதிக்கப்பட்டாலும் அதனை வெல்லும் ஆற்றல் அவருக்கு உண்டு என்பதை உலகுக்கு காட்டவிரும்பினேன். அதனால் எனக்கு பணத்துக்குப் பணமுமாயிற்று. அவருக்கும் பேரும் புகழும் ஆச்சு என்று சபலத்தால் இதனைச் செய்தேனே தவிர இப்படிச் சிலுவையில் அறைவார்கள் என எண்ண வைக்கவில்லையே’ என மனம்



வருந்திக் கதறுகிறான். பாவம் யூதாஸ். அவனது பணத்தாசை பிறப்பு வழியாக [மரபு அணு (ஜீன்ஸ்)] வந்ததொன்றாகும். அவன் சற்சங்கத்தில் (நல்லோர் கூட்டம்) சேர்ந்திருந்தாலும் மனம் ஒரு குரங்கு தானே. கணநேரச் சபலம் செய்கையைத் தூண்டி விட்டது. அப்பர் சுவாமிகள் சுண்ணாம்புக்காளவாயில் இடப்பட்டார். யானையால் இடறவைத்து கொல்ல விட்டார்கள். கல்லைக்கட்டிக் கடலில் போட்டார்கள். இந்த மரணங்களை எல்லாம் வென்று வந்தாரே என நாம் நினைக்கும் இத்தருணத்தில் யேசு பிரானுக்கும் எத்தகைய மரணத்தையும் வெல்லும் தகைமை உண்டு என யூதாஸும் நினைத்திருப்பானோ!

யேசுவானவர் அவனை மன்னித்தார். நடக்க வேண்டியது அவன் மூலமாக நடந்தது அவ்வளவே. இயேசு கிறிஸ்து நாதரின் மிக முக்கிய போதனையும் ‘மன்னித்தல்’ என்பதே எனக் கொள்ளலாம். இது எத்தனை பேருக்கு சாத்தியம். நாளுக்கு நாள் பொய்யும், புரட்டும், களவும் கூடிக்கொண்டே போகிறது. பாவமன்னிப்புக் கேட்டவுடனே, பழைய பாவம் மன்னிக்கப்பட்டுவிட்டது தானே. இனிப்புதுப்பாவம் செய்வதில் பிழையில்லை எனும் சிந்தனையைத்தான் நாம் காண்கிறோம்.

‘ஐயனே! முருகா, விநாயகா, சிவனே! நான் சில அட்டூழியங்களை இன்னார்பால் செய்து விட்டேன். அதை வெளியே சொல்லிக் கொள்ள வெட்கமாக இருக்கிறது. ஆனால் என் மனச்சாட்சி என்னை உறுத்துகிறது. கடவுளே! நீங்கள் தான் எனக்கு மனச்சாந்தியைத் தரவேண்டும்’ என உருகிநின்று வழிபடுகிறார்கள். அப்போது அங்கே பஞ்சாலாத்தி (கற்பூரதீபம்) காட்டப்படுகிறது. ‘முருகா என் மனம் சாந்தியடைந்து விட்டது’.
பின்னரும் அவர் அதே செய்கைகளைச் செய்கிறார். கறுப்புசந்தையில் கைகூடிவரும் வணிகத்தில் ஒரு பகுதி கோவிலுக்கான மணிக்கூட்டுகோபுரம், பரிவார மூர்த்தி களுக்கான விக்கிரமும் கட்டிடமும் எனக் கட்டிக்கொடுத்து கடவுளர்களையும் தம் வணிகத்தின் பங்காளிகள் ஆக்கிக்கொள்வர்.

எனவே மன்னிப்பு என்பதற்கான புதிய வடிவம் இத்தகையதானதாகவே தற் காலத்தில் நடைபெறுகிறது. ஆலயங்களில் காணிக்கை செலுத்தியும், அன்னதானம் செய்தும், பாவமன்னிப்பு பெற்றும் மனச்சாந்தி அடைய முடியுமே தவிர பத்துக்கட்டளைகளையோ ஒன்பது ஒழுக்க விதிகளையோ உறுதியாகப் பின்பற்றுவது மனித மனத்தினால் முடியாத காரியமாகும்.

மன்னிப்போம் மறப்போம். எதை? மன்னிப்புக் கொடுத்ததையோ அல்லது மன்னிப்புக் கேட்டதையோ! மறப்பது?
ஆயினும் மன்னிப்பு என்பது அகங்கார உணர்வை அழித்தால் மட்டுமே சாத்தியமாகும். இதுவே சகல மதங்களும் சொல்லும் பேருண்மையாகும்.

உனது முதல் வருமானத்தை ஆலயத்துக்கு காணிக்கையாகக் கொடு! என யேசு பிரான் சொல்லியிருக்கிறார்.

**கிறிஸ்மஸ் நல்வாழ்த்துக்கள்**
**எல்லோருக்கும் உரியதாகுக!**




**வள்ளிநாயகி இராமலிங்கம்**


**YOGA - MEDITATION CLASSESS**

**ஆரோக்கிய வாழ்விற்கு வழிகாட்டும் மருத்துவமுறை யோகாசன பயிற்சிகள்**




மூட்டுவலி - முதுகுவலி - ஆஸ்துமா - இரத்த அழுத்தம், நீரிழிவு நோய் - பெண்களின் மாதவிடாய் கோளாறுகள் - உடல் எடை - தொந்தி குறைய மற்றும் மன அழுத்தம் போன்றவற்றிகு நிவாரணம்.



நீரிழிவு, இருதய நோயாளிகளுக்கு
தனிப்பட்ட நேரடி பயிற்சிகள்

**GTA Square Mall இல் புதன்கிழமைகளில் காலை 8:00 மணிக்கு வகுப்பு நடைபெறுகின்றது**

தொடர்புகளுக்கு: ***Scarborough - Markham*** - செல்வ சோதி - ***416.289.2033***



Nantha Aiyadurai, B.Eng.
Real Estate Broker
***Cell: 613 850 9931***

COLDWELL BANKER

கனடாவின் தலைநகர் ஒட்டாவாவில்

**Buying or Selling**


**Relocation Service**
**Ottawa> > > < < < GTA**



**நந்தா ஐயாத்துரை**

***Coldwell Banker Sarazen Realty, Brokerage 2544 Bank St. Ottawa, Ontario K1T 1M9 Office: (613) 288-1999 Fax: (613) 288-1555***

# தமிழர் விழிமணி



நல்லைநகர் ஆறுமுக நாவலரின் மேன்மைகளைச்
சொல்வதெளி தாமோ துயர்போக்கி - கல்விதமிழ்
சைவ ஒழுக்கநெறி தாங்கி வளர்க்கவந்த
தெய்வம் இவர்தாமே தேர்.

அமைவாகத் தங்கள் அதிகாரம் நாட்டி
நமையாள வந்தமேல் நாட்டார் - தமையே
கிறுங்கவைத் திட்ட கிளராற்றல் வீரர்
அறங்காவல் ஐயர் அவர்.

தமிழர் தலைநிமிரத் தன்னேரில் லாத
இமயப் பணிசெய்த ஏகர் - மிகவே
படர்ந்த இருள்போக்கும் பானுவெனத் தோன்றி
நடந்தாரே நல்ல நடை.

கல்வி இலவசமாய்க் கற்பித்த முன்னோடி
நல்லை நகர்தந்த நாவலனார் - சொல்லின்
நவமார் வசனநடை நற்பதிப்புக் கெல்லாம்
அவரே வழிகாட்டி யாம்.

வந்த பதவிகளை வாழ்க்கைத் துணைநலத்தைச்
சொந்தச் சுகத்தைத் துறந்தேதன் - விந்தைப்
பிறப்பைத் தமிழர்க்கே ஈந்தபெரு மானின்
சிறப்புத் தருமத் திறன்.

தந்தை தமதுழைப்பால் தந்த முதுசொத்தைச்
சொந்த மெனக்கொண்டு துய்த்துவரும் - மைந்தர்
மறப்பாரோ நன்றி மறந்தாலும் சொத்தைத்
துறப்பாரோ வாட்டத் துயர்.

சைவத் திருவாளர் சங்கப் பொருளாளர்
தெய்வக் குரலாளர் செந்தமிழர் - உய்யும்
வழிவகைகள் செய்தே வரலாறு காணா
விழிமணியாய் நின்றார் மிக.

கதியாளர் கல்விக் கடலாளர் நல்லைப்
பதியாளர் நல்லபதிப் பாளர் - மதிவாணர்
போற்றுநா வாளர் புதியதமிழ்த் தந்தையினைப்
போற்றுவார் தாழ்வெலாம் போம்.

-2-
செங்கதிரோ சிங்கேறோ செந்தமிழின் நன்கொடையோ
திங்கள்சடைப் பெம்மான் திருவடிவோ - எங்களருங்
கோதிற் குருமணிக்குக் கோடை அடைமழைக்கிங்(கு)
ஏதோ வுரைப்பன் எதிர்.

ஆறுமுகச் சற்குருவை ஆர்வுடனே அர்ச்சித்தால்
நீறில்லா நெற்றியிலும் நீறிலங்கும் - மீறி
தமிழும் தழைத்தோங்கும் தன்மான வாழ்வுத்
தமிழீழ மும்மலருந் தான்.


கவிஞர் வி. கந்தவனம்



## "தமிழ் மக்கள் - நாடு கடந்த அரசியல்"

## நூல் அறிமுக நிகழ்வு

'தமிழ் மக்கள் - நாடு கடந்த அரசியல்' என்ற எனது கட்டுரைத் தொகுப்பு நூல் அறிமுக நிகழ்வு எதிர்வரும் 2012, தை மாதம் 7ஆம் தேதி (சனிக்கிழமை) பிற்பகல் 3.30மணிக்கு ஸ்காபுரோ சிவிக் சென்ரர் மண்டபத்தில் நடைபெற வுள்ளது. இந்நிகழ்வில் தாங்களும் தவறாது கலந்து கொண்டு ஒத்துழைப்பும், ஆதரவும் தருமாறு தோழமையுடன் வேண்டுகின்றேன்.




ந. முரளிதரன்
Tel.: **647-237-3619**


NetTek
Training & Solutions Inc

WORRIED about..
No Jobs? Laid Off? EI Ran Out? Part-time?

"You May Qualify for **Second Career**
Free Funding up to $28,000"

Change Your Career! **By Second Career!!**



SECOND CAREER
FREE FUNDING
For Eligible Clients*

UNEMPLOYED?
* Laid off after 2005 or Working less than 20 Hours
MATERNITY BENEFIT?
(Received clients within 5 years)
* Tuition/Books/Living/Daycare/Transportation Expenses
ALL FREE

Continue SERVING THE COMMUNITY FOR 14 YEARS

CAREER DIPLOMAS
* BUSINESS ADMINISTRATION
* COMPUTERIZED ACCOUNTING
* NETWORK MANAGEMENT

JOBS READY
- Bank Teller
- Accounts Clerk
- Documentation Clerk
- Administrative Clerk
- Bookkeeper
- Help Desk Support
- Technical Support Analyst
- Inventory Clerk
- Hardware Installation
- and More...

416-431-4545

TORONTO CAMPUS
(Markham Rd./Lawrence Ave.)
868 Markham Road #104,
Scarborough, ON, M1H 2Y2

MARKHAM CAMPUS
(Markham Rd./Denison Rd.)
20 New Delhi Road #97
Markham, ON, L3S 0B5
OPENING SOON

nettek-training@rogers.com www.nettek-training.com

PRIVATE CAREER COLLEGE
(Registered as a Private Career College under the Private Career Colleges Act, 2005)

New Career Will Change Your Future!

# மரண சாசன பத்திரம் எழுதாது மரணித்தால்...... முடிவு என்ன?

## கனடிய தகவல் தொடர் 162

***DEATH WITHOUT LAST WILL & TESTAMENT***

கடந்த ஆகஸ்ட் 18, 2011.
நடுவயதில் மரணித்த அந்த மனிதனின் மரண செய்தி! அவரை அறிந்தவர்கள் யாவரையும் ஒரு கணம் அதிர்ச்சியில் ஆழ்த்தியிருந்தது. அவரில் ஏனையோரை கவர்ந்து இழுக்கும் மனிதாபிமானங்கள் நிறைந்த சுபாவங்கள், அதனை வெளிகொணரும் தோற்றம் காணப்பட்டது.

நல்லதொரு பொறுப்பான குடும்ப தலைவன், பழகியவர்களுக்கு நல்ல நண்பன், கனடா வாழ்வில் வழிகாட்டும் வாய்ப்புக்கள், சந்தர்ப்பங்கள், யாவற்றினையும் முறையாக பயன்படுத்தி, நேரிய வழியில் தமது வர்த்தகத்தினை முன் எடுத்து சென்று, தமது சிந்தனையாலும் திட்டமிட்ட செயல்பாடு களினாலும் செல்வம் பெருகும் வாழ்வின் உன்னத நிலைமைக்கு சென்று கொண்டிருந்த ஒரு நல்ல ஆத்மா. தொழில் செய்த இடத்தில் விபத்தின் போது அவரின் வாழ்வும் முடிந்துவிட்டது.

என்னைப் பொறுத்த வரையில் அவர், அவரது சகோதரர்கள்! குடும்பத்தவர்கள் யாவருக்கும் பலவருட காலமாக இருந்து வரும் ஆயுள் காப்புறுதி முகவர்! என்ற வியாபார உறவில் பின்பு தொடங்கி என்றும் பிரிக்கமுடியாத இனியதொரு குடும்ப நட்பாகவே தொடர்ந்தது...

சரி! அவரது மரண சடங்குகளும் துயரங்களுடன் முடிந்துவிட்டது. அந்த துயரங்களுக்கு சிறு நிவாரணமாக ஆயுள் காப்புறுதியும் கை கொடுத்து துயரங்களுடன் அவரது குடும்பத்தவர்களின் வாழ்வும் தொடர்கின்றது.

தமது குடும்பத்தவர்களின் தொடர் வாழ்விற்காக திட்டமிட்டு கனடா வாழ்வில் தமது வளங்களை வளர்த்த அந்த மனிதன் செய்திருக்க வேண்டிய அந்த சிறு வேலையினை செய்து வைக்காமல் மரணித்திருந்தது, அவரது மரணத்தின் பின்பு வாழ்வினை தொடரும் அவரது குடும்பத்தவர்களின் வாழ்வில் மெல்ல மெல்ல துயரம் கலந்த அந்த வேதனையிலும் உதைக்கத் தொடங்கியது.

- மிகப் பெரிய அவரது சொந்த குடியிருப்பு மனை அவரது பெயரில் மட்டும் இருந்தது.
- இன்னொரு வீடு! அதுவும் அவரது பெயரில் மட்டும் இருந்தது.
- இன்னொரு நகரில் வாங்கிய நிலம், வாகனங்கள், வங்கி கணக்கு யாவும் அவரது பெயரில் மட்டுமே இருந்திருந்தது.

ஆனால்!
'மரண சாசன பத்திரம்' (Last will & Testament) என்ற ஒரு பத்திரத்தினை தம் வாழ்வின் முடிவின் பின்பு குடும்பத்தவர் களுக்கு போக வேண்டிய தமது சொத்துக்கள், உடமைகள் சட்டரீதியாக போய் சேர்வதற்கு உருவாக்கி வைக்க தவறியது. முடிவு என்ன?
கனடாவின் நீதிமன்றத்தினால் நியமிக்கப் படும் நிர்வாகியினால் (Court Appointed Administrator) அவரது உடமைகள் யாவும் பொறுப்பெடுத்து பரீசிலிக்கப்பட்டு கனடாவில் அவரால் செலுத்தப்படாத கொடுப்பனவுகள் எவையேதுமிருந்தால் அவையாவும் கொடுத்து தீர்க்கப்பட்டு மிகுதி யாவும் கணவன்/மனைவி, பிள்ளைகள், சிலநேரங்க ளில் வேறு எவராவது சட்டரீதியான உறவுகள் என இருந்தால் அவர்கள் யாவருக்கும் சமமாக பகிர்ந்து அவர்களின் பெயரில் நீதிமன்ற ஒழுங்கு முறைப்படி மாற்றம் செய்யப்படும். சட்டரீதியாக மாற்றம் செய்யப்பட்டாலும் பிள்ளைகள் பதினெட்டு வயது வரும் வரை அதனை அவர்கள் விற்பனை செய்யவும் முடியாது.

இவை யாவற்றுக்கும் செலவழிக்கும்
- நீதிமன்ற செலவுகள் (Court Probation Fees)
- வக்கீல் செலவுகள் (Lawyer Fees)

அவற்றுடன் சேர்ந்த அலைச்சல், மன உளைச்சல். இது தேவைதானா?

இங்கு படித்துக்கொண்ட பாடம் என்ன?
'மரண சாசன பத்திரம்' என்ற கல்லறையில் தூங்கி கொண்டும் வழி நடத்தக்கூடிய சட்டரீதியான ஆவணத்தினை முன்கூட்டியே செய்து வைக்க தவறியமையே ஆகும்!

சரி! இனி விடயத்திற்கு வருவோம்!

இந்த மரணசாசன பத்திரம் (Last will & Testament) என்றால் என்ன?

எங்கள் மரணத்தின் பின்பு எங்கள் பெயரில் உள்ள வங்கிக்கணக்குகள், வீடு, சொத்து கள் யாவும் எவர் எவருக்கு முழுவதுமாகவோ அல்லது விகிதாசார அடிப்படையிலேயோ பகிர்ந்து வழங்கப்படல் வேண்டும் என உயிரோடு தானாக சிந்தித்து முடிவு எடுக்கும் நிலையில் இருக்கும் போதே எழுதி வைக்கும் சட்டரீதியான ஆவணம் ஆகும்.

- பிள்ளைகள் பதினெட்டு வயதிற்கு குறைந்தவர்களாக இருந்தால் (Minor Age Children) அதற்காக ஒரு நம்பிக்கையான பொறுப்பாளரை (Guardian) இவ் ஆவணத்தில் குறிப்பிடுவதுடன் இவற்றினை




சரியான முறையில் நிறைவேற்றி வைப்பதற்கு என ஒரு நிர்வாகியினை (Appoint some one you trust to administer your estate) முற்கூட்டியே நியமித்து வைக்கலாம். அனேகமாக பாரிய சொத்துகளுக்கு சொந்தமாக இருப்பவர்கள் தங்களின் நம்பிக்கைக்குரிய பிரபல்யமான சட்டநிறுவனங்களை ஆவணத்தில் குறிப்பிடுவது வழமையாகும்.

- எழுதி வைக்கப்பட்ட இவ் இறுதி ஆவணத்தில் ஏதாவது மாற்றங்கள் செய்ய வேண்டுமாயின் காலத்திற்கு காலம் தாங்கள் உயிரோடு இருக்கும் போதே மாற்றம் செய்து கொள்ளும் உரிமை தாராளமாக அவரவருக்கு உண்டு.

- கணவன், மனைவி கூட்டாகவும் இவ் ஆவணம் தயாரித்து வைத்திருக்கலாம். ஆனால் திருத்தமும் கூட்டாகவே செய்து கொள்ள வேண்டும். ஒருவரின் மரணத்தின் பின்பு மற்றவர் அதில் திருத்தங்கள், மாற்றங்கள் செய்ய முடியாது. எதற்கும் தனித்தனி ஆவணம் சிறந்தது.

- தம்பதிகளுக்கிடையே விவாகரத்து சட்ட ரீதியாக ஏற்பட்டால், எழுதி வைக்கப்பட்ட இம் மரணசாசனபத்திரம் கனடாவில் சில இடங்களில் காலாவதியாகியும் போகலாம். (Revoke Previous will ) காலவதியாகாமல் போகாமலும் இருக்கலாம். (Not Revoke Previous will)

ஏனெனில் கனடாவில் மாகாணத்திற்கு மாகாணம், நகர சபைக்கு நகர சபை சட்டங்களில் வெவ்வேறு வரைவிலக்கணம் உண்டு. அப்படி ஆவணத்தினை ரத்து செய்து புதிய ஆவணத்தினை உருவாக்கிக் கொள்வதே சாலச்சிறந்தது என கனடாவின் சட்ட ஆய்வாளர்கள் குறிப்பிடுவார்கள்.

- ஆயுள் காப்புறுதி ஒப்பந்தங்களிலிருந்து பணத்தினைப்பெற உரித்துடையவர் (Beneficiary) எவர் என அந்த ஒப்பந்தத்தில் குறிப்பிட்டுள்ளதோ அவர் மட்டுமே அதிலிருந்து பணத்தினை பெறலாம். மரணச-ாசன பத்திரத்தில் வேறு ஒருவருடைய பெயர் குறிப்பிடப்பட்டிருந்தால் அவர் எனது பெயர் மரணசாசன பத்திரத்தில் குறிப்பிட்டுள்ளதால் ஆயுள் காப்புறுதிப் பணம் தனக்கு கிடைக்க வேண்டும் என வாதாட முடியாது. அதே மாதிரியே சில ஓய்வூதிய திட்டங்களிலும் மரணத்தின் பின்பு எவர் பெயர் பணத்தினைப் பெற உரித்துடையவரென அந்த ஒப்பந்தத் தில் குறிப்பிட்டுள்ளதோ அவர் மட்டுமே பெற உரித்துடையவர். ஒப்பந்தத்தை விரும்பினால் உயிரோடு இருக்கும் போதே மாற்றம் செய்யலாம்.

- சிலர் தங்கள் மரண சடங்குகள் எப்படி செய்ய வேண்டும் என்பதனையும் இவ் ஆவணத்தில் குறிப்பிட்டு வைப்பது உண்டு. இதே நேரம் சில தேவையற்ற நிபந்தனை-களை இங்கு குறிப்பிட முடியாது எனவும் பல இடங்களில் கனடாவின் சட்ட ஆய்வாளர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

- இவ் ஆவணத்தினை அவரவர் தாமாகவும் உருவாக்கி வைக்கலாம். ஆனால் வக்கீலின் உதவியுடன் சட்டரீதியான வார்த்தைகள், வசனங்களை குறிப்பிட்டு (Legal Words & Phrases) அவர்களின் சாட்சிகள், கையொப்பங்களுடன் உருவாக்கி வைப்பது வலிமையானதாகவிருக்கும்.

**சொத்துக்களில் கூட்டாக உரிமை இருந்தால்** (Jointly Owned) **இந்த 'மரண சாசன பத்திரம்' தேவையா?**

குடியிருக்கும் வீடு, வங்கி கணக்குகள் யாவும் கணவன், மனைவி, இருவருக்கும் சேர்ந்து கூட்டாக இருந்தால் ஒருவரின் மரணத்தின் பின்பு அடுத்தவருக்கு உரிமை என்பது பிரச்சினையில்லாது மாற்றப்படும்.

இந்த நிலைமையில் இருப்பவர்களுக்கு மரண சாசன பத்திரம் பெரிதாகத் தேவைப்படாது. ஆனால் மரணமாகியவர் பெயரில் உள்ள வாகனம், ஒரு காசோலை இவற்றை மாற்றம் செய்ய போகும் இடத்தில் கேட்கப்படும் முதல் கேள்வி!

Do You Have a Will?

(அதாவது மரணசாசன பத்திரம் இருக்கின்றதா? என்ற மெதுவான ஆங்கில வசனம்? அதுவும் இல்லையெனில்
'I am very Sorry' பணிவான பதிலாக வரும். இது பலராலும் கனடாவில் எதிர்கொண்ட அனுபவமாகும்.

இறுதியான முடிவு!
இதுவரை இவ் ஆவணம் தயாரித்து வைக்கவில்லையானால் உடனடியாக செய்து வையுங்கள். நாளை என்பது நன்றன்று. இன்றே, இப்பொழுதே. எவரும் சிரஞ்சீவிகள் அல்ல.




சிவ. பஞ்சலிங்கம் B.Com.,
(Licensed Insurance Broker)
காப்புறுதி சம்பந்தமான ஆலோசனைகளுக்கு:
416.321.0999





சந்திரமௌலீஸ்வர சிவாலயம்
தினமும் ஆறுகால பூஜைகள் நடைபெறும்
ஆலயம் திறந்திருக்கும் நேரம்
வெள்ளி, சனி, ஞாயிறு மற்றும் விசேட தினங்களில் காலை 7am - மாலை 9pm வரை
திங்கள் - வியாழன் - காலை 7am - 2pm மாலை 5pm - 9pm
விசேட தினங்களில் பூஜை நேரங்களில் மாற்றங்கள் ஏற்படலாம்.
ஆலயத்தை அழைத்து பூஜை நேரங்களை நிச்சயப்படுத்திக் கொள்ளுங்கள்
Tel: 416 . 754 . 7338 / 416 .724 .7480
3011 Markham Road , Unit 62 & 63 (North of McNicoll Ave.), Scarborough

# கடன் தொல்லையினால் வருந்துகிறீர்களா ?
# GET OUT OF DEBT WITHOUT BANKRUPTCY
# வங்குரோத்துக்கு செல்லாமல் கடன்களிலிருந்து விடுதலை
# GET OUT OF YOUR DEBT SYNDROMME

WE Settle your debts without bankruptcy



We Work for you, Trusty work for your creditors

உங்கள் அனைத்து கடன்களில்லிருந்தும் 80% வரையிலான கழிவை பெறுவதற்கும்

உங்கள் வீடு, வாகனம், மற்றும் சொத்துக்கள் அனைத்தும் சட்டமுறையில் பாதுகாப்பதற்கும்

கடன் கொடுத்தோரின் தொலைபேசி மிரட்டல்களையும், கடன் வட்டிகளை நிறுத்துவதற்கும்

மாதாந்தம் உங்கள் வருமானத்தில் இருந்து ஒரு பகுதியை கடன்காரர்கள் வசூலிப்பதை நிறுத்துவதற்கும்

ஓர் சிறிய மாதாந்தகட்டணத்தினூடாக எல்லா கடன்களையும் தீர்க்கும் வசதி செய்வதற்கும்

சகல கடன் பிரச்சனைகளிலிருந்து தீர்வுகாண சிறந்த நிபுணத்துவ வழிமுறைகளுக்கும்

உங்கள் மாதாந்த வருமானம் அரசாங்க அட்டவனைக்குட்பட்டிருந்தால்
இலவச ஆலோசனைகளையும், இலவச சேவைகளையும் பெறுவீர்கள்.................

## ARE YOU CONCERNED ABOUT YOUR DEBTS ? ABOUT YOUR HOUSE HOLD DEBTS ?

உங்கள் இறுதி முடிவை எடுக்கும் முன்னர் ஒரு தடவை எங்களை அழையுங்கள்

## இத்துறையில் பல வருட அனுபவமிக்க ARU KRISH ஜை

## இன்றே அழையுங்கள்

இலவச ஆலோசனைகளுக்கு

# (416) 556-9287

PEACE OF MIND
CREDIT REVOLVING CENTRE

**Credit Revolving Center**
**(GTA Square )**
5215 Finch Ave.E, Suite #223, Scarborough, ON M1S0C2

# அரசியல் தீர்வுக்கான...

04ஆம் பக்கத்தொடர்ச்சி

ஆனால் காணி, பொலிஸ் அதிகாரம், வடக்கு கிழக்கு இணைப்பு ஆகிய மூன்று விடயங்களுமே நாட்டின் தேசிய பாதுகாப்புடன் சம்பந்தப்பட்ட விடயம் என்றும், எனவே, இதில் எந்தவிதமான விட்டுக்கொடுப்பையும் செய்ய முடியாது என்றும் அரசாங்கத் தரப்பினர் கூறுகின்றனர். அரசாங்கத்துடனான பேச்சுவார்த்தைகளில் தமிழ்த்தேசிய கூட்டமைப்பினர் நிறைவேற்ற முடியாத விடயங்களைக் கேட்கின்றார்கள் என்றும், விடுதலைப்புலிகள் கேட்ட வற்றையே இவர்களும் கேட்கின்றார்கள் என்றும் அரசாங்கத்தரப்பினர் இதற்கு முன்னதாகத், தெரிவித்து அவற்றைக் கொடுக்க முடியாது என்று பேச்சுவார்த்தை அரங்கிற்கு வெளியில் கூறியிருந்தார்கள். அவ்வாறே இப்போதும் கூறி வருகின்றார்கள்.

டிசம்பர் 6 ஆம் திகதிய பேச்சுவார்த்தைகள் குறித்து தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் தலைவரும், பேச்சுவார்த்தை குழுவிற்குத் தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் சார்பில் தலைமையேற்றிருப்பவருமாகிய ஆர். சம்பந்தன் கருத்து தெரிவிக்கையில், காணி, பொலிஸ் அதிகாரங்கள் மற்றும் வடக்கு கிழக்கு இணைப்பு ஆகிய மூன்று விடயங்கள் பேசப்பட்டதாகவும், இவற்றில் அரசாங்கத் தரப்பினர் மாற்று கருத்துக்களைக் கொண்டிருப்பதாகவும், எனினும் அடுத்த சுற்றுப் பேச்சுக்களின் போது இது குறித்து விவாதிக்கப்படும் என்றும் கூறியுள்ளார்.

இந்த 3 கோரிக்கைகள் தொடர்பாக செய்தியாளர்களிடம் கருத்து வெளியிட்ட அமைச்சரவை முடிவுகளை வெளியிடும் அரசாங்க பேச்சாளரும், அமைச்சருமாகிய கெஹெலிய ரம்புக்வெல்ல நிறைவேற்ற முடியாத விடயங்களைத் தமிழ்த்தேசிய



கூட்டமைப்பினர் கோருவதாகவும், இவற்றை விட தமிழ் மக்களுக்கு எத்தனையோ விடயங்கள் இருக்கின்றன என்றும் அவை குறித்து கூட்டமைப்பினர் பேச்சுக்களை நடத்த வேண்டும் என்றும் குறிப்பிட்டிருக் கின்றார். அத்துடன் நிறைவேற்ற முடியாத விடயங்களில் தொங்கிக் கொண்டிருப்பதை கூட்டமைப்பினர் கைவிட்டு பேச்சுக்களில் பங்கு பற்ற வேண்டும் எனவும் அவர் கூறியுள்ளார்.

இது கால வரையிலும் நடைபெற்ற பேச்சுவார்த்தைகளைப் பார்ப்போமானால், இனப்பிரச்சினைக்குத் தீர்வாக அதிகாரங் களைப் பகிர்ந்தளிக்கும் வகையில் மாவட்ட சபைகள் கொண்டு வரப்பட்டன. அதன் பின்னர் மாகாண சபைகள் கொண்டு வரப்பட்டன. இந்த இரண்டு சபைகளையுமே தமிழர் தரப்பு ஏற்றுக்கொள்ளவில்லை. ஆயினும் இவற்றை நாடு முழுதுக்கும் அரசாங்கம் நடைமுறைப்படுத்தியது. இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்காகக் கொண்டு வரப்பட்ட மாகாணசபைகள் வடக்கு கிழக்கு மாகாணத்தைத் தவிர ஏனைய அனைத்து மாகாணங்களிலும் நடைமுறைப் படுத்தப்பட்டு வந்தது. வடக்கும் கிழக்கும் நீதிமன்ற உத்தரவு ஒன்றின் ஊடாகப் பிரிக்கப்பட்ட நிலையில், யுத்தம் முடிவடைந்ததன் பின்னர், கிழக்கு மாகாணம் செயற்பட்டு வருகின்றது. வட மாகாணத்திற்கு இன்னும் தேர்தல் நடத்தப்படவில்லை.

தமிழ் மக்கள் சமஸ்டி முறையிலான ஓர் அரசியல் தீர்வு வேண்டும் என விரும்பினார்கள். சுயநிர்ணய உரிமையின் அடிப்படையிலான அதிகாரப் பரவலாக்கலையே கோரி வருகின்றனர். இந்தக் கோரிக்கையை அரசாங்கம் உரிய முறையில் பரிசீலிக்கவும் இல்லை. அதற்குரிய தீர்வு ஒன்றை முன்வைக்கவும் இல்லை. இந்த நிலையிலேயே தனிநாட்டு கோரிக்கை வலுப்பெற்றது. விடுதலைப் புலிகளும் அதனை நோக்கிய ஆயுதப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர். இருப்பினும் 13 ஆவது அரசியலமைப்பு சட்டத்தின் கீழ் கொண்டு வரப்பட்ட மாகாணசபைகளை அவர்கள் முற்றாக நிராகரித்திருந்தார்கள். ஆயினும் 2002 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் நோர்வே அரசின் அனுசரணையுடன் மேற்கொள்ளப்பட்ட போர் நிறுத்த ஒப்பந்தத்தின் அடிப்படையில் இடம்பெற்ற பேச்சுவார்த்தைகளின்போது, சமஸ்டி முறையிலான ஓர் அதிகாரப் பகிர்வுக்கு அவர்கள் ஓரளவுக்கு உடன்பட்டிருந்தார்கள்.

இந்த நிலையில் தமிழ்த்தேசிய கூட்டமைப்பினர் தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகளை வென்றெடுப்பதற்காக முன்வைக்கப்பட்ட வலுவான கோரிக்கை களில் மிகவும் கீழிறங்கி வந்துள்ளார்கள். யுத்தம் காரணமாக ஏற்பட்ட பேரிழப்பைக் கருத்திற்கொண்டும், தமிழ் மக்கள் யுத்தம் காரணமாக அனுபவித்துள்ள துன்பங்கள், கஸ்டங்கள் என்பவற்றில் இருந்து மீளும் வகையில் அவர்களது அழிந்து போயுள்ள வாழ்க்கையை மீண்டும் கட்டியெழுப்புவதற்கான முழு முயற்சியில் ஈடுபட வேண்டும் என்பதற்காக, அரசியல் தீர்வு விடயத்தில் விட்டுக்கொடுத்துச் செயற்படுவதற்கு முன்வந்திருக்கின்றனர்.

இந்த நிலையில் அவர்கள் நிறைவேற்ற முடியாதவற்றைக் கேட்கின்றார்கள், விடுதலைப்புலிகளைப் போன்று நிபந்தனை-களை முன்வைக்கின்றார்கள் என்று நொண்டிச் சாட்டுக்களை அரசாங்கம் கூறிக் கொண்டிருக்கின்றது. இதயசுத்தியோடு அரசாங்கம் பேச்சுவார்த்தைகளில் ஈடுபடுமாக இருந்தால், தமிழ்த்தேசிய கூட்டமைப்பினருடன் நன்றாகக் கலந்துரையாடி, இனப்பிரச்சினைக்கு ஓர் உகந்த அரசியல் தீர்வைக் காண முடியும். அதற்கு எதிரணியினரின் நிலைப்பாடுகளை நன்குணர்ந்து விட்டுக்கொடுப்புடனும், மனிதாபிமான ரீதியிலும், பல்லின சமூகங்களைக் கொண்ட இலங்கை நாட்டின் எதிர்கால நன்மையைக் கருத்திற்கொண்டு, உண்மையான தேசிய பற்றுடன் பேச்சுக்களில் ஈடுபட வேண்டும். பிரச்சினைகளுக்குத் தீர்வு காண வேண்டும்.

யாராலும் வெற்றி கொள்ள முடியாது எனக் கூறப்பட்ட விடுதலைப்புலிகளுக்கு எதிரான யுத்தத்தில் நாங்கள் வெற்றிபெற்றுவிட்டோம். உலக வல்லரசுகளினால்கூட, சாத்திய மில்லாமல் போன பயங்கரவாதத்திற்கு நாங்கள் முடிவு கட்டிவிட்டோம். எங்களை விட சிறந்த உலகத்தில் எங்குமே கிடையாது என்ற வெற்றிச் செருக்கில் அரசாங்கம் செயற்படுமேயானால், அது ஒரு போதும் நாட்டிற்கு நன்மை தரப்போவதில்லை.

யுத்த மோதல்கள் முடிந்துவிட்டால் - இராணுவ ரீதியான ஆயுதத் தாக்குதல்கள் ஒரு நாட்டில் இல்லையென்றால், அங்கு உண்மையான அமைதி நிலவுகின்றது என்று அர்த்தமல்ல. அத்துடன் அத்தகைய ஒரு நாட்டில் அமைதியும் சமாதானமும் ஏற்பட்டுவிட்டது என்று கூறவும் முடியாது. யுத்தம் முடிந்துபோனாலும், நீறு பூத்த நெருப்பாக தீர்க்கப்படாத பிரச்சினைகள் தீர்க்கப்படாமல் இருக்குமானால், அதன் பின் விளைவுகள் நன்மை தரத்தக்கனவாக இருக்கமாட்டாது. இதனை இலங்கை அரசு புரிந்து கொண்டு இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வைக் காண்பதற்கு முன்வர வேண்டும். அவ்வாறு அது முன்வருமா என்பதை உறுதியாகக் கூற முடியாத நிலைமையே நாட்டில் காணப்படுகின்றது.

Ontario Vegetarian Food Bank

Employment Training & Skills Resource Centre

Certified Food Handlers

Ontario Vegetarian Food Bank works in partnership with the City of Toronto Public Health Fully Accredited Agency to provide Food Handlers Certification Program. Our Certification Training Program is valid throughout Ontario and meets all mandatory Provincial Food Safety Training requirements. This means that our Food Handler Certificate is recognized by all health units throughout Ontario.



Food Handler Training available for:
PSW's, Food service Workers, ECE /ECA Workers, Day Care Providers, Dietary Aides, Cooks, , Home Care Workers, Nannies, Restaurateurs.
*Financial assistance may be available to those who qualify

CALL TO REGISTER:
(416) 744 (HELP) 4357

Winter Food and Fund Drive
"No One Should Go Hungry"
Started from Nov.15, 2010 Mar.15, 2011

HELP US TO HELP THE HELPLESS!

North York: 3005 Islington Ave. (Islington / Steeles)
Scarborough: B5 - 2370 Midland Ave (Midland / Sheppard)

விளம்பரம் பத்திரிகையை இணையத் தளத்தில் வாசிப்பதற்கு
www.vlambaram.com

# தவறான பாராட்டுதல்கள்

## ஓடும் நீர் உறைவதில்லை 134

இந்த உலகில் வாழும் ஒவ்வொரு மனிதனும் பல்வேறுவகையான எதிர்பார்ப்புக்களூடாகத் தமது வாழ்க்கையை நகர்த்திச் செல்கின்றான். ஒவ்வொரு மனிதனதும் எதிர்பார்ப்புக்களும் ஏக்கங்களும் அவரவர் எவ்வாறு தமது வாழ்க்கையை அமைத்துக் கொள்ள விரும்புகிறார்கள் என்பதைப் பொறுத்து வேறுபடுகின்றது. இவ்வாறு வேறுபட்ட எதிர்பார்ப்புக்கள், ஏக்கங்கள் அவரவரது வாழ்க்கையில் சாதகமான, பாதகமான மாற்றங்களை உருவாக்குகின்றன. இந்த மாற்றங்களின் விளைவே அவரவரது வாழ்வின் இலட்சியப் பாதைகளை உருவாக்கின்றது.

வாழ்க்கை என்பது வாழ்வதற்குத்தான் என்பதை நாம் அனைவரும் அறிந்திருக்கின்றோம். வாழும்போது எவ்வாறு வாழ வேண்டும் என்பது பற்றிய பல்வேறு வழிகாட்டல்கள், போதனைகள், பயிற்சிப் பட்டறைகள் எனப் பலவற்றின் செல்வாக்குகள் எமது வாழ்வியல் நிலையை முன்னோக்கி நகர்த்துவதற்கு வழிவகுக்கின்றன. அவரவர் தேவைக்கு ஏற்ப முன்கூட்டியே தீர்மானிக்கப்பட்ட ஒரு நிலையை அடைவதற்கு நாளாந்தம் நாம் முயற்சித்துக் கொண்டிருக்கிறோம். இவ்வாறு நாம் முயற்சிக்கும் விடயங்கள் பற்றிய தீர்மானங்களின் கர்த்தாக்கள் நாமாக இருப்பதற்கும் மற்றவர்களாக இருப்பதற்கும் இடையில் பெரிய வேறுபாடு உண்டு. ஓர் இலக்கை அடைவதற்கான தீர்மானத்தை நாம் உறுதிப்படுத்துவதற்கு முன்னர் அந்தத் தீர்மானத்திற்குத் தேவையான முக்கிய விடயங்களை சேகரிப்பதும் அவ்வாறு சேகரித்த விடயங்களின் மூலம் (Source) உண்மையில் நம்பிக்கைக்குரியவனா என்பதைத் தெளிவு படுத்துவதும், தெளிவுபடுத்திய பின்னர் அந்த விடயங்களை நாமாக ஆய்வு செய்து அதன் சாதகமான, பாதகமான தாக்கங்களை உணர்ந்து கொள்வதும் மிக அவசியமாகின்றன.

நமது நாளாந்த செயற்பாடுகள் இரண்டு வகையான காரணிகளின் தாக்கத்தால் நிகழ்கின்றன. மனிதர் எவரும் முழுமையானவராக வாழ்ந்ததாக வரலாறு இல்லை. இனிமேலும் ஒருவராவது முழுமையானவராக உருவாகப் போவதுமில்லை. இது உறுதியாகக் கூறப்பட வேண்டியது. ஒவ்வொரு மனிதனும் தமது வாழ்க்கையை நகர்த்திச் செல்லும்போது சில தவறுகள் அறியாமல் இடம் பெறுகின்றன. சில தவறுகள் அறிந்தும் மேற்கொள்ளப்படுகின்றன. வாழ்வியல் கல்வி என்பது அனுபவப்பாடத்தால் போதிக்கப்படுவதே. இதனால்தான் ஒவ்வொருவரது அனுபவக் கல்வியும் அவரவர் மனோபாவத்திற்கும் எதிர்பார்ப்புக்கும் ஏற்றவாறு வேறுபடுகின்றது. இதற்கு நாளாந்த செயற்பாடுகளில் செல்வாக்குச் செலுத்தும் இரு வகையான புத்திகள்தான் அடிப்படையாகின்றன.



எம்மை வழிப்படுத்தும் இந்த இரு புத்திகள் சொற்புத்தியும் சுயபுத்தியுமாகும். நமது வாழ்க்கையின் ஆரம்பகாலங்களில், அனுபவ அறிவு என்பது அறவே அற்ற காலப்பகுதிகளில் நமது செயற்பாடுகள் அனைத்தும் சொற்புத்தியின் அடிப்படையிலேயே அமைகின்றன. குழந்தைகளாக இருக்கும்போது ஒவ்வொரு நடவடிக்கையும், உணவு உண்பது முதல் மற்றவர்களது கட்டளைகள் அல்லது வேண்டுகோள்கள், வழிப்படுத்தல்கள் மூலமாகத்தான் இடம் பெறுகின்றன. அதாவது ஒவ்வொரு புதிய நடவடிக்கையும் மற்றவர்களது தகவல்களை அடிப்படையாகக் கொண்டு இடம்பெறுகிறது. இவ்வாறு மற்றவர்களது முழுமையான நெறிப்படுத்தல் மூலம் எமது வாழ்க்கையை வாழ்க்கையின் ஆரம்ப காலங்களில் நாம் நகர்த்த வேண்டியுள்ளது. அதாவது சொற்புத்தியே மிக முக்கியமான காரணியாக அமைவது தவிர்க்க முடியாததாகின்றது.

ஆனால் சொற்புத்தியின் மூலம் நமது வாழ்க்கையை நாம் நகர்த்திச் செல்லும் போது பெறுகின்ற அனுபவங்களின் சாதகமான, பாதகமான விளைவுகள் நமது சுயபுத்திக்கு இயல்பாகவே ஒரு பாதையை உருவாக்குவதை நாம் மிகத் தெளிவாக அறிந்து கொள்ளல் வேண்டும். மனிதனது உளவியல் வளர்ச்சியின் ஆரம்பகாலம் மற்றவர்களது செல்வாக்கினாலும், வழிப்படுத்தலாலும் உருவாக்கப்படினும் காலப் போக்கில் படிப்படியாக அனுபவ அறிவின் வெளிப்பாடான சுயபுத்தியின் செல்வாக்கு முன்னெடுக்கப்படுவது அவசியமானதாகும். இங்கு நான் அவசியம் என்று கூறுவதன் நோக்கம் சுயபுத்தியின் செயற்பாட்டு வேகம், அதனை நியாயமான அளவிற்கு முன்னெடுத்துச் செல்ல வேண்டிய காலம் என்பவை கருத்திற் கொள்ளப்படவேண்டும். நடைமுறையில் சொற்புத்தியின் செல்வாக்கிற்கு அதிகளவு ஆட்படுபவர்களது வாழ்க்கைமுறையும், சுயபுத்தியின் செல்வாக்கிற்கு ஆட்படுபவர்களது வாழ்க்கைமுறையும் மிகப்பெரிய வேறுபாட்டைக் கொண்டிருப்பதை நாம் அறியமுடியும். சொற்புத்திக்குப் பழக்கப்பட்டுத் தமது வாழ்வியல் நடவடிக்கைகளை நகர்த்திச் செல்பவர்கள் உருவத்தால் உயர்ந்தவர்களாக இருப்பினும் உள்ளத்தால் அடிமைகளே. இவர்களது ஒவ்வொரு நகர்வுக்கும் மற்றவர்களது வழிப்படுத்தலும் செல்வாக்கும் அவசியமாகின்றது. மற்றவர்களது உந்துதல் இல்லாமல் இவர்களால் எதுவுமே செய்யமுடியாது. இவர்கள் தமது குடும்பம் குழந்தைகள், பொருளாதாரம் போன்ற பெரும்பாலான விடயங்களுக்குப் பிறரது உதவியை யும் அறிவுரைகளையும், வழிகாட்டலையும் மிகப் பெருமளவுக்கு எதிர்பார்ப்பார்கள். இவர்கள் தாமாக இயங்க முடியாதவர்கள். இவர்களைத் தான் நாம் நடைப்பிணங்கள் என்கிறோம்.

இவ்வாறு தன்னறிவு அல்லது சுயபுத்தியால் தம்மை வழிநடத்த முடியாமைக்கான நிலைக்கு இவர்களைத் தள்ளியவர்களில் முக்கியமானவர்கள் அவர்களது பெற்றோர்களே. இங்கு நான் இவ்வாறு உறுதிபடக் கூறுவதற்கான காரணம் என்னவென்னில் குழந்தைகளை அவர்கள் குமரர்கள், குமரிகளான பின்னும் குழந்தைகளாக வளர்க்கும் பெற்றோர்கள் எண்ணில் அடங்காத அளவுக்கு இந்த உலகில் வாழ்கிறார்கள். சுயபுத்தியை வளர்ப்பதற்குப் பதிலாக சொற்புத்தியை மட்டும் பயன்படுத்தி தங்களது மகிழ்ச்சியை மேம்படுத்திக் கொண்டிருக்கும் பெற்றோர்கள்தான் இவர்கள். தாங்கள் கீறிய கோட்டைத் தமது பிள்ளைகள் தாண்டமாட்டார்கள் என்று தம்பட்டம் அடிக்கும் இவர்களுக்கு தாங்கள் கீறிய கோடு எது என்பது கூடத் தெரியாது. இவர்கள் கீறிய அந்தக் கோடு தமது குழந்தைகளின் சுய அறிவு வளர்ச்சியைத் கட்டுப்படுத்துகின்றது என்பதைச் சிறிதளவு கூடச் சிந்திக்கத் தெரியாதவர்கள். இவர்கள் செய்யும் மாபெரும் தவறு என்னவென்னில் தமது குழந்தைகளை உருவத்தால் வளர்ப்பவர்களாக வும் உள்ளத்தால் கட்டுப்படுத்துபவர்களாகவும் செயற்படுகிறோமே என்பதைச் சிறிதளவு கூட உணராமல் இருப்பது தான். இதனால்தான் இவர்களது குழந்தைகள், ஆள் வளர்ந்தும் அறிவு வளராத, ஆனால் ஆறறிவு படைத்த இனத்துக்குள் அடக்கப்படுகிறார்கள்.

ஒருவரது அறிவியல் வளர்ச்சிக்குத் தடையாகவுள்ள காரணிகள் பல. இவற்றுள் மிகவும் பாதிப்பைத் தரக்கூடிய காரணி பெற்றோர்களது மனோபாவம். இந்தப் பெற்றோர்களில் மிகப்பெரும்பான்மையானவர்கள் தமது விருப்பு வெறுப்புக்கேற்ப தமது குழந்தைகளை, அவர்களது உளவளர்ச்சியைக் கட்டுப்படுத்துகிறார்கள். சிலர் அறியாமை காரணமாக இவ்வாறு நடந்து கொள்கிறார்கள். பலர் அறிந்திருந்தும் தமது போலியான கௌரவத்திற்காக தொடர்ந்தும் குழந்தைகளை, அவர்களது தகுதிக்கேற்ற விடயங்களில் ஈடுபடுவதைக் கூடத் தடைசெய்கிறார்கள். இதற்கு அடிப்படைக்காரணம் தமக்குத் தெரிந்தது தான் இறுதியானது அதற்குமேல் எதுவும் இல்லை என்ற அறியாமைதான். அதுமட்டுமல்ல இவர்கள் தமது குழந்தைகளின் வயது வயதிற்கேற்ப வளர்க்கப்பட்டிருக்க வேண்டிய அறிவு, அனுபவம் என்பவற்றை முற்றாக புறக்கணித்துவிட்டு மற்றவர்களது குழந்தைகளை பற்றி குறை கூறுவதும், அவர்களது பெற்றோர்களை ஏளனம் செய்வதுமாகக் காலத்தைக் கழிக்கிறார்கள். இவர்களில் பெரும்பாலானவர்கள் குழந்தைகளது மனோபாவ மாற்றங்களில்

தொடர்ச்சி 30ஆம் பக்கம்

KG Master-kgmaster@rogers.com

அன்பார்ந்த விளம்பரம் வாசகர்களுக்கு: வாழ்வியல் சார்ந்த எனது ஆக்கங்கள் எழுத்து வடிவில் 'விளம்பரம்' பத்திரிகை யிலும் ஒலிவடிவில் கீதவாணி வானொலி யிலும் இடம்பெறுகின்றன. இயலுமானவரை இவற்றை உங்கள் உற்றார், உறவினர், நண்பர்களுடன் பகிர்ந்து கொள்ளுங்கள்.

- நன்றியுடன் KG Master

அமைதியின் குரல் - Words of Peace

அன்பு, அமைதி, ஆனந்தம், கடவுள் எனப் பல பெயர் கொண்டு அழைத்தாலும் விடயம் ஒன்றுதான். நீங்கள் வெளியே தேடும் ஆனந்தமும் நிம்மதியும் உங்களின் உள்ளேதான் உள்ளது. தேடுங்கள். எல்லா இடங்களிலும் தேடுங்கள். கிடைக்கவில்லை என்றால் என்னிடம் வாருங்கள். அதனை நீங்கள் உங்கள் வாழ்வில் அனுபவிப்பதற்கு என்னால் உதவிசெய்ய முடியும். - மஹாராஜி

1-877-707-3221 / தமிழில் - 416.431.5000

- MAHARAJI -

மஹாராஜியின் உரைகள்

On DVD

இலவச DVDக்கு அழையுங்கள்

(416) 431-5000

1 877 707 3221

On TV

Saturdays at 11:00 am

Rogers Cable Channel - 20

Bell Express vu Channel - 219



# ஒவ்வாமை (Allergy) பிறபொருட்களுக்கு உடல்காட்டும் எதிர்விளைவு

## எம்மை நாம் பாதுகாப்பது எப்படி?

ஒவ்வாமை என்பது ஒருவருடைய உடலுக்கு ஒத்துவராத எதிர் விளைவைக் குறிக்கும். இந்நிலை சிலருக்குத்தான் ஏற்படும். இதனால் மற்றவர்களின் உடலுக்குப் பாதிப்பு நிகழாது.

இவ் ஒவ்வாமையானது உள்வெளிக் காரணங்களினால் எமது உடலைத் தாக்குகின்றது. எனவே ஒவ்வாமைக்குரிய காரணங்களைப் பார்ப்போம்.

1. உணவுப் பொருட்கள்
2. நாம் வாழும் சுற்றாடல் சூழ்நிலை
3. நமது உறுப்புக்களில் ஏற்படும் சில வியாதிகள்
4. ஆங்கில மருந்துகள் சில
5. பக்டீரியா, வைரஸ், நுண்கிருமிகள் என்பன

நமது உடம்புக்கு வெளியில் நாம் பாவிக்கும் ஆடைகள், பாதணிகள், நகைகள் போன்ற இன்னும் சில தட்ப வெப்பநிலை மாற்ற மடைவதினாலும் வரலாம். உணவுப் பொருட்களை எடுத்துக்கொண்டால் இதில் பெரும்பாலும் மாமிச உணவுவகை, தாவர மரக்கறிவகைகளும் அடங்கும். இதில் மாமிசத்துடன் மரக்கறி வகைகளையும் பாகம் செய்து உணவுடன் சேர்த்து உண்பதுண்டு. இன்னும் சிலர் மாமிச உணவைத் தவிர்த்து மரக்கறி உணவுகளை பாவித்து வருவதையும் நாம் நன்கு அறிவோம். எவர் எப்படியான உணவுகளை எடுத்தாலும் அவரின் உடல்நிலையில் ஒவ்வாமைத் தன்மை நிகழாமல் இருக்க லாம். ஆனால் சிலவகை உணவு களை சிலர் எடுத்தால் ஒவ்வாமை நிலை ஏற்பட்டு மரணம் ஏற்படும். எனவே ஒருவருக்கு எதுவகை உணவுப் பதார்த்தங்கள் ஒத்துக்கொள்ளவில்லையோ அன்றி விருப்பம் காட்டவில்லையோ அவர்கள் நிச்சயமாக தவிர்ப்பது நன்று. மாமிச உணவுகளில் கறியாக நாம் பாகம் செய்து உண்ணும் இறால், நண்டு, கணவாய், கொய்மீன், கருவாடு, சூடமீன் போன்றவை யும், இறைச்சியில் மாடு, மரை, மான், பன்றி வகையும் சிலருக்கு ஒவ்வாமை நிலை ஏற்பட்டு கஸ்டப்படுபவர்களையும் நாம் நன்கு அறிவோம். எனவே எல்லாருக்கும் எல்லா உணவுகளும் ஒத்துவருவது கடினம்.

அடுத்து மரக்கறிவகை கத்தரிக்காய், தக்காளிப்பழம், பயற்றங்காய், சில பருப்பு, விதை வகை போன்றவை உணவுக்குப் பாவிக்கும் போது ஒவ்வாமை ஏற்பட்டு கஸ்டப்படுவர்களையும் அறிய முடிகின்றது. முட்டை, பால் சேர்த்து தயாரிக்கப்பட்ட உணவுப்பண்டங்களினாலும் ஒருவருக்கு ஒவ்வாமைநிலை ஏற்பட இடமுண்டு. மேலும் வியாபாரக்கடைகளில் விற்பனையாகும் தகரப்பாத்திரத்தில் (ரின்) இடப்பட்ட உணவுப் பொருட்களினாலும் ஒவ்வாமைத் தன்மை ஏற்பட இடம் உண்டு. எனவே எல்லாவற்றுக்கும் பாவனைக்குரிய முடிவு திகதிகளைப் பார்வையிட்டு எடுத்தல் வேண்டும்.



அடுத்து பழவர்க்கத்தில் ஒரு சிலருக்கு அன்னாசி, கொய்யாப்பழம் ஒத்து வருவதில்லை. இருந்தும் மற்றப் பழ வர்க்கத்திலும் சில, சிலருக்கு ஒத்துவராததி னால் விருப்பம் வருவதில்லை. எனவே தங்கள் நிலையை தாங்களே நன்கு உணர்ந்து கைக்கொள்வது சாலச்சிறந்தது.
அடுத்து நாம் வாழும் சுற்றாடல் சூழ்நிலையைப் பார்த்தால் இதனாலும் நமது உடம்புக்கு ஒவ்வாமை நிலை ஏற்பட்டு கஸ்டப்படுபவர்களும் இருக்கின்றனர். சுத்தமற்ற சுவாசக்காற்று உள் இழுப்பதி னால் நுரையீரல் (சுவாசப்பை) ஒவ்வாமைத் தன்மையால் தாக்கப்பட்டு கஸ்டப்படுபவர் களும் இருக்கின்றனர். சூடான காற்றுள்ள இடங்களைத் தவிர்க்க வேண்டும். புகை, ஏன் சில மகரந்தங்களினா லும் ஒவ்வாமை நிலை ஏற்பட இடம் உண்டு. பட்சிகளின் இறகில் உள்ள பாகங்களினாலும் சுவாசத்தின் மூலம் சென்று ஒவ்வாமையை ஏற்படுத்தலாம். எனவே இதனைப் பராமரிப்பவர்கள் நல்ல கவசங்களைப் பாதுகாப்பிற்கு போட்டுக் கொள்வது மிகநன்று. தூசியில் உள்ள எதிர்புரதப் பொருள் மூக்கின் வழியால் உள்சென்று வெண்சீவ் அணுக்களின் (W.B.C) செயலால் உள்கிரகிக்கப்பட்டு ஒவ்வாமை நிலையை ஏற்படுத்துகின்றது என அறியமுடிகின்றது. இதன் பொருட்டு உரியவருக்கு மூக்கு அரிப்பு, தும்மல், மூக்கினால் நீர் சிந்துதல், மூக்கடைப்பு போன்றவை ஏற்பட்டுக் கஸ்டப் படுவோரை நாம் காணக்கூடியதாகவுள்ளது.

அடுத்து நமது உடம்பில் ஏற்படும் சில வியாதிகள் ஒவ்வாமை நிமித்தம் வரலாம். உதாரணமாக ஈழை, தொய்வு (Asthma), ஒட்டுக்கிரந்தி (Eczema) என்பவற்றைக் குறிப்பிடலாம். இவ் ஒவ்வாமையினால் சுவாசப்பை, இருதயம் என்பவற்றின் மென்தசைகள் தாக்கப்பட்டு தடிப்பு நிலை ஏற்பட்டு தமது செயல்திறனை தாமத-மடையச் செய்யும். இதனால் உயிர் ஆபத்துக்கூட நிகழலாம்.

மேலும் சில ஆங்கில மருந்துகளினாலும் ஒவ்வாமை நிலை ஏற்பட இடம் உண்டு என அறிய முடிகின்றது. அஸ்பிரின் ரெட்டிசைக்கிளின் சல்பா வகை மருந்துகள் சில தடுப்பு ஊசிகள், குடும்பக்கட்டுப்பாட்டு மாத்திரைகள் போன்றவற்றைக் குறிப்பிடலாம். இவற்றைப் பாவிக்கும் போது தங்கள் குடும்பவைத்தியர்கள் தங்களை நன்கு பரீட்சித்து பரிசோதித்து நோயை நிதானித்து உரியவர்களுக்கு தந்து கொள்வர். இதைவிடுத்து நாங்களே இவற்றை எடுக்க நினைத்தால் தீங்கை நாம் தேடியவர்களாக ஆகி விடுவோம். இந்த ஒவ்வாமையானது பக்டீரியா, வைரஸ் நுண்கிருமிகளினாலும் வர இடமுண்டு எனவும் கூறப்படுகின்றது.

அடுத்து எக்சிமா (Eczema). இதனை ஒட்டுக்கிரந்தி என அழைப்பதுண்டு. நமது உடலுக்கு வெளியில் நாம் பாவிக்கும் ஆடைகள், பாதணிகள், நகைகள், பட்டிகள் போன்றவற்றால் ஒவ்வாமை நிலை வர இடம் உண்டு. நமது உடலுக்கு ஒத்துக்கொள்ளாத பொருள் எமது தோலின் மேற்பகுதியில் பட்ட வண்ணம் இருந்தால் குறுகிய மணிநேரத்தில் அல்லது நாட்கள் பலவாகியும் அவ்விடத்தில் தடிப்பு, சொறி, வீக்கம், அழற்சி ஏற்படலாம். மேலும் கைக்கடிகாரம் கட்டும் பகுதியில்

தொடர்ச்சி 31ஆம் பக்கம்


**வைத்திய கலாநிதி**
**கே.ரி. கோபால்**
D.A.M.S R.A.M.P (Sri Lanka)
C.D.S - C.N.H.P (Canada)
*Tel.: 647.718.3909*



**Sitham Sam Shanmugam** *(Sales Rep)*
**HomeLife/GTA Realty Inc.**
HOMELIFE HIGHER STANDARDS
Cell - 416.230.7820
Office Scarborough - 416.321.6969
Office Mississauga - 905.712.2666
24 hrs.
•Independently owned and operated

*Brand New homes from builder detached 1900 sqft. double garage Price $285,000 London ON HWY 401 & University of Weston *10% Appreciation in 2 years expected*


**Daisy Mart**
*Brand New convenience store at Tim Hortons*
North of Newmarket at Leslie Main Road

0 - 5 years Newer homes in Stouffville

***Renovate and Sell***
Old detached bungalow near University of Toronto

# வெகுளாமை (Calm) - 4

கோபத்தினை வெளிப்படுத்தாது நமக்குள்ளே புதைப்பதனால் பல்வேறு நோய்கள் ஏற்படுவதாக உளவள மருத்துவர்களும், உளவளத்துறை சார்ந்த அறிஞர்களும் கூறுகின்றனர். மனிதர் தமது உணர்ச்சிகளை வெளிப்படுத்தாது மறைத்து வைத்துக் கொள்வதால் ஆரோக்கியம் கெடுகின்றது. இவற்றுள் கோப உணர்ச்சி முன்னிலை வகிக்கின்றது. இவ்வாறாகக் கோபத்தை அடக்கும் பழக்கத்தின் காரணமாகச் சிலர் மிகவும் சாந்தமானவர்கள் போலத் தென்படுவர். வெளித்தோற்றத்தில் சாந்தமாக இருந்தாலும் அவர்களின் உள்ளே கோபம் புதைந்து கிடக்கும். மீண்டும் மீண்டும் கோபத்தை அடக்கி வைத்திருந்தாலும் ஒரு நாள் பூதாகரமாகி பெரும் அசம்பாவிதத்தையும் தோற்றுவிக்கலாம். ஆன்மீகத்தின் உச்ச நிலையைப் பெற்ற ஞானிகளைத் தவிர மற்றவர்களிடம் கோப உணர்ச்சி இருப்பதுவே மனிதரில் உள்ள பொது இயல்பு. கோபத்தை மனதிற்குள் புதைத்து வைத்துக் கொள்வதால் கபாலக் குத்து, வயிற்றுப்புண், கான்சர், ஆதரிற்றிஸ், அதிக இரத்த அழுத்தம், இருதய நோய், தோல் வியாதிகள் போன்ற நோய்கள் ஏற்படுவதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன. மேலும் நித்திரையின்மை, மன அழுத்தம் பற்களைக் கடிக்கும் பழக்கம், செயற்பாடு களில் தாமதம், அமைதியற்ற தன்மை போன்ற குறைபாடுகளாலும் அவதியுறுவர். இவர்கள் தாங்கள் எதிர்பார்ப்பதை விடவும் அதிகமான பாதிப்பை தமக்கே ஏற்படுத்துவர். நமது உண்மைத் தன்மையை மற்றவர்க்கும் காட்டாது எங்கள் சுகத்திற்கும் கேடு விளைவித்து நமக்கு நாமே துரோகம் செய்து விடுகின்றோம். கோபத்தை அடக்கி வைத்துக் கொள்பவர்கள் ஒரு சந்தர்ப்பத்தில் அத்து மீறி வெடித்து விடுவார்கள். ஆக்கிரமிப்புடன் கோபத்தை வெளிப்படுத்துவதை எந்த ஒரு சமூக அமைப்பும் ஏற்றுக்கொள்ளாது. எங்களுக்கு கோபத்தை உள்ளே புதைத்து வைத்திருக்கும் பழக்கம் இருக்குமானால் தேவையற்ற விதத்தில் எங்கள் உள்ளே அதை வைத்திருக்கின்றோம் என்றுதான் அர்த்தம். கட்டுப்பாட்டை மீறுவதற்கு முன்பாக நிலைமையைச் சரிசெய்து விடவேண்டும்.



2010ம் ஆண்டின் யூன் மாதத்திற்குரிய 'தினமும் விஞ்ஞான அறிக்கையில் (Science Daily June 21, 2010)" கோபத்தை அடக்கி வைத்துக்கொள்பவர்களே மதுபோதையில் அதிகமான வன்முறையாளராகக் காணப்படு கின்றனர் எனக் கூறப்படுகின்றது. தோர் நோர்ஸ்ரம் மற்றும் கில்டி பேப் என்ற இரண்டு ஆய்வாளர்கள் தமது ஆய்வின்படி அடக்கி வைக்கப்பட்டிருந்த கோபம் மதுபோதையில் வன்முறை சேர்ந்த ஆக்கிரமிப்பைத் தருகின்றது என்று குறிப்பிடுகின்றார்கள். இந்த ஆய்வு நோர்வேயில் மூவாயிரம் மனிதர்களிடையே செய்யப்பட்ட ஒரு ஆய்வு என்பது குறிப்பிடத்தக்கது. இந்த மூவாயிரம் பேர்களை அவர்கள் கோபத்தை அடக்கி வைத்திருக்கும் அளவிற்கேற்ப மூன்று பிரிவி னராகப் பிரிக்கப்பட்டு இந்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டதாம். அதிகமாக கோபத்தை அடக்குபவர்களில் போதை ஏற்படும் நிலைக்கு பத்து வீதம் அதிகமாக மதுவைக் குடிக்கும்பொழுது ஐந்து வீதம் வன்முறையாக மாறும் தன்மை இருந்ததாம். சாதாரணமாக கோபத்தை அடக்கிக் கொள்ளாதவர்களிடையே இவ்வாறாக மதுபோதையில் வன்முறை செய்யும் தன்மை இருக்கவில்லை



- அகணி -
authorakani@yahoo.com

தொடர்ச்சி 16ஆம் பக்கம்



***Media Alert –***

Enjoy a free TV preview of Tamil One for one month from December 5, 2011 to January 5, 2012, exclusively on Rogers Digital TV in Ontario. Rogers Digital TV customers can simply tune in and enjoy!

***Digital channel 868***
***Preview Starts: Monday December 5, 2011***
***Preview Ends: Thursday January 5, 2012***
Dedicated to the Tamil speaking community in Canada.
24hrs of local and international Tamil content.
Programming includes dramas, sitcoms, talk shows, daily news and daily movies.

Featured shows:
***Hello Hello*** is a popular live game show involving audience to participate and play. Spin the wheel for your chance to win great prizes!
***Saturday at 5 pm***

***100 Degrees*** recaps and analyzes important news from the week.
***Saturdays @9:30am***

***Kutties Time is*** a live children show that encourages children to showcase their wonderful hidden talents of children.
***Sundays at 10:30am***

For more information, visit ***www.rogers.com/multicultural*** or call ***1-866-447-6503***


# வெகுளாமை...

15ஆம் பக்கத்தொடர்ச்சி

என்றும் ஆய்வு தெரிவிக்கின்றது.

இருதய நோயுள்ளவர்கள் கோபத்தை அடக்கும் பொழுது உயிராபத்து ஏற்படலாமென வேறு சில ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

ஆனால் கோபம் என்பது நெறிப்படுத்தப் படாது வெளிப்படுத்துகை மிகவும் ஆபத்தானது என்பதிலும் மாற்றுக் கருத்திற்கு இடமில்லை. பலர் தமது வேலைகளை இழப்பதற்கும், உறவுகளில் விரிசல் ஏற்படுவதற்கும் மட்டுமல்லாது உயிரிழப்புக்களுக்கும் கூட காரணமாகின்றது இந்தப் பொல்லாத கோபம். கலாநிதி இந்திராணி கேல்டர் சிலருக்கு பரம்பரையாகவும் அதிகமாகக் கோபம் கொள்ளும் தன்மை உள்ளதாகக் கூறியுள்ளார்.



எங்களில் உள்ள செரற்றோனின் (Serotonin) அளவுடனும் தொடர்புள்ளதாகக் காணப்படுகின்றது. கலாநிதி வில்லியம் கிரே டிவூர் கோபத்தை எவ்வாறெல்லாம் புதிய கோணங்களில் பார்க்க வேண்டும் என்று விபரிக்கின்றார். கோபம் என்பது ஒரு உணர்ச்சி. எல்லா உணர்ச்சிகளும் நல்லவை. இந்த உலகில் நாங்கள் வாழ்வதற்கு கோபம் அவசியம். ஆனால் சில நேரங்களில் இந்தக் கோபம் ஆபத்தானது, கொடூரமானது. கோபம் என்பது மிகவும் சக்தி வாய்ந்த உணர்ச்சி. அது தற்பாதுகாப்பிற்காக வெளிப்படுகின்றது. கோபம் என்பது உணர்வு பூர்வமான சக்தி. இதனை ஆரோக்கியமான எல்லைகளை உருவாக்கவும், பாதுகாக்கவும் பயன்படுத்தலாம். கோபம் ஆக்கிரமிப்பிற்கோ அன்றி தாக்குதலுக்கோ இட்டுச்செல்ல வேண்டிய தேவை இல்லை. கோபம் யாரையும் புண்படுத்தவேண்டிய தேவை இல்லை. கோபம் என்பது சக்தி. இது சக்தி வாய்ந்த செயற்பாடுகளுக்குப் பயன்படுத்தப் பட வேண்டிய வலு. கோபம் அன்பில் தங்கியுள்ளது. நாங்கள் கோபத்தை இவ்வாறான கோணங்களில் அணுகுவதுதான் நல்லது.

ரால்ப் வால்டோ எமேர்சன் கோபத்தைப் பற்றிப் பின்வருமாறு குறிப்பிடுகின்றார். 'கோபம் என்பது மிகவும் சக்தி வாய்ந்ததும் உள்ளிருந்து ஏதோ ஒரு காரணத்திற்காக உருவாவதுமாகும்'. எங்கள் எண்ணங்கள் பல வழிகளில் எமது உணர்ச்சிகளைப் பாதிப்பதோடு எமது வாழ்க்கையையும் தீர்மானிக்கும் விடயமாக இருக்கின்றது. எதிரான எண்ணங்கள் ஏற்படும் நேரங்களில் அவற்றைக் குறித்து வைத்துக்கொண்டு அதற்குப் பதிலாக நேரான எண்ணங்களை ஏற்படுத்தும் முயற்சியில் இறங்க வேண்டும். இவ்வாறான முயற்சிகள் வெகுளாமை என்ற திறமையை வளர்த்துக் கொள்வதற்கான செயற்பாடாகும்.

ஒருவரின் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தல் ஏற்படும்பொழுது கோபம், பயம் ஆகிய இரண்டு விதமான உணர்ச்சிகள் தொடர்புபடுகின்றன. எந்த ஒரு அச்சுறுத்தலாலும் முதலில் ஏற்படுகின்ற உணர்ச்சி பயம். நாங்கள் எடுக்கின்ற பாதுகாப்பு நடவடிக்கையாக கோபம் என்ற உணர்ச்சி அடுத்ததாக ஏற்படுகின்றது. இந்தக் கோபம் என்ற உணர்ச்சி ஏற்படாவிட்டால் ஆபத்தின் முன்னே மிஞ்சி இருப்பது பயம் மட்டுமே. எனவே கோபம் என்ற உணர்ச்சி ஏற்படுவது அவசியம். இந்த உணர்ச்சியை நெறிப்படுத்தும் வெகுளாமை என்ற திறமை எங்களிடம் இருக்க வேண்டும். கோபம் என்ற உணர்ச்சி நாம் மிகவும் விரும்புகின்ற அன்பு என்ற உணர்ச்சியுடன் நெருக்கமான தொடர்பைக் கொண்டது. கோபம் என்ற உணர்ச்சி ஏற்படுகின்ற பொழுது அன்பு போன்று இருப்பதில்லை. ஆனால் கோபம் ஏற்படும் அநேகமான சூழ்நிலைகளில் அன்பும் இருப்பதைக் காணலாம். அதிகமான அன்பினை உணரும்பொழுது உங்கள் இதயம் நன்கு திறந்திருக்கும். அங்கே கோபமும் வந்து விடும். பொலிஸ் தலையீடு செய்யும் நிலைக்குத் தள்ளப்படுகின்ற பல வன்முறைகள் குடும்பச் சண்டைகளாக இருக்கின்றன. கோபம் நெறிப்படுத்தப் படாது வன்முறைகளைத் தோற்றுவிக்கின்றன. ஒரு கணப்பொழுதில் ஏற்படும் கோபம் குடும்பப் பிரிவுகளையும் ஏற்படுத்திவிடுகின்றன. இதற்கு குழந்தைகள் பலிக்கடாக்கள் ஆக்கப்படுகின்றனர். நாங்கள் பிரயோகிக் கின்ற வார்த்தைகள் கூட இவ்வாறான நிலைக்கு காரணமாக இருக்கின்றது. குடும்ப உறுப்பினர்களுக்கிடயில் அன்பிற்கான எதிர்பார்ப்பு இருக்கும். அவர்கள் இந்த எதிர்பார்ப்பில் திருப்தி இல்லாது மனம் நொந்து கொள்வர். அதனால் ஒருவிதமான பயம் தோன்றும். இதனால் அதற்கான பாதுகாப்பு நடவடிக்கையாகவும் கோபம் தோன்றி விடும். ஆரம்பத்தில் கோபம் வசதிக்காகவும், இன்பத்திற்காகவும், வலியைத் தீர்ப்பதற்காகவும் அன்பில் தங்கி யிருக்கும். அன்பு மேலும் வளர்ச்சியடைய கோபமும் வளர்ச்சியடையும். வயது வந்தவர்களாகிய நாங்கள் மற்றவர்கள் மீது கொண்டுள்ள அன்பு காரணமாகவும், அவர்களைப் பாதுகாப்பதற்காகவும் கோபம் அடைகின்றோம். எழுகின்ற கோபத்தை புதைக்க வேண்டியதில்லை. இதனை சாதுர்யமாக நெறிப்படுத்திக் கொண்டால் போதும். 'வெகுளாமை பெற்று வெற்றி பெறுவோம் வாழ்வில்' என்று கூறிக்கொண்டு விடைபெறுகின்றேன். அன்பான வாசகர்களே! அடுத்த இதழில் மீண்டும் சந்திப்போம். நன்றி. வணக்கம். தொடரும்.

# புதிதாக நிர்மாணம்...

07ஆம் பக்கத்தொடர்ச்சி

போன்ற நகரங்கள் நல்ல உதாரணம் எனினும், ரொறொன்ரோ பகுதியில் புதிதாக நிர்மாணம் செய்து சந்தையில் இருக்கும் அடுக்குமாடி மனைகளின் விலை அதிகரித்தே காணப்படுவதனை புள்ளிவிபரங்கள் எடுத்துக் காட்டுகின்றன. தனி வீடுகள், இரண்டு சேர்ந்த வீடுகளின் விலையின் அதீத அதிகரிப்பு முதல் தடைவயாக வாங்குபவர்களிற்கு விலை கட்டுபடியாகாததால் மிகவும் நெருக்கடி ஏற்பட்டுள்ளதால் அடுக்குமாடி மனையையே வாங்கக் கூடியதாக உள்ளது.



எனவே ஆதனச் சந்தையில் ஏற்பட்டுள்ள மேலதிக அடுக்குமாடி மனைகளின் எண்ணிக்கையானது எதிர்காலத்தில் மனைகளின் விலையை இறங்கச் செய்யலாம் என்ற காரணம் முன்வைக்கப்படுகின்றது. ரொறொன்ரோவில் டிசம்பர் 12, 2011 அன்று கனடிய மத்தியவங்கியின் ஆளுனர் திரு. மார்க் கார்னி அவர்கள் தமது சொல்லாற்றலின் போது கூறியிருந்தது மிகவும் முக்கியமானதாக கருதலாம் கனடிய மக்களின் அதீத கடன், ஐரோப்பிய நாடுகளில் ஏற்பட்டுள்ள பொருளாதார ஸ்திரமற்ற நிலைமை, அமெரிக்க குடிமக்களின் நிகரபெறுமதி அவர்களின் வருமானத்தின் 5 மடங்காக குறைந்துள்ள நிலைமை (பொருளாதார நெருக்கடிக்கு முன்பு 6.5 மடங்காக காணப்பட்டது) இவை போன்ற எதிர்பாராத ஆரோக்கியமற்ற பொருளாதார நிலைமை, உலகளாவிய பல நாடுகளில் ஏற்பட்டுள்ளது.

இதனால் எதிர்காலத்தில் வருமானத்தின் அளவு குறைக்கப்படலாம். தொழில் புரிவர்களின் எண்ணிக்கையை குறைக்கலாம். புதிதான முதலீடுகள் தவிர்க்கப்படலாம். இவ்வாறான நிலைமை, பொதுவாக பொருளாதாரத்தை திடநிலைமைக்கு கொண்டுவர சிலகாலங்கள் எடுக்கலாம் என பயம் கலந்த, அச்சுறுத்தலான அறிவுறுத்தலை கனடிய மக்களிற்கு தெரிவித்துள்ளார்.

அத்துடன் இன்றைய நிலையில் கனடிய பொருளாதாரம் ஆரோக்கியமான நிலையில் உள்ளதாகவும் கூறியே சென்றுள்ளார். எனினும் எதிர்காலத்தில் கனடிய பொருளாதாரத்திலும் ஓரளவு தேக்கம் ஏற்படும் என்பது கிழக்கு வானத்தில் தெரிவது போலவே எண்ணத் தோன்றுகின்றது.

# பெண்களை பாதிக்கும் மெனோபாஸ் - கவலை வேண்டாம்

## நீண்டநாள் வாழ நினைத்ததை அடைய

ஒரு பெண்ணுக்கு மாதவிடாய் நிற்கும் காலத்தில் உடல் மற்றும் மனம் சார்ந்த மாற்றங்கள் ஏராளம். மாதச் சுழற்சி நிற்கும் இந்த காலத்தை 'மெனோபாஸ்' என்று பெயரிட்டு அழைக்கின்றோம். பெண்கள் பூப்படையும் 10-14 வயதுக்கு இது நன்கு சுரக்க ஆரம்பித்து அதனுடைய வேலையை மாதா மாதம் செய்வதால் தான் அவர்கள் சரியான மாதவிடாய் சுழற்சியைப் பெற முடிகிறது. பின்னர் 45-50 வயது ஆகும் போது சினை முட்டைகளின் செயல்பாடு குறைவதால் அதனுடைய சுரப்புத்தன்மை குறைகிறது. அந்த நேரத்தில் மாதவிடாய் சுழற்சி தடைப்பட ஆரம்பிக்கின்றது. இந்தக் காலம் பெண்களுக்கு முக்கியமான காலமாகக் கருதப்படுகிறது. இது ஒரு இயற்கையான நிகழ்வு என்றாலும் இதனால் உடலளவிலும், மனதளவிலும் அவதிப்படும் பெண்கள் தற்போது அதிகம்.

பெண்கள் குழந்தைகளாக இருக்கும் போது கபம் மேலோங்கியிருக்கும். பருவவயதில் பித்தம் மேலோங்கி இருக்கும். 40-45 வயதின் பின் உடலில் வாதத்தன்மை அதிகரிக்கும். பித்தத்தின் வயதிலிருந்து வாதத்தின் வயதிற்கு செல்லும் காலமே மாதவிடாய் நிற்கும் காலமாகின்றது. இக்காலத்தில் உடல் ரீதியான பல மாற்றங்கள் நிகழ்கின்றன. அதில் முக்கியமான ஒன்று உடலின் சில பகுதிகளில் உஷ்ண உணர்வு தென்படும். அது ஒன்று முதல் ஐந்து வருடம் வரை காணப்படலாம். இதற்கு முக்கியகாரணம் ஹோர்மோன்களின் ஏற்றத் தாழ்வுகளும், ரத்த நாளங்கள் விரிவடைவதும் தான். ஒரு சிலருக்கு அதிகமான வியர்வை ஏற்படலாம். இதனால் இரவில் உறக்கம் பாதிக்கப்படலாம். தலைசுற்றல், கைகள், கால்கள் மரத்துப்போதல், இருதயம் படபடப்பு, உடல் எடை கூடுதல், பெண் உறுப்பில் வரட்சித்தன்மை, சிறுநீர் கழியும்போது எரிச்சல் போன்றவை ஏற்படும். சிலருக்கு இது இல்லாமலும் போகலாம்.

### மேலும் சில இடர்பாடுகள்

- இருமும்போதும் தும்மும்போதும் சிறுநீர் கசிதல்.
- எலும்புகளில் தேய்மானம் உண்டாவதால் மூட்டுகளில் வலி, வீக்கம் ஏற்படும்.
- மன அழுத்தம் அதிகமாக இருக்கும்.
- உடலில் கொழுப்பின் அளவு அதிகமாகும்.
- கோபம், அசதி, இதயத்துடிப்பு அதிகமாதல்.

இந்த இடர்பாடுகளிலிருந்து விடுபட முடியுமா? முடியும். எப்படி?

சில வாழ்வியல் மாற்றங்களை மெனோபாஸ் காலத்தில் மேற்கொள்வதன் மூலம் இத்தகைய தொந்தரவுகளை நீக்கலாம்.


**உணவு முறை**

1. மிக எளிதாகச் சீரணிக்கக்கூடிய உணவு வகைகளை நேரம் தவறாமல் உண்ண வேண்டும்.
2. எண்ணெயில் பொரித்த உணவு வகைகளை அறவே தவிர்க்க வேண்டும்.
3. மசாலா வகைகளை உணவில் சேர்க்கக் கூடாது.
4. நீண்ட பட்டினி உபவாசம் இருப்பதை தவிர்க்க வேண்டும்.
5. காலையில் சரியான நேரத்தில் சிற்றுண்டி, மதியம் காய்கள் கீரைகள் கலந்து அளவான உணவு, இரவில் அரைவயிறு மட்டும் நிரம்பும் எளிதில் சீரணிக்கக்கூடிய உணவு வகைகள், இடையிடையே சுத்தமான நீர் அருந்த வேண்டும்.

**உடற்பயிற்சியும் யோகா பயிற்சியும்**



1. நடைப்பயிற்சி இதில் முக்கியமானது. தினமும் காலையில் 20 முதல் 30 நிமிடம் வரை நடைப்பயிற்சி செய்யலாம்.
2. யோகாசன பயிற்சி மனம் சம்பந்தப்பட்ட பிரச்சினைகளுக்கு நிவாரணம் அளிக்கிறது. தியானம் மனதில் தோற்றும் தேவையில்லாத எண்ணங்களை வெளியேற்றுகிறது. இதனால் மனம் தெளிவடைகிறது. மேலும் இருதயம் சம்பந்தமான நோய்கள் நீங்குகின்றது.
3. மன அழுத்தத்தை குறைக்க இனிய இசைகளை கேட்கலாம்.
4. பாதஹஸ்த ஆசனம், விபரீதகரணி, காளியாசனம், கபாலபாதி, மூச்சுப்பயிற்சி என்பவற்றை இடையிடையே பழகிவந்தால்



விபரீதகரணி
VEEBAREETHA KARANI

(குறிப்பாக 40 வயதிலிருந்து) மெனோபாஸ் காலத்தை சிரமங்களின்றி சந்தோஷமாகச் சந்திக்கலாம்.

ஆண்டவன் படைப்பில் உருவான உடல் உறுப்புகளை அகற்றுவது இயற்கைக்குப் புறம்பான செயலாகும். அப்போது இயற்கை அளிக்கும் தண்டனைகள் தான் நோய்கள், பிணிகள், கவலைகள். இதனை ஒவ்வொருவரும் உணரவேண்டும்.

மேலதிக விபரம் தேவைப்படின் என்னுடன் தொடர்பு கொள்ளவும்.



ஆரோக்கிய வாழ்வு
N. செல்வசோதி
Diploma in Yoga Therapy (India)
416.289.2033 after 7:00pm
416.617.5721

SABESAN DENTURE CLINIC
பல் கட்டும் துறையில் விசேட நிபுணர்

We Specialized in..........
Full Dentures
Immediate Dentures
Partial Dentures
Implant Retained Dentures
Mouth Guards
Anti-snoring Devices
Repair of Broken Dentures
Relining for Loose Dentures
Soft Liners
Teeth Whitening






தனிப் பல்லாகவோ, ஒருசில பற்களாகவோ, அல்லது முழுப்பல் செட் ஆகவோ இருப்பினும் சகலவகை செயற்கைப் பற்களும் உங்களுக்கேற்ப செய்துதரப்படும்.
உங்கள் தற்போதய பற்களின் குறைபாடுகளை சீர்செய்யவும் உடைந்தபற்களை ஒட்டவும் எம்மை அழைக்கவும்.

சபேசன் தங்கத்துரை BDS (SRI LANKA) DD (CANADA)
Denture Specialist
இலங்கையில் பலவருடங்களாக DENTAL SURGEONஆக கடமையாற்றியவர்

416 854 9152

எமது Labல் உடனுக்குடனும், நேர்த்தியாகவும் வடிவமைக்கப்பட்ட பற்கள்.
அவசரதேவை உள்ளவர்களுக்கு ஒரே நாளிலும் பற்கள் கொடுக்கப்படும்.
சமூகநல நிதி உட்பட சகல காப்புறுதிகளும் ஏற்றுக்கொள்ளப்படும்

ELECTRICAL WORKS




FRIDGE, WASHER, DRYER போன்ற மின் உபகரண திருத்த வேலைகள் செய்து கொடுக்கப்படும். நியாயமான கட்டணம். தரமான சேவை. வாடிக்கையாளர்களின் நன்மதிப்பீடு.
தொடர்புகளுக்கு: ஈசன் - 416-286-2880

# முல்லை பெரியாறு...

05ஆம் பக்கத்தொடர்ச்சி

சென்னை மாகாண கவர்னர் வென்லாக் முன்னிலையில் அணை கட்டுவதற்கான பணிகள் தொடங்கின. கர்னல் பென்னி குயிக் தலைமையில் பிரிட்டிஷ் இராணுவத்தின் கட்டுமானத்துறை அணை கட்டும் பணியை மேற்கொண்டது. சென்னை மாகாணத்தின் கூடலூர் மலைப் பகுதியிலிருந்து தேக்கடி வரையும், அங்கிருந்து அணை கட்டும் பகுதி வரையும் கம்பிவடப் பாதைகளை அமைத்து அதற்கான பொருட்களைக் கொண்டு சென்றனர். வழியெங்கும் அடர்ந்த காடு, விஷப்பூச்சிகள், காட்டு யானைகள், காட்டு மிருகங்கள், கடும் மழை, திடீரென உருவாகும் காட்டாறு... என பல சிரமங்களுக்கு இடையே மூன்று ஆண்டுகள் கடும் உழைப்பில் அணை பாதி கட்டப்பட்டிருந்த நிலையில் ஒரு பெருமழை குறுக்கிட்டது. இதனால் உருவான வெள்ளத்தில் பாதி கட்டப்பட்டிருந்த அணை அடித்துச் செல்லப்பட்டது. மீண்டும் முதலில் இருந்து தொடங்க வேண்டும். ஆனால், அதற்கு பணம் ஒதுக்கீடு செய்ய அன்றைய ஆங்கிலேய அரசு மறுத்துவிட்டது. இந்நிலையில் கர்னல் பென்னி குயிக், இங்கிலாந்திற்குத் திரும்பிச் சென்று தன் குடும்பச் சொத்துக்கள் அனைத்தையும் விற்று, அதன் மூலம் கிடைத்த பணத்தைக் கொண்டு வந்து சொந்தமாகவே முல்லைப் பெரியாறு அணையைக் கட்டி முடித்தார். இந்த அணையின் கட்டுமானப்பணிகளுக்காக 80 ஆயிரம் டன் சுண்ணாம்புக்கல் பயன்படுத்தப்பட்டது. அணை 1893இல் 60 அடி உயரம், அதன்பின்பு 1894இல் 94 அடி உயரம் என கொஞ்சம் கொஞ்சமாக உயர்ந்து, 1895 டிசம்பர் மாதத்தில் 155



அடியும் கட்டி முடிக்கப்பட்டு கைப்பிடிச் சுவரும் கட்டப்பட்டது. அணையை அப்போதைய சென்னை மாகாண ஆளுநர் வென்லாக் பிரபு திறந்து வைத்தார். அணையில் 104 அடிக்கு மேல் தேங்கும் தண்ணீர் குகை மூலம் வைகைப் படுகைக்கு வந்தது. இது தேனீ, திண்டுக்கல், மதுரை, சிவகங்கை மற்றும் இராமநாதபுரம் மாவட்டப் பகுதி மக்களுக்கு குடிநீராகவும் விவசாய நிலங்களுக்குத் தேவையான தண்ணீராகவும் பயன்படுத்தப்பட்டது.

## இனி பிரச்சினை என்ன எனப் பார்ப்போம்...

சென்னை மாகாணம் தமிழ் நாடாகவும் திருவிதாங்கூர் சமஸ்தானம் கேரளாவாகவும் ஆனபிறகும் முல்லைப் பெரியாறு ஒப்பந்தத்தில் சிக்கல்கள் எதுவும் இன்றி தொடர்ந்து பாசனம் நடந்துதான் வந்தது. 1955ஆம் ஆண்டு பெரியாறு தமிழ்நாட்டில் நுழையும் இடத்தில் மின்உற்பத்தி செய்வதற்கான திட்டம் தமிழக அரசால் வகுக்கப்பட்டது. அதனால், பழைய ஒப்பந்தத்தின் தொடர்ச்சியாக புது ஒப்பந்தம் ஒன்று கையெழுத்தானது. அதில் நீரில் மூழ்கும் நிலத்துக்கான குத்தகை பணம் ஏக்கருக்கு ஐந்தில் இருந்து முப்பது ரூபாயாக உயர்த்தப்பட்டது. அதன்படி 2,43,000 ரூபாயை ஆண்டுதோறும் தமிழக அரசு கேரளாவுக்கு கொடுத்து வருகிறது. மேலும், அணையிலும் அதைச் சார்ந்த நீர்ப்பிடிப்பு பகுதியில் உள்ள குளம், குட்டை போன்ற நீர் நிலைகளிலும் மீன் பிடிக்கும் உரிமை தமிழகத்திடம் இருந்து கேரளாவுக்கு கொடுக்கப்பட்டது. இதற்குப் பதிலாக, தமிழகம் 140 மெகாவாட் திறன் கொண்ட மின் நிலையத்தை அமைத்துக்கொள்ளலாம். இது தமிழகத்திற்கு வரும் நீரை கொண்டு உற்பத்தி செய்யப்படும் மின்சாரமாகும். இவ்வொப்பந்தம் 999 ஆண்டுகளுக்குச் செல்லுபடியாகும் என்றும் குறிக்கப்பட்டது.

இந்நிலையில், 1963ஆம் ஆண்டு முதன்முதலாக 'அணை பலவீனமாகிவிட்டது. கேரள மக்களுக்கு ஆபத்து. எனவே, அணையில் 136 அடிக்கு மேல் நீரைத் தேக்கவிட மாட்டோம்' எனப் பிரச்சினையை எழுப்பியது கேரளா அரசாங்கம். 'முல்லைபெரியார் அணை, சுண்ணாம்பு சுர்க்கி கலவையில் கருங்கல்லில் கட்டப்பட்ட அணை ஆகும். 1900 ஆண்டுகள் கடந்தும் பலத்துடன் விளங்கும் கல்லணையின் கட்டுமான பணிகளை முன்மாதிரியாகக் கொண்டு இது கட்டப்பட்டுள்ளது. முல்லைப் பெரியாறின் முழு கொள்ளளவான 152 அடி நீர் இருக்கும் போதும் மிக உயர்ந்த நில நடுக்கம் ஏற்பட்டால்கூட உடையாத பலத்துடன்தான் அணை கட்டப்பட்டுள்ளது. இந்த அணை கட்டப்பட்ட பிறகு இப்பகுதியில் 30 முறை நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது. ஆனால், அணையில் ஒரு விரிசல்கூட விழுந்ததில்லை. முல்லைப் பெரியாறு அணை கட்டப்பட்ட அதே காலகட்டத்தில்தான் கன்னியாகுமரி மாவட்டத்தில் இருக்கும் பேச்சிப்பாறை அணையும் கட்டப்பட்டது. இந்த அணை இப்போதும் பலமாகத் தான் இருக்கிறது' என தமிழகம் எடுத்துவைத்த வாதங்களை கேரளா காதுகொடுத்துக் கேட்கவில்லை.

ஆனாலும், கேரளாவின் பயத்தைப் போக்க மத்திய அரசின் நிபுணர் குழு அணையைப் பார்வையிட்டது. அந்தக் குழு 152 அடி வரை நீரைத் தேக்கக்கூடிய பலத்துடன் அணை பலமாகத்தான் இருக்கிறது என அறிக்கைத் தந்தது. என்றாலும், கேரள மக்களின் அநாவசியமான பீதியைப் போக்க சில எச்சரிக்கை நடவடிக்கைகளை எடுக்கலாம் எனவும் அறிவுரை கூறியது. இதன் அடிப்படையில் 26 கோடி ரூபாய் செலவில் அணையைப் பலமூட்டும் பல நடவடிக்கைகள் தமிழகத்தால் எடுக்கப்பட்டன. கேரளா ஏற்படுத்திய இடையூறுகளுக்கு இடையே மிகுந்த பொறுமையுடனும் சகிப்புத் தன்மையுடனும்தான் தமிழக பொறியாளர்கள் இந்தப் பணிகளை செய்து முடித்தார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

இதன்பின்னர், 1978ஆம் ஆண்டு மீண்டும் அணை பற்றிய புகாரை கேரளா எழுப்பியது. 'அணை உடைந்துவிடும், 30 லட்சம் கேரள மக்கள் கடலுக்கு அடித்துச் செல்லப்படுவார்கள்' என்றது. இதனையொட்டி, மீண்டும் அணையைப் பார்வையிட்டத மத்திய அரசின் பாசன கமிஷன் அதிகாரிகள், அணை நல்ல நிலையில்தான் இருக்கிறது எனவும் என்றாலும் கேரள மக்களின் அச்சத்தைப் போக்குவதற்காக நீர்மட்டத்தை 152 அடியிலிருந்து 145 அடியாகக் குறைத்துக் கொள்ளலாம் எனவும் கூறினார்கள். தமிழ அரசு அதனையும் ஏற்றுக்கொண்டு நீர்மட்டத்தை 145 அடியாகக் குறைத்தது.

மலையாள மனோரமா ஏடு, 1979இல் 'அணைக்கு ஆபத்து' என்ற பீதியை மீண்டும் பரப்ப, கேரள அரசு நீர்மட்டத்தை 145 அடியிலிருந்து 136 அடியாக குறைத்துவிட்டது. இதனால், நீரில் மூழ்கும் நிலப்பகுதி 4677 ஏக்கராக குறைந்தது. மீதமுள்ள பகுதிகளில் சுற்றுலா கேளிக்கை சாதனங்களை நிறுவி கேரளா அரசு சம்பாதிக்கிறது. ஆனாலும், முதலில் தீர்மானித்தபடி 8100 ஏக்கருக்கான வாடகையையே தொடர்ந்து கொடுத்து வருகிறது தமிழக அரசு. மேலும், நீர்த்தேக்கத்தின் கொள்ளளவு 10.4 டிஎம்சியில் இருந்து 6.4 டிஎம்சியாக குறைந்துவிட்டதால் பாசனப்பகுதியில் 1,25,000 ஏக்கர் நிலம் தரிசாக மாறியது. 140 மெகாவாட் உற்பத்தித் திறன் கொண்ட பெரியாறு மின்நிலயத்தில் 40 சதவிகிதம் உற்பத்தி குறைந்தது. மேலும், முல்லைப் பெரியாறு அணையில் வழிந்துபோகும் தண்ணீரை இடுக்கி அணையில் தேக்கி மின் உற்பத்தி செய்து அதனை தமிழ்நாட்டுக்கே விற்றது கேரளா. முல்லைப் பெரியாறு அணையில் ஆண்டுதோறும் இவ்வளவு

தொடர்ச்சி 26ஆம் பக்கம்






# திரை விமர்சனம் - போராளி

'சுப்ரமணியபுரம்', 'நாடோடிகள்', 'ஈசன்' ஆகியவற்றுக்குப் பிறகு சசிக்குமார் - சமுத்திரகனி வெற்றிக் கூட்டணியில் மறுபடியும் ஒரு நட்பின் சிறப்பைச் சொல்லும் திரைப்படம்! சொந்தபந்தங்கள் தோரணைக்குதான். நண்பர்கள்தான் வாழ்வில் கடைசி வரை துணை நிற்பார்கள் என்பதை மீண்டும் ஒருமுறை அழுத்தம் திருத்தமாக சொல்லும் படம் 'போராளி'.

வெளியூரில் இருந்து வேலை தேடி சென்னை வரும் சசிகுமாரும் அல்லரி நரேஷும் நண்பன் கஞ்சா கருப்புவின் வீட்டில் தஞ்சமடைகிறார்கள். அது பல குடும்பங்கள் வாழும் ஒரு குடியிருப்பு. அங்கே இருபவர்களுக்கெல்லாம் உதவி செய்து நல்ல பெயரை பெறுகிறார்கள். பெட்ரோல் பங்கில் இவர்களுக்கு வேலை கிடைக்கிறது. பங்க வேலை போக மீதமிருக்கும் நேரத்தில் ஒரு சுய தொழில் ஆரம்பிக்கிறார்கள். நரேஷ் தன்னுடன் பங்கில் வேலை பார்க்கும் பெண்ணைக் காதலிக்கிறார். சசிகுமாரை

**- பிலிம் நியூஸ் கிருஸ்ணன் -**

குடியிருப்பில் பக்கத்து வீட்டுப் பெண் சுவாதி காதலிக்கிறார். மிகக் குறைந்த காலத்தில் ஒரு நல்ல நிலைக்கு வந்து தொழிலில் செட்டிலாகிறார்கள். அந்த சந்தோஷத்தில் சசிகுமார், நரேஷ் இருவரது படங்களையும் போட்டு விளம்பரப் பிரியரான கஞ்சா கருப்பு பத்திரிக்கைகளில் ஒரு விளம்பரம் கொடுக்கிறார். அந்த விளம்பரத்தைப் பார்த்துக்கொண்டு சசிகுமாரையும் நரேஷையும் தேடி ஒரு கும்பல் சென்னைக்கு வருகிறது. வந்தவர்கள், 'இவர்கள் இருவரும் பைத்தியக்காரர்கள், மனநல காப்பகத்திலிருந்து தப்பித்து வந்து விட்டார்கள்' என்கிறார்கள்.



இடைவேளை.

இப்போது கதை கிராமத்தில் நடக்கிறது. சசிகுமார் தாயை இழந்தவர். தந்தை இன்னொரு திருமணம செய்து கொள்கிறார். அவருக்கும் சசிகுமார் சித்திக்கும் ஒரு பையன் பிறக்கிறான். சசிகுமாருக்கு திருமணமாகாத ஒரு பெரியப்பா இருக்கிறார். பெரிய நிலக்கிழார். அவரது நிலத்தின் அடியில் யுரேனியம் இருப்பது கண்டுபிடிக்கப்படுகிறது. அந்த நிலம் மூலம் பணம் கொட்டப்போகிறது எனத் தெரிந்ததும், அந்தச் சொத்துக்கள் அனைத்தும் தன் பிள்ளைக்கே கிடைக்க வேண்டும் என்று திட்டம் போடுகிறார் சசிகுமார் சித்தி. மனைவி மயக்கத்தில் இருக்கும் அப்பா எதற்கெடுத்தாலும் தலையை ஆட்ட, நல்ல புத்திசாலி பையனான சசிகுமாரை பள்ளிக்கு அனுப்பாமல் சாணி தட்ட வைக்கிறார்கள். ஒரு கட்டத்தில் அவர்களது வீட்டில் வேலை பார்த்த பெரியவர் மூலம், பெரியப்பா மற்றும் தனது அம்மாவை திட்டமிட்டு கொலை செய்தது சித்தி வழி சொந்தங்கள்தான் என்பது சசிகுமாருக்குத் தெரிய வருகிறது. அவர்களிடம் சென்று மோதுகிறார் சசி. இந்த மோதலில் சில கொலைகள் நடந்து விடுகிறது. சசிகுமார் ஏன் கொலை செய்தார்

**தொடர்ச்சி 30ஆம் பக்கம்**




# கடவுளின் கெஸ்ட் ஹவுஸ்! ஆலப்புழா!

சென்ற இதழ் தொடர்ச்சி....

தன் வசீகர வனப்போடு கரம் நீட்டி நம்மை அழைக்கும் திக்கெங்கும் சூழ்ந்திருக்கும் நீர்ப்பரப்பு, ஆங்காங்கே நீரைக் கிழித்தபடி நீந்திச்செல்லும் படகுகள், மிதந்து நகரும் படகு வீடுகள், அலை அலையாய் வானத்தில் வலசை போகும் பெயர் தெரியா பறவைகள் பறவைகளின் நிழல்போல, நீருக்குள் கொத்துக்கொத்தாய் போகும் மீன்கள்... இத்தனை அழகையும் கொண்ட பேரழகி வேம்பநாடு ஏரி. ஆலப்புழாவின் அத்தனை அழகும் கொட்டிக்கிடக்கும் பகுதி!

கிட்டத்தட்ட 200 கிலோமீட்டர் சுற்றளவு கொண்ட இந்த வேம்பநாடு ஏரிதான், இந்தியாவிலேயே மிக நீளமானது என்கிறார்கள். ஆலப்புழா, கோட்டயம், எர்ணாகுளம் ஆகிய மூன்று மாவட்டங்களை இணைத்து வைக்கும் இது, கொச்சி துறைமுகத்தில் அரபிக் கடலோடு சங்கமிக்கிறது. இந்த ஏரிக்குள் ஆங்காங்கே பல கிராமங்கள் இருக்கின்றன. மாவிஞ்சோலை, புன்னமடா, நெடுமுடி, காவா-ளம் போன்றவை இதில் முக்கியமானவை. கிளிஞ்சல்களை பொறுக்கி வந்து அவித்து, அதிலிருக்கும் கறியை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யும் நிறுவனங்களுக்கு விற்பது இக்கிராம மக்களின் முக்கியத் தொழில்.

**- வழிப்போக்கன் -**

சின்னச்சின்ன தாவரத் தீவுகளுடன் கூடிய காயல் பிரமாண்டம் அனைத்தையும் தனக்குள் வைத்திருக்கும் வேம்பநாடு ஏரிக்குச் செல்ல வேண்டுமானால் படகு வீடு இருந்தால் வசதி. வேம்பநாடு ஏரியில் படகுகள் புறப்படும் இடத்தின் பெயர் குப்பபுரம் கைனேரி.

கொல்லம், கோட்டயம் என ஆலப்புழாவை அடுத்துள்ள நகரங்களை இணைக்கிறது இந்த ஏரி. ஆலப்புழா, கொல்லம், கோட்டயம் இடையே உள்ளூர் மக்கள் போக்குவரத்துக்காக இப்பகுதியில் அரசுப் படகுகளை இயக்குகிறது. ஆலப்புழாவில் இருந்து கோட்டயத்துக்கு இந்தப் படகில் செல்ல மூன்று மணி நேரம் ஆகும். இந்தப் பயணத்தில் ஆலப்புழாவின் தேர்ந்தெடுக்கப் பட்ட சில அழகிய இடங்களை ரசிக்கலாம். உள்ளே பயணச்சீட்டு கொடுக்க நடத்துனர் இருப்பார். கூட்டம் பெருத்துவிடும் நேரங்களில் படிக்கட்டு தொங்கல் பயணமும் உண்டு. இந்த பயணத்தில் 'இதுதான் வியூ பாயிண்ட்' என்று எதுவுமில்லை. வளைந்து நெளிந்த கரையோரத்தில் தென்னை மரங்களும் பாக்குமரங்களும் ஓங்கி வளர்ந்திருக்கின்றன. வீடுகளின் முற்றத்தில் மலர்ந்திருக்கும் செம்பருத்திப் பூக்கள், தன் மஞ்சள் மகரந்தங்களை ஏரிக்குள் தூவுகின்றன. அதைத் தாண்டிப் பயணித்தால் ஆலப்புழாவிலேயே இது இன்னும் சிறப்பு என்பதை உணர்வீர்கள்! ஒரு பக்கம் ஏரியும் தீவுகளும் அமைந்திருக்க, இன்னொரு புறம் சரேலென விரிகிறது பசுமைப் பிரதேசம். அத்தனையும் நெல்வயல். ஏதோ திருவையாறு, காவிரி டெல்டாவுக்குள் நுழைந்துவிட்டாற்போல அப்படியொரு பசுமை. எங்கெங்கும் பரவியிருக்கும் நீரும் குட்டி குட்டித் தீவுகளும் நகர்ந்தோடும் படகுகளுமாக எல்லாமே கண்களின் தாகம் தீர்ப்பவைதான். நம்மைச் சுற்றி நகரும் படகு வீடுகளின் சக பயணிகள் உதிரவிடும் புன்னகையும் கையசைப்பும் புகைப்பட 'க்ளிக்'குகளும் கூட அலாதியானவை.



## கேரளா சுற்றுலா இடங்கள் - 2

துல்லிய நீர்ப்பரப்பில் மெல்லிய தன் அலகை அகல விரித்து கொக்குகள் அமர்ந்திருக்கும். இன்னும் சில, நீரின் விளிம்பை ஒட்டி கூர் பார்வையோடு தாழப் பறக்கும். கரிய நீர் காக்கை ஒன்று ஒற்றைக் குச்சியில் தனித்து அமர்ந்து ஒரு துறவியெனத் தவம் செய்யும். அனைத்தின் இலக்கும் ஒன்றே ஒன்றுதான், மீன்.

“இந்த ஏரித்தண்ணீர் என்னிக்கும் குறையாது. மழை நேரங்கள்ல கொஞ்சம் அதிகமாகும். உடனே சரியாயிடும். கடல் தண்ணீர் கலக்குற இடம்ங்குறதால அலை அடிக்கும்னு பயப்படத் தேவையில்லை” என்கிறார்கள் படகோட்டிகள். சில இடங்களில் சிறிய தெரு போல ஒடுங்கிச் செல்லும் கால்வாய்கள் வழியாக செல்கிறது படகு. பெரிய படகு வீடுகளில் பயணம் செய்தால் இந்தக் குறுகிய கால்வாய்களையும் அவற்றின் ஓரத்தில் இருக்கும் கிராமங்களையும் பார்க்க முடியாது. இதற்கு சிறிய ரக ஜெட் போட்கள்தான் வசதி. சந்து போன்ற சின்னச் சின்ன கால்வாய்களில் நீரை மறைத்தாற்போல வளைந்து குகை போல் மூடியிருக்கும் மரம், செடி, கொடிகளின் ஊடாக படகில் செல்வது ஒரு சந்தோஷ அனுபவம்!

### எப்பொழுது செல்லலாம்?

ஆலப்புழா நீர் நிறைந்த பகுதிதான் என்றாலும் குளிர்ப் பிரதேசம் அல்ல. தமிழ்நாட்டின் சராசரி வெப்பநிலைதான் இங்கும் நிலவுகிறது. ஆனால், திடீர் திடீரென மழை வந்து தலை துவட்டும். அதுவும் பருவ காலத்தில் எப்போதும் சாரலடிக்கிற பூமி இது. எனவே, சுற்றுலாப் பயணிகள் தவிர்க்க வேண்டிய மாதங்களாக அதிக மழை பெய்கிற ஜூன், ஜூலை மாதங்களைச் சொல்கிறார்கள். டிசம்பர் மாதம் நல்ல சீஸன். மற்ற மாதங்களிலும் சுமாரான சீஸன் உண்டு.

படகு வீடுகளைப் பொறுத்தவரைக்கும் அந்திசாயும் நேரத்தில், ஏதேனும் ஒரு இடத்தில் நிறுத்தி விடுகிறார்கள். அதன்பிறகு, மீன்பிடிப்பதற்காக ஏரியின் இடையிடையே வலைவிரித்து வைத்திருப்பார்கள் என்பதாலும் இருட்டிய பிறகு ஒன்றும் தெரியாது என்பதாலும் இந்த நிறுத்தம். படகு வீட்டை ஏரிக் கரையை ஒட்டி ஒரு இடத்தில் நிறுத்துவதா, ஏரிக்குள்ளேயே நிறுத்துவதா என்பதெல்லாம் உங்கள் விருப்பம்தான். எங்கு படகு நிறுத்தப்பட்டாலும் பாதுகாப்பாகத்தான் இருக்கிறது. சிறு தவறு நடந்தாலும் அது ஒட்டுமொத்தத் தொழிலையும் பாதிக்கும் என்பதால் அதிக கவனமாக இருக்கிறார்கள்.

படகு வீட்டில் இரவு தங்குவதும் ஒரு சுகானுபவமே! அதுவும் பௌர்ணமி நாளாக இருந்துவிட்டால் ஆஹா..! நாம் ரசிக்க ரசிக்க நிலா காயும் நேரம் தேயும் பறவைகள் கூடடையச் செல்லும் ஒலியும் பாக்கு மரங்களின் இலை உதிரும் இசையும் சன்னமாகக் கேட்கும். இந்தத் தனிமையும் அமைதியும், அதுவரைக்கும் குடும்பத்தோடு கொண்டாடத் தவறிய தருணங்களை நினைவுபடுத்தும், மனம் நிறையும். தூளியில் இருக்கும் குழந்தையைத் தாலாட்டும் அம்மாவைப்போல வேம்பநாடு ஏரி, படகு வீட்டை மெலிதாய் தாலாட்டும். அப்படியே தூங்கிப் போவீர்கள். நடிகர் ஜெயராம், டைரக்டர் பாசில் போன்ற பல உள்ளூர் வி.ஐ.பி.க்கள் சொந்தமாகவே படகு வீடுகள் வைத்திருக்கிறார்கள்.

காலையில் படகு வீடு நம்மை ஏற்றிய இடம் நோக்கி நகருகிறது. படகு வீட்டைப் பொறுத்தவரை ஒரு நாள் என்பது 22 மணி நேரம்தான். பயணம் தொடங்கியதிலிருந்து நேரம் கணக்கிடப்படுகிறது. ஒரு முழு நாள் முடிந்தது.

தீர்ந்தது கண்களின் தாகம்!

பாம்பு படகுப் போட்டி, ஆலப்புழாவின் கோயில்கள், கொண்டாட்டங்கள்... அடுத்த இதழில். (திருச்சு வரும்)

## எங்கே தங்குவது?

படகு வீட்டிலேயே தங்கலாம். படகுகளுக்கு நாள் கட்டணம்தான். 22 மணி நேரம் என்பது இங்கு ஒரு நாள். ஒரு படுக்கையறை படகு வீடுகளுக்கு 4,000 ரூபாய் வரை கட்டணம். வசதிகளுக்கு ஏற்ப கட்டணம் கூடும். இரண்டு, மூன்று படுக்கையறை வீடுகள் என்றால் 10,000 ரூபாய். கான்.'ப்ரன்ஸ் ஹால், பால்கனி, பார் என ஒரு சின்ன பங்களா மாதிரி படகு வீடுகளுக்கு 30,000 ரூபாய் வாடகை. சுற்றிப் பார்க்க சிறிய ரக ஜெட் படகுகள் வாடகை 1,000 ரூபாய். ஆகஸ்ட் மாதம் தொடங்கி டிசம்பர் வரையான சீஸன் காலத்தில்தான் இந்தக் கட்டணம். மற்ற மாதங்களில் இதில் முக்கால்வாசி கட்டணம்தான்.

ஆலப்புழா - கொல்லம், கொல்லம் - ஆலப்புழா 8 மணி நேர படகுச் சுற்றுலாவை

தொடர்ச்சி 23ஆம் பக்கம்






TRIDEL
BUILT FOR LIFE

# நிறுவனத்தின் புதிய வரவு

## 10 YORK STREET - TORONTO



**SPECIAL VIP PRICE**

TRIDEL
BUILT FOR LIFE

## இன் அனுமதி பெற்ற நிறுவனம்

# HomeLife / GTA Realty Inc. Brokerage*

**5215 Finch Ave. E, #203, Toronto - Tel: 416.321.6969**

**145 Traders Blvd #29, Mississauga - Tel: 905.712.2666**

*Independently owned & operated

# அந்தப் படம் என்னுடையதல்ல!

## நேர்காணல்: காஜல் அகர்வால்

பாகிஸ்தான் நடிகை வீணாமாலிக் நிர்வாண போஸ் சர்ச்சையே இன்னும் முடிவுக்கு வரவில்லை. அதற்குள் அதே 'எ∴ப்.ஹெச்.எம்.' பத்திரிகை அட்டையில் நிர்வாண படம் வெளியான சர்ச்சையில் சிக்கிக் கொண்டிருக்கிறார், தமிழ் நடிகை காஜல் அகர்வால். 'பொம்மலாட்டம்', 'சரோஜா', 'நான் மகான் அல்ல' படங்களின் நாயகி காஜல் அகர்வால் மும்பைவாசி. ஆனாலும், தமிழ் மூலமே திரைத்துறைக்கு அறிமுகமானார். பிறகு தெலுங்கு, அதன்பிறகு பாலிவுட் என கால் பதித்தார். இப்போது, அஜய் தேவ்கனுடன் நடித்த இந்தி 'சிங்கம்' வெற்றி பரவசத்தில் இருக்கிறார். தமிழில் சூர்யாவுடன் 'மாற்றான்', விஜயுடன் 'துப்பாகி'ஆகிய படங்களுக்கு தயாராகிக் கொண்டிருக்கிறார். சர்ச்சைக்குரிய 'எ∴ப்.ஹெச்.எம்.' நிர்வாண படம் பற்றிய ஒரு சுருக்கமான பேட்டிக்காக சென்றால், 'விருந்து' மாதிரி ஒரு நீண்ட உரையாடலை நிகழ்த்தினார், காஜல் அகர்வால்.

உங்கள் சின்ன வயசு பற்றி சொல்லுங்கள்?

"எனது குழந்தைப் பருவம் அற்புதமானது. நான் மும்பையில் பிறந்து வளர்ந்தவள். எங்களது குடும்பம் ரொம்பப் பெரியது. அப்போது நான், எனது தங்கைகள் நிஷா, கசின் ஆகியோருடன் ரொம்ப சந்தோஷமாக இருந்தேன். கே.சி.காலேஜில் பி.எம்.எம். (மாஸ் மீடியா) படித்தேன். அக்காலங்களில் நான் ஒரு சாகச பைத்தியம். ஹாலிடேயில் அட்வென்சர் ஸ்போர்ட்ஸில் திளைப்பேன்."

நடிகை ஆவோம் என்று எதிர்பார்த்தீர்களா?

"இல்லை. என் ராசி மிதுனம். நான் ஒரு மல்டிபிள் பெர்சனாலிட்டி. சில நேரம் என்னையே எனக்குப் புரியாது. நான் எப்படி நடிகை ஆவோம் என எதிர்பார்த்திருக்க முடியும். பி.எம்.எம். படித்துக் கொண்டிருந்தபோது, லோரியல் நிறுவனத்தில் இன்டர்ன்ஷிப் செய்தேன். அதன் பிறகு, எம்.பி.ஏ. படித்துவிட்டு ஏதாவது ஒரு பெரிய கார்பரேட் கம்பெனிக்கு 'பிராண்ட் மானேஜர்' ஆவதே திட்டம். அக்காலங்களில் சினிமா பற்றி கனவிலும் நினைத்துப் பார்த்தது இல்லை. காலேஜில் படித்தபோதே எனக்கு நிறைய மாடலிங் ஆ∴பர்கள் வந்தன. அவற்றை நான் சீரியஸாக எடுத்துக் கொள்ளவில்லை. ஆனால், லோரியலில் உடன் வேலை பார்த்த நண்பர்கள் மாடலிங் செய்யச்சொல்லி என்கரேஜ் பண்ணினார்கள். அப்போதுதான் எனது முதல் சினிமா வாய்ப்பு பாரதிராஜா மூலமாக கதவைத் தட்டியது. அந்த வயதில் சினிமாவில் நடிப்பதற்குத் தயக்கமாக இருந்தது. ஆனால், ஆச்சரியமாக என் பெற்றோர்கள் ரொம்ப ஊக்கப்படுத்தினார்கள். நடிகையாவது தவிர்க்க முடியாததாகி விட்டது. எம்.பி.ஏ.வை தள்ளி வைத்துவிட்டேன்."

ஆனால், உங்கள் படம் பாலிவுட்டில் 'க்யோன்! ஹோ கயா நாஷ்'தானே... அந்த வாய்ப்பு எப்படி கிடைத்தது?

"அப்போது ஜூனியர் காலேஜில் படித்துக் கொண்டிருந்தேன். 17 வயது. எம்.டி.வியில் இருந்த எனது காலேஜ் சீனியர் அந்த சினிமா குழுவிடம் என்னைப் பற்றி கூறியுள்ளார். ஜாலிக்காகத்தான் அதை செய்தேன். எனவே, பாரதிராஜா அறிமுக நாயகி என சொல்லிக்கொள்வதுதான் சரி என நினைக்கிறேன். 'பொம்மலாட்டம்' தொடங்கிய போது, தென்னிந்திய திரைத்துறைப் பற்றி எதுவுமே தெரியாது. பாரதிராஜா மாணவியாக இருந்தது சந்தேகமில்லாமல் நல்ல பயிற்சி நல்ல அனுபவம்."

இந்தி 'சிங்கம்' அனுபவம் எப்படியிருந்தது?

"இந்தப் படத்துக்கு என் வாழ்க்கையில் எப்போதும் ஸ்பெஷல் இடமுண்டு. காரணம், இதன் மூலம்தான் நான் மீண்டும் இந்திக்கு சென்றிருக்கிறேன். இதற்கு முன்னாலும் நிறைய இந்தி சான்ஸ் வந்தது. ஆனால் அப்போது தமிழ், தெலுங்கில் எனது காலஷீட் நிறைந்து இருந்தது. சில நேரம் கேரக்டர்களும் என்னை வசீகரிக்கவில்லை. எனது தெலுங்கு சூப்பர் ஹிட் 'மகதீரா'வைப் பார்த்த டைரக்டர் ரோஹித் ஷெட்டி, இந்தி சிங்கத்துக்கு அழைத்தார். தமிழ் 'சிங்கம்' வெளியான முதல் நாளே பார்த்தேன். பிடித்திருந்தது. அடிச்சது லக்கி பிரைஸ் என்று ஓடிப் போனேன். ஹீரோ அஜய் தேவ்கன், கிரேட் ஆக்டர். 1991இல் '∴பூல் அவுட் கான்ட்டே' படத்தை பார்த்த காலத்தில் இருந்து நான் அவரது ரசிகை. அவரை ரொம்ப மதிக்கிறேன். ஸ்பாட்டில் எல்லோரையும் கிண்டல் செய்து ஜோக் அடித்துக்கொண்டு இருப்பார். அவர் நடிப்பதை பார்த்துக்கிட்டே இருக்கலாம். ரொம்ப ஈடுபாட்டோடு நடிப்பார். அது நம்மையும் ஈர்க்கும்."

இனிமேல் பாலிவுட்தானா?

"யார் அப்படி சொன்னது? பாலிவுட், தென்னிந்திய சினிமா இரண்டையும் சமமாக எடுத்துக்கொள்வேன். இந்தி எனது மொழி என்பதால் புரிந்துகொள்வதும் நடிப்பதும் ரொம்ப சுலபம். ஆனால், கடந்த நாலரை வருடங்களாக தென்னிந்திய சினிமாவில் இருப்பதால், இதனுடனும் நெருக்கமாகி விட்டேன். நான் தென்னிந்திய சினிமாக்களை காதலிக்கிறேன். எனவே இனி பாலிவுட், தென்னிந்தியா என இரட்டைக் குதிரையில்



**- சிவதானு -**

பயணிப்பேன். பாலிவுட்டும் தென்னிந்திய சினிமாவும் கிட்டதட்ட ஒரே மாதிரித்தான். உண்மையில் தற்கால சினிமா துறை இந்திய மாநில எல்லைகளைத் தாண்டி, கொஞ்சம் கொஞ்சமாக இந்தியா முழுவதற்குமானதாக மாறி வருகிறது."

முத்தம், நீச்சல் உடை காட்சிகளில் நடிப்பது பிடிக்காது என முன்பு சொல்லியிருக்கிறீர்கள். நெருக்கமான காட்சிகளில் நடிப்பீர்களா?

"எல்லோருக்கும் ஒரு வரையறை இருக்கிறது. ஹாட்டாக இருப்பது நல்லது என்று தோன்றலாம். ஆனால், என்னைப் பொருத்த வரை ஹாட்டாக இருக்க, உடலை காட்சிப்படுத்த வேண்டுமென்பதில்லை. ஒரு சேலை, ∴புல் ஸ்லீவ், டிஹர்ட் ஜீன்ஸ் போன்ற உடைகளில்கூட ஹாட்டாக இருக்கலாம். அது உங்கள் பார்வையையும் நீங்கள் எப்படிப்பட்டவர்கள் என்பதையும் ஸ்கிரீனில் சொல்லிவிடும். நம்பர் ஒன் நடிகையாக வேண்டும் என்பதில் எனக்கு நம்பிக்கை இல்லை. சிறந்த கதாபாத்திரங்களில் நடிக்க வேணடும் என்பதே விருப்பமாக உள்ளது. எனது பெற்றோர், தாத்தா, பாட்டியுடன் கம்∴பர்டபிளாக பர்ப்பதுபோல என் படங்கள் இருக்க வேண்டும்."

இப்படி சொல்கிறீர்கள் ஆனால், சமீபத்தில் ஒரு பத்திரிகை அட்டையில் உங்கள் அரை நிர்வாண படம் வந்திருந்ததே?

"ஜர்னலிசம் இவ்வளவு கீழ்த்தரமாக மாறும் என்று நான் எதிர்பார்க்கவில்லை. அந்தப் பத்திரிகைக்காக போட்டோ 'ஷூட்'டில் நான் கலந்துகொண்டது உண்மை. ஆனால், அந்தப் படங்களை என்னிடம் காட்டிவிட்டு, அதன்பிறகு பிரசுரிக்குமாறு சொல்லியிருந்தேன். அவர்கள் காட்டவில்லை. மாறாக, அதை கிராப் செய்து, ∴போட்டோஷாப்பில் ஒர்க் செய்து வெளியிட்டிருக்கிறார்கள். இது ரொம்ப சில்லியான விஷயம். வீணாமாலிக்கும் இதைத்தான் சொல்கிறார் என்பதை நீங்கள் கவனித்திருக்கலாம். சரி, அதைப் பற்றி கவலைபட்டு மண்டையை உடைத்து பிரயோஜனமில்லை இனிமேல் ஜாக்கிரதையா இருப்போம் என நினைத்திருக்கிறேன்."

உங்களை தொடர்ச்சியாக பயமுறுத்தி வரும் கனவு?

"ஒரு கட்டடத்தின் உச்சியிலிருந்து தவறி கீழே விழுவது போல..."

விமலின் 'இஷ்டம்' படம் மூலம் உங்கள் தங்கை நடிகையாக அறிமுகமாகிறார் போலிருக்கிறதே. அவருக்கு உங்கள் ஆலோசனை என்ன?

"அவள் வேலைகளில் எப்போதுமே நான் தலையிடுவதில்லை. வீட்டில்கூட வேலையைப் பற்றி விவாதிக்க மாட்டோம். ஆனால், நிச்சயம் அவளுக்கு உதவியாக இருப்பேன். அவள் சிந்தனைபடி அவள் செயல்படுவாள். அவள் திறமைசாலி. அவள் எதிர்காலம் பிரகாசமாக இருக்கும். அவள் மேல் எனக்கு நம்பிக்கை இருக்கிறது."

விஜயுடன் 'துப்பாக்கி' படத்தில் நடிப்பது பற்றி?

"நிச்சயம் எனக்கு இது ஒரு திருப்புமுனையாக இருக்கும். காரணம், இதுதான் முதன்முறையாக நான் ஒரு ஸ்டார் நடிகருடன் நடிப்பது. நடிகர்களில் இளைய தளபதி விஜய் போலவே, இயக்குனர்களில் ஸ்டார் முருகதாஸ். இருவருடனும் இணைந்து பணியாற்றுவது எதிர்காலம் குறித்த நம்பிக்கையை எனக்கு அளிக்கிறது. இதுவரையில் முருகதாஸ் திரைப்படங்களில் உள்ள கதாநாயகி கதாப்பாத்திரங்களை விட 'துப்பாக்கி' படத்தில் வரும் கதாநாயகி கதாபாத்திரம் பலமானது. நிச்சயம் இந்தப் படத்தை நான் பெருமையாக நினைக்கிறேன்."

கடைசி கேள்வி: காதல் திருமணம், நிச்சயிக்கப்பட்ட கல்யாணம் - உங்களுடையது எதுவாக இருக்கும்?

"காதல் என்பது முதல் பார்வையிலேயே வரும் என்கின்றனர். என்னைப் பொருத்தவரைக்கும் இது முட்டாள்தனமான வாதம். இருவருக்கிடையில் காதல் மலர்வதற்கு பல்வேறு காரணங்கள் உள்ளன. ஒருவரையொருவர் நன்றாக புரிந்துகொள்ள வேண்டும். இருவரின் எண்ணங்கள், ஆசைகள் பற்றி அறிய வேண்டும். அதன்பிறகு படிப்படியாக நெருக்கம் காட்டி பழகும் போது காதலும் வரும். ஆனால், எனக்கு காதலிக்க நேரம் இல்லை. தொடர்ந்து நடிப்பதால் அதை சிந்திக்கவும் இல்லை. என்னை முழுமையாக புரிந்துகொண்ட பொருத்தமான மாப்பிள்ளை கிடைத்தால் உடனே திருமணம் செய்துகொள்வேன். உங்களுக்கும் அழைப்பு அனுப்புகிறேன். கட்டாயம் வாருங்கள்."

Sales Reps. Welcome
For All your Real Estate & Investments Needs!
Raja M. Mahendran, P. Eng.
(Broker / Owner)

* INDEPENDENTLY OWNED AND OPERATED
HomeLife/GTA Realty Inc. Brokerage *
5215 Finch Ave E, #203 Toronto - 416.321.6969
145 Traders Blvd # 29, Mississauga - 905.712.2666

# கடவுளின்...

20ஆம் பக்கத்தொடர்ச்சி

மாவட்ட சுற்றுலா வளர்ச்சிக் கழகம் நடத்துகிறது. தினமும் காலையில் 10.30 மணிக்கு டி.டி.பி.சி. படகுத்துறையில் இந்தப் படகு புறப்படும். ஒருவருக்கு கட்டணம்: 300 ரூபாய். கோட்டயம் - ஆலப்புழா அரசுப்



படகில் பயணம் செய்ய 10 ரூபாய்தான் கட்டணம்.

அந்திப்பொழுதில், இரவுக்கான ஆயத்தங்களோடு மேற்கு சிவக்கும் நேரத்தில், படகு அநேகமாக லேக்பேலஸ் ரிசார்ட்ஸ் பகுதியைச் சென்றடையும். இது ஒரு தனியார் ரிசார்ட்ஸ். மிகப் பிரமாதமான வியூவில் அமையப் பெற்றிருக்கும் இம்மாதிரியான தனியார் ரிசார்ட்ஸ்கள் மற்றும் நல்ல ஓட்டல்கள் பயணப் பாதையில் ஆங்காங்கே இருக்கின்றன. மொத்தமாக நான்கைந்து நாட்கள் தங்குவதற்கு மிக சௌகர்யமான இடங்கள் இவை. வாடகை 1,000 முதல் 25,000 ரூபாய் வரை.

படகு வீடு, ஓட்டல்கள் இரண்டிலும் இணையம் வழியேயும் முன்பதிவு செய்யும் வசதி உள்ளது. நம் வசதிக்கு தக்க பதிவு செய்துகொள்ளலாம்.

## உணவு?

மெகா சைஸ் இறால், மீன் கறி எனப் பெரும்பாலும் மீன் வகை உணவுகளே ஆலப்புலாவில் பிரதானம். சைவ ஓட்டல்களும் உண்டு. கால்வாய் ஓரங்களிலேயே சாப்பிடுவதற்கு ரெஸ்டாரெண்ட்கள் உள்ளன. படகு வீட்டிலும் சமைத்துத் தருவார்கள்.




**LAW OFFICE**

**STEFANO FORTINI**

B.A., LL.B., Barrister & Solicitor

*3 Catherine Avenue,*
*Aurora, Ontario*
*L4G 1K4*

*Tel: 416.999.4376*
*Fax: 905.727.7017*
*Email: sfortini@rogers.com*



*Train to be a ...*

**Community Service Worker** *With CO-OP*



*Other Diploma Programs:*

**Computerized Accounting**

THE CANADIAN PAYROLL ASSOCIATION CPA ACP L'ASSOCIATION CANADIENNE DE LA PAIE

**Network Engineering**

Microsoft | IT Academy Program

**Business Administration**

**Medical Office Assistant**

EI, WSIB, ODSP Clients and New Immigrants welcome

Customized Corporate Training available for:
*MS-Office 2003, 2007, 2010*
*Upgrade MS-Office 2003 to 2007 or 2010*
*Microsoft server 2003 and 2008 Subjects*
*A+ Certification / Cisco CCNA*

OACC PROUD MEMBER ontario association of career colleges

You may qualify for
SECOND CAREER
If you are laid off after January 2005
Working less than 20 hours / week
Call us now for details
(416) 840-9179

citi COLLEGE

www.CitiCollege.ca

Call Now: (416) 840-9179

*Registered as a Private Career College under the Private Career Colleges Act, 2005*

Financial Assistance may be available to those who qualify

# BASEMENT RENT

**MARKHAM & ELSON**
1 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to TTC, school, mall, YRT. Avail. immediately. தனிநபர் அல்லது Couple விரும்பத்தக்கது.
தொடர்புகளுக்கு: 647.567.9877

**MORNINGSIDE & SHEPPARD**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry, kitchen, living hall. Close to TTC, mall. Avail. Anytime. Bachelor student preferred.
416.624.6895 / 416.498.7914

**MIDDLEFIELD & FINCH**
1 bedroom bsmt for rent. Sep. entrance, laundry, cable. Close to TTC, mall, temple. Avail. January 01, 2012.
தொடர்புகளுக்கு: 416.321.5619

**BRIMLEY & STEELES**
Brand new 2 bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to TTC, school, mall. Avail. January 01, 2012.
905.475.1036 / 647.994.8525

**MCCOWAN & MCNICOLL**
1 bedroom bsmt for rent. Sep. entrance, parking. Close to TTC, shopping. Avail. January 10, 2012. Single person or couple preferred.
தொடர்புகளுக்கு: 416.412.1580

**MCCOWAN & HIGHGLEN**
3 Bedroom bsmt for rent. Sep. entrance, laundry. Close to all facilities. அறைகள் தனித்தனியாகவும் கொடுக்கப்படும்.
தொடர்புகளுக்கு: 416.409.3841

**WARDEN & MCNICOLL & FINCH**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry, cable. Close to TTC, Bridlewood mall, school. Avail. immediately.
416.494.0850 / 416.315.5648

**MCCOWAN & STEELES**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, cable, laundry. Close to TTC, mall. Avail. immediately. No smoking.
416.923.9837 / 647.866.9837

**BRIMORTON & MCCOWAN**
1 Bedroom bsmt with washroom and kitchen for rent. Sep. entrance. Rent $550. Non smokers & Working people preferred.
தொடர்புகளுக்கு: 416.884.0513

**ALEXMUIR & FINCH**
(BETWEEN MIDLAND & BRIMLEY)
2 Bedroom bsmt for rent. Sep. entrance, kitchen, laundry, cable. Avail. Anytime.
416292.9640 / 416.453.4264

**MARKHAM & ELSON**
1 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to TTC, YRT, mall. Avail. immediately.
தனிநபர் அல்லது Couples விரும்பத்தக்கது.
தொடர்புகளுக்கு: 647.567.9877

**MORNINGSIDE & SEWELLS**
Newly renovated 2 bedroom walk-out bsmt for rent. 2 washrooms. அத்துடன் 4 அறைகள் கொண்ட வீடும் வாடகைக்கு உண்டு. தனித்தனியாகவும் கொடுக்கப்படும். Avail. immediately. Close to ttc, school, mall, stores, etc.
தொடர்புகளுக்கு: 416.551.8379

**MIDLAND & KINGSTON**
1 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.875.6869

**BRIMLEY & STEELES**
3 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry, cable. Close to bus, shopping, school, doctor's office. Avail. December 15, 2011.
தொடர்புகளுக்கு: 905.947.1356

**MCCOWAN & LAWRENCE**
1 Bedroom bsmt for rent. Close to all facilities. Avail. Anytime.
416.724.4752 / 416.902.1758

**KENNEDY & FINCH**
2 Bedroom walk-out bsmt for rent. Sep. entrance, parking, large living room. Close to TTC, school. No pets & No smoking. Avail. immediately. Couple or small family preferred.
416.574.5663 / 416.332.3781

**MARKHAM & DENISON**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to TTC, YRT, mall, bank. Avail. December 05, 2011.
தொடர்புகளுக்கு: 647.330.4886

**FINCH & MIDDLEFIELD**
New 2 bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to TTC, mall, temple, school. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 647.856.2671

**WARDEN & SHEPPARD**
2 Bedroom walk-out bsmt for rent. Sep. entrance, laundry, cable. Close to TTC, mall. Avail. immediately.
416.795.7321 / 416.419.7545

**MCCOWAN & ELSON**
2 Bedroom bsmt or rooms for rent. Sep. entrance. Car parking, cable, washer & dryer. Close to stores, school, TTC, 24 hrs. bus service & bus routes (129,130, 53).
647.706.1106 / 647.931.1443

**JANE & MAJOR MACKENZIE**
1 Bedroom bsmt for rent. சிறுகுடும்பம் விரும்பத்தக்கது. Close to all facilities.
தொடர்புகளுக்கு: 647.960.8045

**NEILSON & MCLEVIN**
1 Bedroom bsmt for rent. Sep. entrance, kitchen, laundry. Close to TTC, malvern mall, school. No smoking. Avail. immediately.
416.724.8727 / 647.280.6163

**MORNINGSIDE & SHEPPARD**
1 Bedroom bsmt for rent. Sep. entrance, 2 washroom, parking, laundry. Close to TTC, school, HWY 401. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.305.7317

**MORNINGSIDE & HWY 401/MCLEVIN**
1 or 2 Bedroom walk-out bsmt for rent. Sep. entrance, parking. Close to mall, wal-mart, nofrills, library, 4 elementary school, University. Small family or seniors preferred.
தொடர்புகளுக்கு: 416.834.1081

**MORNINGSIDE & OLDFINCH**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking. Close to school.
தொடர்புகளுக்கு: 647.836.0654

**MCCOWAN & ELLESMERE**
1 Bedroom Walkout Bsmt and Den for rent. Living Room, Kitchen, Full washroom, sep. entrance Close to TTC (McCowan Subway), School, Town Center and all Amenities. Quiet place. Avail. immediately.
416 265 9138 / 416 271 8467

**MCCOWAN & ELLESMERE**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to TTC, Scarborough town center. Avail. immediately. No pets & No smoking.
தொடர்புகளுக்கு: 647.780.3812

**MCCOWAN & DENISON**
2 Bedroom bsmt. apt. for rent. Sep. entrance. Parking, laundry, utilities inclu. Close to bus, shopping, school, etc. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 905.201.4812

**KENNEDY & EGLINTON**
1 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to TTC, mall. Avail. Anytime. பெண்கள் மட்டும் அழைக்கவும்.
தொடர்புகளுக்கு: 416.473.7482

**NEILSON & FINCH**
1 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to TTC, school. Avail. immediately.
647.210.4292 / 416.267.0072

**MARKHAM & EGLINTON**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to TTC, mall. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.271.6657

**MARKHAM & BRIMORTON**
2 Bedroom bsmt. for rent. Sep. entrance. Inclusive all bills. Parking. Close to all facilities. Also can provide separate rooms.
416.439.6080 / 416.906.5331

**WARDEN & ELLESMERE**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry, complete washroom & kitchen. Close to all facilities. Avail. immediately.
416.444.9326 / 416.294.1012

**KINGSTON & MORNINGSIDE**
Newly done 2 bedroom bsmt for rent. Sep. entrance, washer, dryer, parking. Close to TTC, school, shopping. Avail. immediately. No pets. Rent negotiable.
416.289.9507 / 416.720.9507

**14TH AVE. & MARKHAM**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to all facilities. No pets & No smoking. Avail. immediately. Rooms தனித்தனியாகவும் கொடுக்கப்படும்.
தொடர்புகளுக்கு: 416.833.8691

**MCCOWAN & 14TH AVE**
2 Bedroom bsmt for rent. Sep.entrance, parking, laundry. Close to YRT, school, mall. Avail. Anytime.
416.669.8711 / 905.201.8350

**MEADOWVALE & KINGSTON**
1 Bedroom bsmt for rent. Parking, laundry, full washroom. Close to all facilities. Avail. Anytime.
தொடர்புகளுக்கு: 647.344.0585

**VICTORIAPARK & ELLESMERE**
1 Bedroom bsmt. apt. for rent. Sep. entrance. Parking, laundry, utilities inclu. Close to TTC, mall & more. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.576.2655 / 416.444.2655 / 416.844.2655

**WARDEN & ELLESMERE**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to TTC, mall. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.970.7120

**BRIMLEY & EGLINTON**
1 Room in a bsmt for rent. Shared kitchen and washroom, sep.entrance, laundry, parking, hydro and cable included. No smoking. Working single male only. Convenient location. Very clean. Rent $350.
தொடர்புகளுக்கு: 416.268.5014

**MCCOWAN & LAWRENCE**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, kitchen, living room. Close to school, hospital, TTC. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.431.7570

**BIRCHMOUNT & MCNICOLL**
1 Bedroom bsmt for rent. Sep. entrance, parking. Close to TTC, mall. Avail. immediatelty.
647.783.4850 / 905.294.2674
416.293.6211

**WARDEN & SHEPPARD**
ஒரு அறை basement மூன்று நேரச் சாப்பாட்டுடன் வாடகைக்கு உண்டு. எல்லா வசதிகளும் அண்மையில் உண்டு. பெண்கள் அல்லது வயோதிபப் பெண்கள் விரும்பத்தக்கது. Avail. immediately.
416.299.4895 / 416.201.1222

**MARKHAM & STEELES**
3 + 1 Bedroom wall-out bsmt for rent. 3 parking, sep. entrance. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.450.9152


**ARE YOU LOOKING FOR TUTOR**
Reading, Writing, Math, English, Homework help.
**Teaches From:** JK / SK to Grade 5.
**Preparing for EQAO**
**Contact: 647.448.0281**



**இன்சுவை உணவுகள்**
We can delivery your home. **அப்பம்,** தோசை, கொத்துரொட்டி, குழல்பிட்டு, பிரியாணி மற்றும் Shorteats, cake பலகார வகைகள் ஓடருக்கு செய்து கொடுக்கப்படும்.
Birthday, ஒன்றுகூடுதல், விசேட நிகழ்வுகளுக்கு உங்கள் வீட்டில் வந்து special யாழ்ப்பாண அப்பம், தோசை சுடச்சுட செய்தரப்படும்.
Monthly சாப்பாடும் செய்து தரப்படும்.
தொடர்புகளுக்கு: 647.522.7599


வீடு, அறை, நிலஅறை (BSMT), கட்டிடம் வாடகை / விற்பனை விளம்பரங்களை ஐந்து நாட்களுக்கு முன்பாகத் தரவும்.

மேலும் பக்கங்கள் 25, 26

# ROOM RENT

**MARKHAM & BUR OAK**
1 Bedroom for rent. Close to all facilities. Ladies preferred. Avail. Anytime.
தொடர்புகளுக்கு: 905.472.8167

**SHEPPARD & MEADOWVALE**
1 Bedroom for rent. Parking, laundry. Close to TTC, University of Toronto. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 647.274.0989

**KENNEDY & LAWRENCE**
1 Room for rent. Attached washroom, 3 min. walk to Lawrence LRT. ஒருவர் விரும்பத்தக்கது. Available immediately.
416.994.9635 / 416.757.9456

**MCCOWAN & FINCH**
1 Bedroom for rent. Close to all facilities. Avail. January 01, 2012
தொடர்புகளுக்கு: 416.298.3797

**REEVES WAY & 9TH LINE**
Furnished room for rent in first floor. Cable, internet, parking, sep. washroom, shared kitchen. Small working couple or seniors preferred.
தொடர்புகளுக்கு: 905.591.2732

**FINCH & BIRCHMOUNT**
1 Bedroom for rent in a bsmt. Rent $325. Utilities included. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.890.5267

**LAKESHORE BLVD & ISLINGTON**
Rooms for rent. Close to all facilities. Avail. January 01, 2012.
தொடர்புகளுக்கு: 416.417.5059

**BRIMLEY & STEELES**
1 Room for rent. Close to all facilities. Avail. January 01, 2012.
தொடர்புகளுக்கு: 416.844.7550

**MARKHAM & STEELES**
1 Room for rent. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 647.703.1343

**BELLAMY & LAWRENCE**
Rooms for rent. Close to all facilities. Avail. immediately. Rent $280. All inclusive.
416.289.3459 / 416.433.0491

**KENNEDY & LAWRENCE**
Rooms available in main floor. Bsmt Apt. available. Close to subway, bus, stores...
தொடர்புகளுக்கு: 416.830.5560

**BELLAMY & LAWRENCE**
Bsmt இல் ஒரு அறை வாடகைக்கு உண்டு. Kitchen, laundry. Close to TTC, mall. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 647.861.3432

**MARKHAM & SHEPPARD**
சகல வசதிகளுடன் கூடிய 3 அறைகள் கொண்ட வீட்டில் ஒரு அறை வாடகைக்கு உண்டு. Sep. entrance. kitchen, washroom, parking, Laundry. Avail. immediately. Close to TTC, school, mall...
416.335.5242 /416.820.1999

**MIDLAND & EGLINTON**
1 Room for rent in 3 bedroom bungalow house. Close to all facilities. Ladies preferred. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.906.5013

# ROOM RENT

**MCCOWAN & EGLINTON**
2 Bedroon for rent. Close to all facilities. Avail. Immediately.
416.792.2545 / 647.857.9773

**BIRCHMOUNT & MCNICOLL**
Rooms for rent. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.293.6211

**LAWRENCE & PHARMACY**
**2** நேரச் சாப்பாட்டுடன் Room வாடகைக்கு உண்டு. 4 Bedroom bsmt இல் சகல வசதிகளுடன் உண்டு. குறைந்த செலவில் TVI, Sun TV, Vijay TV, free Internet தேவையெனில் ஒழுங்கு செய்து தரப்படும்.
தொடர்புகளுக்கு: 416.288.0303

**NEILSON & FINCH**
**MORNINGSIDE & FINCH**
Rooms for rent. Parking, laundry. Close to TTC, mall, school. Avail. immediately.
647.351.0422 / 416.825.9717

# CONDO FOR RENT

**MIDDLEFIELD & FINCH**
2 Bedroom condo. for rent. 2 Washroom, parking, laundry. Close to TTC, mall, temple. Avail. January 01, 2012.
தொடர்புகளுக்கு: 647.895.2394

# HOUSE FOR SALE

**NEILSON & SHEPPARD**
4 + 1 Bedroom town house for sale. Close to all facilities. Avail. Anytime.
தொடர்புகளுக்கு: 416.841.5301

# HOUSE FOR RENT

**MORNINGSIDE & SHEPPARD**
3 Bedroom house for rent. Parking, laundry. Close to all facilities. Avail. immediately.
647.293.7090 / 416.283.9696

**MORNINGSIDE & ELLESMERE**
4 Bedroom + 2 bedroom bsmt house for rent. Close to all facilities. University on Ellesmere Rd. Avail. Anytime. வீடு தனியாகவும் bsmt தனியாகவும் கொடுக்கப்படும்.
தொடர்புகளுக்கு: 647.201.2542

**MORNINGSIDE & SHEPPARED**
2 Bedroom house for rent. Close to all facilities. Avail. January 01, 2012.
தொடர்புகளுக்கு: 416.300.7595

**MORNINGSIDE & SHEPPARED**
3 Bedroom house for rent. Parking. Close to all facilities. Avail. January 01, 2012.
தொடர்புகளுக்கு: 416.839.9827

**KENNEDY & ELLESMERE**
சந்திப்புக்கு அருகாமையில் அமைந்துள்ள தமிழ் சுப்பர் மார்க்கட் ஒன்றின் மீன் பகுதிக்கு வேலை செய்வதற்கு ஆட்கள் தேவை. மேலதிக
தொடர்புகளுக்கு: 647.430.8238

**MORRISH & ELLESMERE**
3 Bedroom + 2 bedrooms bsmt house for rent. Sep. entrance to Basement Can be rented separately, Close to all facilities (TTC School& UFT and shopping compound)
416.724.7362 / 416.721.6231

# HOUSE FOR RENT

**NEILSON & FINCH**
4 Bedroom House + 1 Bedroom bsmt for rent. Close to all facilities. Avail. January 01, 2012.
தொடர்புகளுக்கு: 416.843.1568

**MCCOWAN & ELLESMERE**
3 Bedroom house for rent. Sep. entrance. Close to all facilities. Avail. immediately. No pets and No smoking.
தொடர்புகளுக்கு: 647.780.3812

**BRIMLEY & SHEPPARD**
3 அறைகளும் bsmt இல் 2 அறைகளையும் கொண்ட வீடு ஒன்று உடனடியாக வாடகைக்கு உண்டு. Sep. entrance. Close to TTC, park, mall, bank.
தொடர்புகளுக்கு: 647.824.7725

**MCCOWAN & LAWRENCE**
3 Bedrooms house for rent. Close to all facilities. Avail. Anytime.
416.724.4752 / 416.902.1758

**MARKHAM & ELLESMERE**
3 Bedroom house for rent. Parking. Close to TTC, high school, mall. Avail. Anytime.
தொடர்புகளுக்கு: 647.710.9526

**MORNINGSIDE & FINCH**
2 Bedroom upper level house for rent. 8 Hours work avail. Close to all facilities.
தொடர்புகளுக்கு: 647.857.8548

வீடு, அறை, நிலஅறை (BSMT), கட்டிடம் வாடகை / விற்பனை விளம்பரங்களை ஐந்து நாட்களுக்கு முன்பாகத் தரவும்.

# JOB JOB JOB

**MIDLAND & LAWRENCE**
Flooring stone experience sale person in scarborough.
தொடர்புகளுக்கு: 416.830.3932

# STORE FOR SALE

**KENNEDY & FINCH**
Video கடை ஒன்று விற்பனைக்கு உண்டு. 1350 Sq.ft.
தொடர்புகளுக்கு: 647.971.6032

# RESTAURANT FOR SALE

Scarborough வில் ஐந்து வருட காலமாக நல்ல நிலையில் இயங்கிக் கொண்டிருக்கும் தமிழ் உணவகம் ஒன்று விற்பனைக்கு உண்டு
647.333.9676 / 416.431.5931

# RESTAURANT FOR SALE

**BAR & GRILL**
**BATHURST & HWY 7**
Long lease for 4 years. 10 Years option. 125 Seats.
Contact: 416.556.9287

# RESTAURANT FOR SALE IN AJAX

நல்ல நிலையில் இயங்கிக் கொண்டிருக்கும் Restaurant ஒன்று விற்பனைக்கு உண்டு.
தொடர்புகளுக்கு: 416.795.4457
(Leave Message)

மேலும் பக்கங்கள் 24, 26

விளம்பரம் பத்திரிகையை இணையத் தளத்தில் வாசிப்பதற்கு ***www.vlambaram.com***

# ROOM FOR RENT

## BIRCHMOUNT & EGLINTON

1 Bedroom for rent in an apt. Close to கனடா கந்தசாமி கோவில், Warden & Kennedy Subway. Fully furnished. Parking. Rent $400. Avail. immediately. Full time working male person preferred. No smoking.

## ACCOMMODATION AVAILABLE

$275 Rent. Semi furnished. All facilities will be shared. Doing two jobs or very busy male person preferred. No smoking. ***Contact: 416. 907.6712***

***FOR RENT:*** Two Bed Rooms + Two Wash Rooms + Two Kitchens + Two Living Rooms + Large Space + Cable TV. Separate Entrance. Close to Port Union / 401. Available NOW. $970/=Plus 1/3 Utilities. OR Two can share with $575/= each without paying Utilities.

***K. Aloysius. Broker. 416.993.9709***
***Remax Vision Realty Inc. Brokerage.***
***2210 Markham Rd. Unit 1***
***Scarborough. On. 416.321.2228*** ***www.aloy.biz***



# மாணவர் பகுதி

S.F. Xavier (ஆசிரியர்)

BY. Mr. S.F. Xavier (Teacher) -TEL: 647.340.9490 / 647.831.0070

## Answers TUTORIAL 290

(1) $1/4a\ p_6 = 9.932116447 \times 10^{-11}$

(2) $f(x) = x + 4$, $g(x) = (x - 2)^2$ and $f(g(\upsilon(x))) = 4x^2 - 8x + 8$

$g(\upsilon(x) = (\upsilon(x) - 2)^2$ and $f(g(\upsilon(x)))) = f(\upsilon(x) - 2)^2)$

$= \upsilon(\upsilon(x) - 2)^2 = 4$ $=(a(x)^2 - 4\upsilon(x) + 8$

since $f(g(\upsilon(x)))$ is quadratic $\upsilon(x)$ must be linear. Let $\upsilon(x) = ax + b$

Now $(ax + b)^2 - 4(ax + b) + 8 = 4x^2 - 8x + 8$

$a^2 = 4$, $a=2$ or $a= -2$ $2ah - 4a = -8$, $b=or - 4b + 8 = -8$, $b = 4$

$\upsilon(x) = 2x$ or $\upsilon(x) = -2x + b$

(3) $f \circ g = f(5 - 2x)$ $= 2(5 - 2x) - 7$ $=10 - 4x - 7$

$= 3 - 4x$ Note $g1(n) = 5 - x/2$

$g^1 \times f^1 = g^{-1}(x + 7/z = 5 - x + 7/2 / 2 = 10 - x - 7/4 = 3 - x/4$

(4) $x^3 + y^3 - 3xy = 17$ $3x^2 + 3y^2\, dy/dx - [3y + dy/dx\ 3x] = 0$

At (2, 3) $12 + 27\, dy/dx - 9 - 6\, dy/dx = 0$

$21\, dy/dx = -3$ slope of the tangent is $-1/7$

$dy/dx = -1/7$ Therefore the slope of the normal at (2, 3) is 7.

Equations of normal $y - 3/ x - 2 = 7$ $y - 3 = 7x + 14$ or $7x - y - 11 = 0$

(5) $V = \sqrt{b^2 + 2gs}$ $v = (b^2 + 2gs)^{1/2}$

$dv/dt = 1/2\,(b^2 + 2gs)^{-1/2}$, $(o + 2g\, ds/dt$

$a = 1/2v\ 2gv$ $= g =$ constant.

### Tutorial 291 Questions

(1) There are seven seats in the family's new mini - van. If Four of the seven family members can drive, how many possible seating arrangements are there for a family trip in the van. (For Gr. 12)

(2) The probability that sureka will go to Toronto university is 1/2. The probability that she will go to another university is 1/5. If sureka goes to Toronto university her girl friend selene go to Toronto university is 3/4. What is the probability that both attend Toronto university? (For Gr. 12)

(3) Determine the constants a and b such that f(x) is continuous for all value of x.

$f(x) = \{ax + 3$ if $x > 5$ 8 If $x = 5$

$x^2 + bx + a$ if $x < 5$ ( For Gr. 12)

(4) Evaluate $\lim_{x - 0} \frac{(x + 8)^3 - 2}{x}$ (For Gr. 12)

(5) Evalute $\lim_{x \longrightarrow 0} \frac{\sqrt{x + 1} - \sqrt{2x + 1}}{\sqrt{3x + 4} - \sqrt{2x + 4}}$ of the incterminete quotial? (For Gr. 12)

# முல்லை பெரியாறு...

03ஆம் பக்கத்தொடர்ச்சி

நஷ்டங்களைத் தமிழகம் தாங்கிவந்த நிலையிலும் கேரளா சிக்கலைத் தொடர்ந்தது. பிரச்சினை உச்ச நீதி மன்றத்துக்கு சென்றது. உச்ச நீதிமன்றம் வல்லுனர் குழுவை அனுப்பி அணையை ஆராய்ந்தது. அவர்கள் அறிக்கைபடி நீர்மட்டத்தை 136 அடியில் இருந்து 142 அடி வரை உயர்த்த 2006ஆம் வருடம் உத்தரவிட்டது. ஆனால், கேரள அரசு இந்த உத்தரவை ஏற்க மறுத்தது.

உச்சநீதிமன்றம் முல்லைப் பெரியாறில் முழு நீர் மட்டத்தினை 136 அடியிலிருந்து 142 அடியாக உயர்த்தலாம் என உத்தரவு கொடுத்தப் பிறகு, 'பேச்சுவார்த்தை மூலம் முடிவு செய்யலாம். நீங்கள் வேண்டுமானால் 152 அடிக்கு புது அணை கட்டிக் கொள்ளுங்கள்' என்றார் கேரள முதல்வர் அச்சுதானந்தன். இது, காலம் கடத்துவதற் கான தந்திரமே தவிர இது வேறு ஒன்றும் இல்லை என்பது சுலபமாகப் புரியும் விஷயம்.

இந்நிலையில் தொடர்ந்து கேரளா பிரச்சினைகள் உருவாக்கவே மீண்டும் முல்லைப் பெரியாறு அணையின் பலம் குறித்து ஆய்வு செய்ய இந்திய உச்சநீதி மன்றத்தால் ஒரு குழு நியமிக்கப்பட்டது. இந்தக் குழுவின் தலைவராக உச்சநீதிமன்றத்தின் முன்னாள் தலைமை நீதிபதி ஏ.எஸ்.ஆனந்த், இந்திய அரசின் நீர்வளத்துறை அமைச்சகத்தின் முன்னாள் செயலாளர் சி.டி.தட்டே, இந்திய அரசின் நீர் ஆணையத்தின் முன்னாள் தலைமைப் பொறியாளர் பி.கே. மோஹுதா, தமிழ்நாடு அரசின் பிரதிநிதியாக உச்ச நீதிமன்றத்தின் முன்னாள் நீதிபதி ஏ.ஆர்.லட்சுமணன், கேரள அரசின் பிரதிநிதியாக உச்ச நீதிமன்றத்தின் முன்னாள் நீதிபதி கே.டி.தாமஸ் ஆகியோர் இடம்பெற்றுள்ளனர். இவர்களின் அறிக்கை விரைவில் வெளிவரவுள்ளது. இந்த அறிக்கை கேரளாவின் பொய் பிரசாரத்துக்கு எதிராக இருக்கும் என்பதை அறிந்துகொண்ட நிலையில்தான், மீண்டும் பிரச்சினையைத் தொடங்கியுள்ளது கேரள அரசு.

நிலமை இவ்வாறு இருக்க தமிழ்நாடுதான் ஏதோ குற்றம் செய்துவிட்டதாக பேசி வருகிறார்கள் கேரளா அரசியல்வாதிகள். இது முழுக்க முழுக்க அரசியல் காரணங்களுக்காக சொல்லப்படும் புரளியே தவிர, தொழில்நுட்ப அடிப்படையில் ஒரு சதவிகிதம்கூட இதில் உண்மையில்லை என்பது ஓரளவு விவரம் தெரிந்தவர்கள் அனைவருக்கும் புரியும்.

முல்லைப் பெரியாறில் கேரளா பிரச்சினை செய்வதன் உண்மையான நோக்கம் அதன் கீழ்பகுதியில் இருக்கும் இடுக்கி அணைதான் என கேரளாவைச் சேர்ந்தவர்களே சொல்கிறார்கள். முல்லைப் பெரியாறு அணையைவிட 34 மடங்கு பெரியதாக இது கட்டப்பட்டுள்ளது. இந்த அணைக்கு தண்ணீர் கொண்டு வரத்தான் முல்லைப் பெரியாற்றில் அவர்கள் பிரச்சினை செய்கிறார்கள். இடுக்கி அணை கட்டப்பட்ட பிறகே அவர்கள் பிரச்னையை ஆரம்பித்தார்கள் என்பதை கவனிக்கலாம்.

MATH, SCIENCE & ENGLISH TUITION

Math & Physics taken for all grades from grade 4 to 1st year university. Special classes in advanced functions, calculus and vectors and data management & English from grade 4 to 8.

Classes available at *Scarborough & Stouffville*

***Contact: 647.340.9490 / 647.831.0363***

# டேம் 999

தமிழகத்தில் தடை செய்யப்பட்டாலும் 'டாம் 999' கேரளாவில் வெளியாகியுள்ளது. மிகச் சாதாரணமான, வழக்கமான ஒரு சினிமா செண்டிமென்ட் கதை. இதில், வியாபார நோக்கத்துக்காக பரபரப்பை உருவாக்க அணை உடைவது போல ஒரு காட்சியைச்




சொருகி உள்ளார்கள்.

உட்கார்ந்து முழுபடத்தையும் பார்க்க முடியாது. அப்படியொரு சொதப்பல். மலையாளிகள் ஆங்கிலம் பேசுவது போல் உள்ள வசனங்கள் ஒட்டவில்லை. அணை உடையும் காட்சியை 'மினியேச்சர் செட்' போட்டு எடுத்திருக்கிறார்கள். அது தொழில்நுட்ப ரீதியாக மிகப் பலவீனமாக உள்ளது. அணை உடையும் நிலையில், ஷட்டரை கதாநாயகி திறக்க முயற்சிப்பது நம்ப முடியாத காட்சி.

"நாயின்ட்ட மோன், எந்தா சினிமா எடுத்திரிக்குன்னு.... நாட்டில் ஒரே ஒரு டிவி ரிப்போர்ட்டர் மட்டும்தான் இருக்கிறாரா..?" என்ற படி வசைமாரி குரல்கள், அரங்கத்தில் ரசிகர்களிடமிருந்து பறக்கிறது. கேரளாவில் நல்ல படம் என்றால் படம் முடிந்ததும் கைதட்டுவார்கள். இங்கே ஒரே கூக்குரல். "நம்முடெ காசு போயே!" என்று அலறல்.

எதிர்பார்த்த வெற்றியையும் மக்களிடையே தாக்கத்தையும் ஏற்படுத்தவில்லை, 'டாம் 999'.

# இளையோர் ஆக்கம்


விளம்பரம் தனது எழுத்தாளர்களை வருடம் தோறும் தை மாதத்தில் வரும் முதல் சனிக்கிழமை கௌரவிக்கின்றது. கடந்த வைபவத்தில் பல எழுத்தாளர்கள் விளம்பரத்தில் அடுத்த தலைமுறையை எழுதத் தூண்டவேண்டும் என்று கேட்டு கொண்டார்கள். அதற்கு இணங்க விளம்பரத்தின் பொங்கல் இதழ் உடன் **இளையோருக்காக இளையோரால் தமிழில் எழுதப்படும் ஆக்கங்களை பிரசுரிக்கப்படுகின்றது.**

இதில் 19 வயதும் அதற்கு உட்பட்டவர்களும் தமிழில் எழுதும் சொந்த ஆக்கங்கள் கதை, கட்டுரை, கவிதை எதுவாக இருந்தாலும் தரமானதாயின் பிரசுரிக்கப்படும்.

# தமிழ் எனது உயிருக்கு மேல்

நாம் தமிழர். நம் தாய் மொழி தமிழ். எம்மை அடையாளப்படுத்துவது எமது மொழி. எனவே எமது மொழியை நாம் கசடறக் கற்க வேண்டும்.

'தமிழன் என்று சொல்லடா
தலை நிமிர்ந்து நில்லடா'




தமிழர் யுத்தம் காரணமாக பல்வேறு நாடுகளில் புலம்பெயர்ந்து வாழ்ந்து வருகின்றனர். ஒவ்வொரு நாட்டிலும் வேறு வேறு மொழிகள் இருக்கின்றன. எம்மை தமிழர் என அடையாளப்படுத்துவது மொழியே. எனவே எம் தாய் மொழியை தவறாமல் கற்க வேண்டும்.

'உலகினிலேயே தமிழ்மொழி போல்
இனிதான மொழி வேறெங்கேயும் காணோம்'

தமிழ் மிகவும் பழமையான மொழி. 2,200 வருடங்களுக்கு மேல் பழமையானது திருவள்ளுவரின் திருக்குறள். கம்பரின் இராமாயணம், மகாபாரதம் போன்றவை தமிழில் சிறப்பு பெற்ற சில நூல்கள் ஆகும். உலகினிலே 9 கோடி தமிழ் மக்கள் வாழ்கின்றனர். இதில் 8 கோடி மக்கள் இந்தியாவிலும் (அதிலும் 7 கோடி மக்கள் தமிழ் நாட்டிலும்) ஏனைய ஒரு கோடி மக்கள் உலகின் பல்வேறு நாடுகளிலும் வாழ்ந்து வருகின்றனர்.

இவர்களில் நானும் ஒருவன் என்பதில் பெருமைப்படுகின்றேன். தமிழை வளர்க்க தமிழரிடம் தமிழில் பேசுவோம்.

லி. ஆகாஸ்
அகவை 9
வரசித்தி விநாயகர் இந்துக்கல்லூரி

## CAR WANTED

Toyota camry 1995 - 1998. 4 Cylinder. Any condition.
தொடர்புகளுக்கு: 416.832.1359

## மணமகன் தேவை

1985 ஆம் ஆண்டு அனுஷ நட்சத்திரத்தில் பிறந்த கனடாவில் வாழும் University பட்டப்படிப்பை முடித்து நல்ல வேலையில் இருக்கும் இந்து வேளாளர் குலத்தைச் சேர்ந்த பெண்ணுக்கு நன்கு படித்த, குணமுள்ள மணமகனை பெற்றோர் கனடாவில் தேடுகின்றனர்.
தொடர்புகளுக்கு: 416.433.8394

## மணமகள் தேவை

யாழ்ப்பாணத்தை பிறப்பிடமாகவும் வாழ்விடமாகவும் கொண்ட 2இல் செவ்வாய் உள்ள 34 வயதுடைய B.A. பட்டதாரியான மாப்பிள்ளைக்கு நல்ல குணமுடைய மணமகளை பெற்றோர் தேடுகின்றனர்.
தொடர்புகளுக்கு: 416.768.8105

## COMPUTER REPAIR

- கணனி திருத்தவேலைகள்
- கணனி தேவைகள்
- அடிப்படை கணனி பயிற்சி
- இலவச ஆலோசனைகள்



**Pro-Win Computers**
**919 Ellesmere Road, Unit - 302**
**416-879 7489 / 647-340 5568**
**(Kennedy & Ellesmere)**

## CONDO. FOR RENT OR SALE

***MIDDLEFIELD & FINCH***

2 Bedroom bsmt for rent. Close to TTC, mall, temple. Avail. January 15, 2012.
416.282.2668 / 416.799.0352

## மணமகன் தேவை

1985 இல் பிறந்த பல்கலைக்கழகப் பட்டதாரியான 8இல் செவ்வாய் உள்ள மணமகளுக்கு ரொரன்ரோவில் படித்த வேலை புரியும் நற்குணமுள்ள மணமகன் தேவை.

தொடர்புகளுக்கு: விளம்பரம்
***5215 FINCH AVE. E.,***
***#201, TORONTO, ON M1S 0C2,***
***CANADA***

## FURNITURES FOR SALE

புடவைக்கடைக்கு அல்லது நகைக்கடைக்கு உகந்த தளபாடம் விற்பனைக்கு உண்டு.
8 Pieces & show case.
தொடர்புகளுக்கு: 416.835.0014

## SAREE BLOUSE

**தையல் தேவைகளுக்கு**

சாறி Blouse உட்பட அனைத்து தையல் தேவைகளுக்கும் மற்றும் சாறியில் இருந்து நூல் எடுத்து குஞ்சம் பின்னியும் கொடுக்கப்படும். சாறி Blouse ஒன்று தைப்பதற்கு $20.
தொடர்புகளுக்கு:905.492.0259

மேலும் பக்கங்கள் 24, 25

விளம்பரம் பத்திரிகையை இணையத் தளத்தில் வாசிப்பதற்கு ***www.vlambaram.com***

## EATON ACADEMY

An Ontario Private School Registered with the Ministry of Education.

***ALL HIGH SCHOOL CREDIT COURSES OFFERED***

Courses Start in December, February, July and August

For Registration and Further Details Call

***Contact: 416.669.3101***

***80 Nashdene Road, Building D, Unit 220 (MARKHAM & NASHDENE)***

## OFFICE SPACE FOR RENT

***MORNINGSIDE & SHEPPARD***

Real Estate, Mortgage, Insurance offices **போன்றவையும்** Show Room **உம் நடத்தக்கூடிய இடம் வாடகைக்கு உண்டு.** ***Including High-speed Internet, Electricity, Heating, Water.***

***Pl. Call: Murale - 416.569.4065***

நத்தார் புதுவருட வாழ்த்துக்கள்

தினேஸ் ஜெகநாதன்
விற்பனை முகவர்




cell: **647-895-3466**
email: jdinesh@live.ca
office: 416-298-3200

**HomeLife Today Realty Ltd.,** Brokerage*
**31 Progress Ave., Suite 210, Toronto, Ontario, M1P 4S6**
*each office independently owned and operated
** Not intended to solicit Buyers/Sellers under representation agreement.

# ஆறுமுகநாவலர்

இயற்கை வளம் கொண்ட ஈழம் சிவபூமி என்னும் பெருமைக்குரியது. இதில் யாழ்ப்பாணம் பல சான்றோர் வாழ்தவர்கள் என்ற சிறப்புக்குரியது. பண்டைய மன்னர்களின் வரலாற்றுச் செய்திகளையும் கொண்டதாகும். நல்லூரில் வாழ்ந்த சித்த வைத்தியர், நாடகப்பேராசிரியர் திரு. கந்தப்பிள்ளை அவர்களுக்கும் அகத்துணைவியார் சிவகாமியம்மையார் என்னும் உத்தமிக்கும் புகழ்மிக்க தெய்வீகமகனாக 18.12.1822 புதன்கிழமை பிறந்த ஆண்குழந்தை தான் ஆறுமுகப்பிள்ளை அவர்கள். இவர் 'ஆறுமுகநாவலர்' என்ற நற்பெயருடன் வாழ்ந்து பல நற்பணிகளை செய்து 05.12.1879 வெள்ளிக்கிழமை மகநாளன்று தமது ஐம்பத்தேழாவது வயது நிறையும் போது இறைவன் திருவடியைச் சேர்ந்தார். இவர் மாசற்ற துறவு வாழ்க்கையை மேற்கொண்டு அந்நியர் ஆட்சியில் தமது சமயத்தையும் மொழியையும் கலாசாரத்தையும் காத்த உத்தமப்பெரியார். தமிழ், ஆங்கிலம், வடமொழி ஆகியவற்றில் மிக்க புலமையைக் கொண்டு திகழ்ந்தார். இவர் இருபாலைச் சேனாதிராசா முதலியார் இடமும் நல்லூர் சரவண முத்துப் புலவரிடமும் முறையான தமிழ் கல்வியை தெளிவாகப் பெற்றவர். நாலவர் தமது 12 ஆவது வயதில் பீற்றர் பார்சீவல் பாதிரியார் நிறுவிய யாழ்ப்பாணம் மத்தியகல்லூரியான ஆங்கில பாடசாலையில் சேர்ந்து கல்வி பயின்றார். பீற்றர் பார்சீவல் பாதிரியார் இவரின் ஆங்கிலப் புலமையைக் கண்டு வியந்து பாராட்டியுள்ளார். இவர் நாவலரிடம் தமிழ் மொழியைக் கற்று மகிழ்ந்தவர். நல்லை நகர் பெருமானைக் கொண்டு பைபிளைத் தமிழில் மொழிபெயர்த்து சென்னையில் நூல்வடிவில் வெளியிட்ட பெருமை பார்சீவல் பாதிரியாருக்குரியதாகும். இதனால் நாவலர் கிறிஸ்தவ சமய மக்களின் மத்தியில் நல் ஆதரவையும் பெற்றுத் திகழ்ந்தார். காலத்திற்கு ஏற்ற வகையில் பல நற்பணிகளை மேற்கொண்டு சைவசமய மக்கள் உள்ளத்தில் சைவமும் தமிழும், இறைபக்தியும் உறுதி பெறச் செய்தார். இவரின் தெய்வீகப்பணி ஈழத்திற்கு அப்பால் உள்ள தமிழகத்திலும் நிலை பெற்று விளங்கியது எனலாம். இவ்விரு இடங்களிலும் அச்சுக் கூடம் நிறுவி பதிப்பித்த நூல்கள் யாவும் தமிழ் மக்களுக்கு விழிப்புணர்ச்சியையும் உருவாகியது. இதனைவிட சைவமக்கள் இவரின் வாக்கினை தெய்வ வாக்காகப் போற்றி நம்பிக்கைகுரியவராக திகழ்ந்தனர்.

தமக்கென வாழாது பிறர்கென வாழ்ந்து செய்த நற்பணிகள் யாவும் வாழையடி வாழையாக தமிழ் மொழியும், சமயமும் நிலை பெறுவதற்கு வித்தாக திகழ்ந்தது எனலாம். 'ஆலயம் தொழுவது சாலவும் நன்று' என்பது ஔவை வாக்காகும். இதனை மக்கள் மத்தியில் சிறப்பாக அந்நியர் ஆட்சியில் நிலைநிறுத்திய பெருமை இவரின் நற்பணியில் ஒளிச்சுடர் கொண்டு விளங்கியது என்பது உண்மை. இவரின் அரிய பணிகளை போற்றிய சேர். முத்துக்குமாரசுவாமி அவர்கள் இவரை 'வட இலங்கையில் இந்துக்களுள் இந்து மகான்' என்று போற்றி சிறப்பித்துள்ளார். 'சைவப்பிரசாரகர்' என்ற திருப்பெயரையும் இவர் பெற்றுத் திகழ்ந்தார். 'செயற்கருஞ் செய்கை செய்த தீரரே' என்று சைவசமய மக்கள் போற்றியுள்ளமை நினைவு கொள்ளத்தக்கது. இவர் சமய சீர்த்திருத்தவாதியாகவும் திகழ்ந்தார். இதனால் 'சமய நாயகன்' என்னும் நாமத்தையும் பெற்றுத்திகழ்ந்தார். நாவலர் பெருமானின் மறைவின் பின்னர் சைவமக்கள் இவரின் காலப்பணியைப் போற்றி ஐந்தாம் சமய குரவராகப் போற்றி குருபூசை செய்து அகம் மகிழ்ந்துள்ளார்கள். இவரின் நற்பணியை பின்பற்றி மாணவர்களும், அக்காலத்து அறிஞர்களும் தொடர்ந்து செய்து அவரின் விருப்பத்தை நிறைவு செய்தமையை அனுபவாயிலாகத் தெளியலாம். இவரின் கல்விப்பணி, சமூகப்பணி, பதிப்புப்பணி, அச்சகப்பணி உரைநடைப்பணி, பிரசங்கப்பணி யாவும் எக்காலத்திற்கும் நிலைத்து நிற்கும் தன்மையைக் கொண்டதாகும். இதனால் நாவலர் 'சைவப்பெரியார், தமிழ்பெரியார்' என்ற பெரும்புகழைப் பெற்றுள்ளார். நாவலர் செய்த நற்பணிகளால் உலக பேரறிஞர்களின் வரிசையில் நிலையான இடத்தினையும் பெற்றுள்ளார். மாணவர்களுக்கு இலவசக்கல்வியை நல்கி புலமையை திறம் செய்த பெரியார்களின் வரிசையில் இவரும் ஒருவர் எனலாம். இவரது முதலாவது சமயவிரிவுரை 1847 ஆண்டு டிசம்பர் மாதத்தில் யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணை வைத்தீஸ்வரன் ஆலயத்தில் இடம்பெற்றது. இதனைத் தொடர்ந்து ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் தவறாது சமயவிரிவுரையை இறுதி மூச்சுவரையும் செய்தவர் நாவலர் பெருமான்.



'சிவாயநம' என்னும் மகாமந்திரத்தை இமைப்பொழுது மறவாது போற்றியவர் நல்லைநகர் நாவலர் பெருமான். சிவபூசை வழிபாட்டினை தினமும் செய்து அகம்மகிழ்வார். சிவசின்னங்களை அணிந்து தினமும் காட்சியளிப்பவர். இதனால் அவன் அருளால் அவன்தாள் வணங்கும் பாக்கியத்தை இப்பிறவியில் பெற்ற தெய்வம் இவர் எனலாம்.

தேனாய் இன் அமுதமுமாய் தித்திக்கும் சிவபெருமான் திருக்கோலங்காட்சியை பலமுறை சிதம்பரத்தில் நேரில் கண்டு உவகை பெறுவார். இதனைவிட நாயன்மார்கள் பாடிய திருக்கோயில்களை தமிழகத்தில் கண்டு தரிசனம் செய்து ஆற்றிய சமயச் சொற்பொழிவுகள் மக்கள் மத்தியில் நல்ல மதிப்பினைப் பெற்றுத் திகழ்ந்தது எனலாம். தனது திடமான இறைவழிபாட்டினால் ஆனந்தம் பெற்று அவர் அருள் செய்த நற்பணிகள் யாவும் நாவலருக்கு அழியாப் பெரும்புகழை அளித்து உள்ளது எனலாம்.

'அரவாடச் சடை தாழ அங்கையினில் அளவேந்தி
இரவாகும் பெருமானை என் மனத்தே வைத்திடுவேன்'

என்ற தெய்வீகக் குறிக்கோளைக் கொண்டவர் நாவலர் பெருமான் அவர்கள். மேலும் 'நான்குமறை பயில்தில்லையம் பலத்தே கண்டேனே' என்ற தெய்வீக மந்திரத்துடன் தன்உயிர் நீத்த பெருமை நாவலருக்கு இறைஅளித்த தெய்வீகப்பரிசாகும். நல்லூரில் நாவலர் சிலை 29.06.1969 ஆம் ஆண்டு நிறுவப்பட்டது. கனடாவில் நாவலர் சிலை விழா 24.09.2004 ஆம் ஆண்டு ரிச்மண்கில் பிள்ளையார் ஆலயத்தில் இடம்பெற்றது. இச்சிலை கனடா அருள்மிகு நல்லூர் முருகன் ஆலயத்தில் 7.11.2004 ஆம் ஆண்டு பிரதிட்சை செய்யப்பட்டது. இப்பொழுது இச்சிலை 1473 இலக்கம் கொண்ட பேர்ச்மவுண்ட் வீதியில் உள்ள ஆத்மஜோதி நிலையத்தில் நிரந்தரமான இடத்தில் வைக்கப்பட்டு பூசைவழிபாடுகள் இடம்பெறுவதைக் காணலாம். ஆத்மீகவள்ளல் திரு. நா. முத்தையா அவர்களால் கனடாவில் ஒன்ராரியோ இந்து சமயப்பேரவை 03.07.1994 அன்று நிறுவப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

கனடாவில் நாவலர் சிலை அமைப்பதில் சைவமக்கள் பலர் நல்லாதரவை நல்கினர். இவர்களுள் திருகோணமலைச் சேர்ந்த அன்பர் திரு மார்க்கண்டு செல்லத்தம்பி குறிப்பிடத்தக்கவர். நாவலரின் நற்பணி கனடாவில் வாழும் தமிழ்மக்களின் உள்ளத்தில் ஒளிச்சுடராகத் திகழவேண்டும் என்ற குறிக்கோளைக் கொண்டு திரு. மார்க்கண்டு அவர்கள் பணி செய்தார். இலண்டன் சைவ முன்னேற்றச் சங்க மண்டபத்திலும் நாவலர் சிலை நிறுவப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

சைவக்காவலாளியாகிய நாவலர் பெருமானை அன்னாரின் நினைவுநாளில் போற்றி வழிபட்டு அவர்காட்டிய நற்பணியை நாமும் தொடர்ந்து செய்து அவன் அருளை இப்பிறவியில் பெறுவோமாக!

நாவலரின் பதிப்பு நூல்கள் யாவும் 'தூயமதிப்பு' என்பது தமிழ் அறிஞர்களின் கருத்தாகும். அவரது சிறுவர்களுக்கான நூல்களில் சைவ வினாவிடை குறிப்பிடத்தக்க நூல் ஆகும். ஈழத்தில் கந்தபுராணக்கலாச்சாரம் நிலை பெறுவதற்கு கலங்கரை விளக்காகத் திகழ்ந்தவர் நாவலர் அவர்கள்.

**திரு. அ. சிவானந்தநாதன்**
**கனடா**


**கனடா மாதகல் நலன்புரி சங்கம் - கனடா**

**சிறுவர்களுக்கான சிறப்பு நிகழ்ச்சி**

**மார்கழி ஒன்றுகூடல் - 2011**

காலம்: டிசம்பர் 28ஆம் நாள் 2011. மாலை 5.30
இடம்: *The Church of the Nativity*
*10, Sewells Road, Scarborough. ON*
*M1B 3G5 (NEILSON & SEWELLS)*

கனடாவிற்கு கல்வி கற்கும் மாதகலைச் சேர்ந்த சிறுவர்களில், தமது பாடசாலையில் வகுப்புப் பாடங்களில் 2010, 2011ஆம் கல்வியாண்டுகளில் 80 புள்ளிகளுக்குக் கூடுதலாகப் பெற்றவர்கள் மேடைக்கு அழைக்கப்பட்டு மதிப்பளிக்கப்படவுள்ளனர்.

தகுதியுடையோர் தேர்ச்சி அறிக்கையுடன் விண்ணப்பிக்கவும். ஒருவர் ஒரு பாடத்திற்கு மட்டும் விண்ணப்பிக்கலாம். வேறு சான்றுகளும் ஏற்றுக்கொள்ளப்படும். விண்ணப்பிக்கும் கடைசி நாள்:
*November 30, 2011.*
மின்னஞ்சல் முகவரி: *arul_mbsoc@yahoo.ca*

*416.298.2158 / 416.282.0947/417 905.472.7698*

# இன்னொரு... ஆச்சி வீடு

**பாகம் - 3 பகுதி 30**

தொடர்கதை - பரபரப்பு, மர்மம், வியப்பு என்பன நிறைந்த இக்கதையில் வரும் பெயர்கள் சம்பவங்கன் அனைத்தும் கற்பனையே இன்னொரு....வின் முதற்பகுதியில் பரபரப்பைப் பார்த்தீர்கள். இரண்டாம் பகுதியில் துலக்கப்படாத மர்மத்தின் ஊடாகச் சென்றீர்கள். இந்த மூன்றாம் பகுதியிலோ பல வியப்பான சம்பவங்களைக் காணப் போகின்றீர்கள்.

அறை கொஞ்சம் விசாலமானதாகவே இருந்தது. இரண்டு, எதிர் எதிர்ச் சுவர்களை ஒட்டியவாறு இரண்டு கட்டில்கள் போடப்பட்டு படுக்கை வசதிகள் இருந்தன. கட்டில்களின் இடையே தாராளமான இடைவெளியிருந்தது. அவ்விடத்தில் ஒரு மேசையும் இரண்டு நாற்காலிகளும் இருந்தன. இன்பன் நாற்காலியில் அமர்ந்திருக்க, நாகராசன் கட்டிலில் காலின் மேல் கால் போட்டுக் கொண்டு படுத்திருந்தான். நித்திரையில்லை.

அடுத்த அறையில் இருந்து இவர்கள் பார்க்கிறார்கள் என்பது தெரிந்த மாதிரி இவர்கள் நின்ற திசையைத் திரும்பிப் பார்த்தார்கள். பின்னர் தமக்குள் சிரித்துக் கொண்டு தம்பாட்டிலே இருந்தார்கள். 'நாங்கள் இங்கிருப்பது அவர்களுக்குத் தெரியுமோ' கார்த்திக் கேட்க,

'தெரியும் போல்தான் நடக்கின்றார்கள். ஆனால் இக்கட்டிட அமைப்பின்படி, அவர்களுக்குத் தெரிய வாய்ப்பில்லை.

**◊ சி.வி. நாதன் ◊**

அதுமாத்திரமல்ல, அவர்கள் இரகசியமாகப் பேசினாலும் இங்கே துல்லியமாகக் கேட்கும். ஆனால் இங்கிருந்து ஒரு சத்தமும் அவ்விடம் செல்லாது.' என்றார் சான். கண்ணாடிச் சுவரின் ஊடாகப் பார்த்துக் கொண்டே வில்லியம் றோலா சொன்னார் 'இவர்கள் இருவரையும் கண்டுபிடிப்பதில் உங்களின் பங்கு பெரியதாக இருந்தது. அத்துடன் உங்களின் உதவி முடிந்து விடவில்லை. இவர்களைப் பற்றிய மர்மத்தைத் தெரிந்து கொள்வதற்கு இன்னமும் உங்களால் உதவமுடியும் என்று எண்ணுகின்றோம்' 'ஆம், இருவரையும் பார்க்கும் போது எமது பூமியின் மைந்தர்கள் போல்தான் காணப்படுகின்றது. அவர்கள் தம்முள் தொடர்பு கொண்ட மொழி கூட பூமியின் மொழிகளில் ஒன்றாகத்தான் இருந்தது' என எட்மன் பூடகமாகக் கூற, 'அவர்கள் அதிகம் தங்களுக்குள் பேசிக் கொள்ளவில்லை. ஆனாலும் பேசிக் கொண்ட சில விடயங்கள் உங்களின் தாய்மொழியாகிய தமிழ் ஆக இருந்தது' என்றார் சான். 'ம் இவர்களைப் பார்க்கும் போதும் எங்களின் சாயல்தான் தெரிகின்றது' 'செழியன்' தெருவில் எங்களுடன் கலந்து நின்றால் பிரித்தறிவது கடினம். அந்த உடைகள்தான் வித்தியாசமாக இருக்கின்றது.' - கார்த்தி. மணியன் எதுவுமே கூறவில்லை. ஆச்சரியமாகப் பார்த்துக் கொண்டு இருந்தான். தனது ஊரவர்களை நினைவுபடுத்துவது போன்ற அவர்களை இமை மூடாது பார்த்துக் கொண்டே இருந்தான். 'இவர்கள் வேற்றுக் கிரக வாசிகளா?' அவனது வாய் தமிழில் முணுமுணுத்தது. 'இவர்கள்தான் உங்களின் அறிக்கையில் நீங்கள் குறிப்பிட்டிருந்த அந்த இரண்டு பையித்தியங்களும். பையித்தியங்கள் போலவா இருக்கிறார்கள்?' எனக் கூறிய சான், இதனைக் கேளுங்கள் என்று கூறிவிட்டு மேசையண்டை வந்து மேசையில் இருந்த குமிழ் ஒன்றினை அழுத்தினார். 'அவர்கள் இருவரும் பேசிக் கொண்டவற்றை பதிவு செய்துள்ளோம். கேளுங்கள் என சான் கூறவும், இன்பனும் நாகராசனும் அவ்வறையில் இருந்து கொண்டு கதைத்தவைகள் கேட்கத் தொடங்கியது.

'தம்பி! இன்பன், இப்ப என்ன செய்யிறது?' 'ஒன்றுமே செய்ய வேண்டாம். இப்படியே இருப்போம்' 'எவ்வளவு காலத்திற்கு?' 'இன்னமும் இரண்டு அல்லது மூன்று நாட்களுக்குப் பொறுத்துக் கொள்ளுங்கோ, நாகராசண்ணை. பிறகு ஒரு முடிவுக்கு வருவோம்'

'ஏன் தம்பி! எங்களை வைத்தியப் பரிசோதனை செய்திருப்பினம் எண்டு நினைக்கிறியே' சிரிப்புச் சத்தத்தைத் தொடர்ந்து, 'என்னண்ணை இப்பிடிக் கேட்டிட்டியள். முழங்கைக்கு மேலாகப் பாருங்கோ, ஊசி குத்தின அடையாளம். இரத்தம் எடுத்துப் பாத்திருக்கினம். எப்ப எடுத்தவை எண்டுதான் தெரியேலை. இப்ப இரத்தம் ஆய்வு செய்யப்பட்டு முடிவுகளும் அவர்களுக்குத் தெரிஞ்சிருக்கும்.' சிறிது நேர மௌனத்தின் பின் இன்பனின் குரல் கேட்டது. 'அண்ணை நாங்கள் வந்த வேலை முடிஞ்சிது. சரியான தருணம் வரும் போது எல்லாவற்றையும் முடிவுக்குக் கொண்டு வருவோம்' 'தம்பி இந்த இடம் கூட அவதானிக்கப்படும் எண்டு நினைக்கிறேன்' 'ஓம் எனக்குத் தெரியும். சில விசயங்கள் அவர்களிடமும் போய் சேரட்டும். அதுதான் இப்படிக் கதைக்க வேண்டி வந்தது. அல்லாட்டி எங்கடை என்றவன் நிறுத்திக் கொண்டான். அதன் பின்னர் ஒலிப் பதிப்பு நாடா மௌனிக்க, சான் அதனை நிறுத்திவிட்டார். 'இவ்வளவுதான் அவர்கள் இதுவரையில் வெளிப்படையாகப் பேசிக் கொண்டது. மற்றும்படி மௌனம்தான்' 'அத்தனையும் தமிழ் சின்னப் பிசிறில்லாமல் யாழ்ப்பாணத்துத் தமிழ். இவர்கள் வேற்றுக் கிரக மனிதர்களாகவே இருக்கமுடியாது' செழியன். (இன்னமும் வரும்)


HOMELIFE/GTA Realty Inc., Brokerage*



Seelan Siva Aiyadurai
Real Estate Broker
416-451-0271
seelansiva@gmail.com
www.sivahomes.com

HOMELIFE HIGHER STANDARDS

Uthayan Aiyadurai
Sales Represntaive
416-999-3555
aiya14@gmail.com



"THANK YOU FOR YOUR SUCCESSFUL REFERRALS"

WISH YOU AND YOUR FAMILY
MERRY CHRISTMAS AND HAPPY NEW YEAR
Thank You
for your business and referrals...




For A Better Living
Give Us A Call...

Buy
Sell
Invest



1711 McCowan Rd, Suite 206, Toronto, ON M1S-3Y3
Bus:(416)321-6969
This is not intended to solicit properties currently listed for sale.
*Independently Owned and Operated
*Some Conditions Apply

# திரை விமர்சனம்...

19ஆம் பக்கத்தொடர்ச்சி

என்பது தெரிய வந்தால், உண்மை வெளியே தெரிந்துவிடும் என பயப்படும் சித்தி தரப்பு, சசிகுமாருக்கு பைத்தியம் என்று சொல்லி அனைவரையும் நம்ப வைத்து மனநல மருத்துவமனையில் சேர்த்துவிடுகிறது. சசிகுமாரும் கொலை வழக்கில் இருந்து தப்பிக்க பைத்தியம் என்ற பழியை ஏற்றுக்கொண்டு, மனநல மருத்துவமனைக்கே வந்து சேர்கிறார். அங்கேயும் விடாமல் சசிகுமாரை கண்காணிக்க ஒரு ஆளை சித்தி அனுப்பி வைக்கிறார். அவர்களிடமிருந்து தப்பிக்க அதே மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வரும் அல்லாரி நரேஷையும் இழுத்துக் கொண்டு சென்னைக்கு வருகிறார் சசிகுமார்.

அதன்பிறகு என்ன நடந்தது என்பதுதான் நாம் முதல்பாதியில் பார்த்தது. 'இவர்கள் இருவரும் பைத்தியக்காரர்கள், மனநல காப்பகத்திலிருந்து தப்பித்து வந்துவிட்டார்கள்' என்று வந்தவர்கள், சித்தியின் ஆட்கள். தமிழ் சினிமா வழக்கப்படி டாடா சுமோவில் வந்து குவிகிறார்கள். ஆனாலும், சசிகுமார்தானே கதாநாயகன். எனவே, சசிகுமார் வெற்றிபெறுகிறார். படம் முடிந்தது. சசிக்குமார் மிகச் சரியாக பாத்திரத்திற்கு பொருந்துகிறார். இயல்பாக நடிக்கிறார்.

ஆனால், காதலிக்கத்தான் சுத்தமாய் வரமாட்டேன் என அடம்பிடிக்கிறது. சுவாதி அவரைக் காதலிக்கும் விதம் அப்படியே 'சுப்பிரமணியபுரம்' மாதிரி இருக்கிறது. நரேஷ், தெலுங்கு நடிகர். துடிப்பாகவும் நகைச்சுவையுடனும் நடித்துள்ளார். நாக்கை கடித்துக்கொள்ளும் போது கண்கலங்க வைக்கிறார். காதலுக்காக அவர் முயற்சிக்கும் ஒவ்வொரு காட்சியும் சிரிப்பை வரவழைக்கிறது.



சுவாதி நீண்ட இடைவெளிக்குப் பின் தமிழ்த் திரையில் மீண்டும் தோன்றுகிறார். தெற்றுப் பல் தெரிய சிரிப்பது, அடக்கம் காட்டுவது, சிடுசிடுப்பது என்று அனைத்தையும் கச்சிதமாகச் செய்திருக்கிறார். பார்க்கவும் அழகாக உள்ளார். தமிழ் சினிமா ஏன் இவரை பயன்படுத்தவில்லை என்பது புரியவில்லை. காதல் காட்சிகளில் சசிக்குமார் தயங்கினாலும், அதனை சுவாதி தன் நடிப்பால் சரி செய்கிறார். நரேஷ் காதலியாக வரும் நிவேதா புதுமுகம். நரேஷுடன் பேசும் சென்னைத் தமிழ் கேட்க இனிமையாக இருக்கிறது. தன் மாமனை எதிர்க்க முடியாமல் கண்ணீருடன் தவிக்கும் போதும் முத்திரை பதிக்கிறார்.

கஞ்சா கருப்பு, பரோட்டா சூரி இருவரும் தங்களுக்கு கொடுத்த வேலையை நன்றாக செய்திருக்கிறார்கள். சூரி தமிழ் சினிமாவில் ஒரு சுற்று வருவார் என்பது உறுதி. வசுந்தரா வீசிய வேல்கம்பை பார்த்து பயந்து போய் நிற்கும் காட்சியிலும், சென்னை வந்து சித்தியின் அப்பனிடம் உதார் விடும் காட்சியிலும் சிரிக்க வைக்கிறார். சுந்தர் சி.பாபுவின் இசை ஒகே. ஆனால், 'நாடோடிகள் சம்போ சிவசம்போ...' டைப்பில் அவர் கொடுத்திருக்கும் தீம் மியூஸிக் சரியாக வரவில்லை. திரைக்கதை எழுதி இயக்கியிருப்பவர் சமுத்திரகனி. வசனங்களில் தன் பங்கை கச்சிதமாகச் செய்திருக்கிறார். சசிகுமாருக்கு அளவு வைத்து தைத்த சட்டையைப் போன்று, வசனங்கள் கைகொடுக்கின்றன. சுவாதியை மருத்துவமனையில் இருந்து வீட்டுக்குத் தூக்கி வரும் காட்சியில் அத்தனை வசனங்களுக்கும் அரங்கத்தில் கைதட்டல் எழுகிறது.

**போராளி - பார்க்கலாம்!**

# தவறான...

13ஆம் பக்கத்தொடர்ச்சி

ஏற்படும் சிறிய திருப்பத்தைக் கூடத் தாங்கிக் கொள்ள முடியாமல் தலையில் அடித்துக் கொண்டு அலறுகிறார்கள். என் குழந்தை அப்படிப்பட்ட குழந்தையல்ல என்று மார்பு தட்டியவர்கள் இப்போது எப்படி என் குழந்தை இப்படி மாறியது என்று விடைதெரியாத வினாக்களை விழுங்கிக் கொண்டு திரிகிறார்கள். இதைவிட மிகவும் கொடூரமான விடயம் என்ன வென்றால் தமது குழந்தையின் மனோநிலைக்குக் காரணமாக இருந்தவர்கள் தாமே என்பதை ஏற்றிக்கொள்ளும் மனப்பக்குவம் இல்லாமல் மற்றவர்கள்மீது பழிசுமத்தும் பாவப்பிறவிகளாகவும் அமைந்து விடுகிறார்கள்.

இப்போது ஒரு குழந்தையின் செயற்பாடுகள் தமக்கு விரும்பியபடி அமைய வேண்டும் என்பதைப் பெற்றோர்கள் எவ்வாறு நடைமுறைப்படுத்துகிறார்கள் என்பதைப் பார்ப்போம். குழந்தையின் ஆரம்பகால தேவைகளைப் பெற்றோர்கள் குறிப்புணர்ந்து பூர்த்தி செய்கிறார்கள். இந்தக் குறிப்புணர்வுடன் கூடிய செயற்பாடுகள் ஒரு குழந்தையின் ஆரம்ப வளர்ச்சிக்காலங்களில் தவிர்க்க முடியாத வையும், தவிர்க்கப்படக் கூடாதவையுமாக அமைகின்றன. உணவு ஊட்டுதல் முதல் பல்வேறு தேவைகள் இவ்வாறு பூர்த்தி செய்யப்படுகின்றன. அதே நேரத்தில் குழந்தையின் செயற்பாடுகள் தமக்கு மனநிறைவைக் கொடுக்கும்போது அவற்றைப் பாராட்டுவதன் மூலம் குழந்தையும் மகிழ்கிறது, நாமும் மகிழ்வடைகிறோம். இங்கே எமது பாராட்டுக்கள் குழந்தையை உற்சாகப்படுத்தும் கருவியாக அமைவதால் ஒவ்வொருமுறையும் நாம் பாராட்டும் போது அந்தப்பாராட்டுக்கான செயலைத் திறம்படச் செய்ய வேண்டும் என்ற உற்சாகம் அந்தக் குழந்தைக்கு ஏற்படுகின்றது. அதனால் அதன்செயற்பாடுகளும் சிறப்படைகின்றன. உதாரணமாக சிறுகுழந்தை யொன்று ஊட்டிய உணவை வீண்படுத்தாமல் உண்டதும் அதற்கு நாம் கொடுக்கும் பாராட்டுதல் அதன் செயலையும் சிறப்பாக்கும். அதே நேரத்தில் கொடுத்த உணவைத் தாமாகவே வீண்படுத்தாமல் உண்ணக்கூடிய பக்குவத்தைக் குழந்தை பெற்றிருந்தும் அதற்கான வாய்ப்பைக் கொடுக்காமல் ஒரு சிறு குழந்தைக்கு ஊட்டுவது போல் உணவை ஊட்டி விட்டு எனது பிள்ளை வீண்படுத்தாமல் சாப்பிட்டுவிட்டது என்று பாராட்டுவது பெற்றோருக்குப் பெருமையாக இருக்கலாம். ஆனால் அது குழந்தையின் உளவளர்ச்சியை தடையாக்கும் ஒரு தடைக்கல் என்பதை நாம் அறிந்து கொள்வதில்லை. இவ்வாறு எண்ணிலடங் காத விடயங்களை நாளாந்தம் நாம் குழந்தைகள் மீது நடை முறைப்படுத்தி மகிழ்ச்சி காண்கிறோமேயொழிய குழந்தையின் உளவளர்ச்சியில் ஏற்படுகின்ற பின்னடைவுகளை நாம் உணர்ந்து கொள்வதில்லை.

குழந்தைகளின் செயற்பாட்டுத் திறனை அதிகரிக்கவும், அவர்களது நடத்தைகளை செம்மைப்படுத்தவும் பல பெற்றோர்கள் பல்வேறு வழிகளில் முயற்சி செய்தும் பலன் இல்லாமல் ஏங்கிக் கொண்டிருப்பது சாதாரண விடயமாகி விட்டது. தமது குழந்தைகள் எவ்வாறு இப்படியான ஒரு மனநிலைக்குள் அகப்பட்டுக் கொண்டார்கள், இதற்கான காரணம் என்ன? காரணகர்த்தாக்கள் யார்? என்பதைக் கண்டுபிடிப்பதற்கு சந்திர மண்டலத்திற்குக் கூட முடியுமானால் செல்லத் தயாராகவுள்ளனர். ஆனால் விடை அவர் களிடமே இருக்கும்போது அதைப் புரிந்து கொள்ளாமல் வினாவை மட்டும் கேட்டுக்கொண்டிக்கிறார்கள்.



பெரும்பாலான பெற்றோர்களின் ஏக்கத்திற்குரிய அந்த வினாவிற்கான விடை இதுதான். 'தவறான பாராட்டுதல்' எமது எதிர்பார்ப்புக்கும், கௌரவத்திற்கும் ஏற்றவாறு குழந்தைகளின் செயற்பாடுகளை மட்டுப்படுத்தி அவ்வாறு மட்டுப்படுத்தப்பட்ட விடயங்களை அவர்கள் பூர்த்தி செய்யும்போது நாம் கூறிய பாராட்டுக்கள். குழந்தை வளரவளர அதன் அறிவும் வளர வேண்டும் என்பதில் ஆர்வம் இருந்தும் அந்த அறிவு சார்விடயங்களில் குழந்தைகளை ஈடுபடுத்தும் போது ஏற்படக்கூடிய தடைகள், தோல்விகள் என்பவற்றைத் தாங்க முடியாத மனநிலையால் அவற்றை மட்டுப்படுத்துதல். அதற்கான வாய்ப்புக்களை மறைத்து அல்லது மட்டுப்படுத்தி அவர்களது தகுதிக்கு மிகவும் இலகுவான விடயங்களில் ஈடுபடுத்தி அவர்களது செயற்பாடுகளைப் பாராட்டுதல். தமது குழந்தைகளின் திறனை மேம்படுத்துவதற்கான வழிமுறைகளை அறியாமல் ஒரு குழந்தையை இன்னொரு குழந்தையுடன் ஒப்பிட்டு மற்றக் குழந்தையைப் பாராட்டிப் பாராட்டி தமது குழந்தைகளின் உள்ளத்தில் தாழ்வு மனப்பான்மையை உருவாக்குதல். எனவே ஒரு குழந்தையின் உளவளர்ச்சியில் எமது அறியாமை சார்ந்த பாராட்டுதல்கள் அதாவது தவறான பாராட்டுதல்கள் அதன் வாழ்நாள் முழுவதும் எதிர்மறையான பாதிப்பை ஏற்படுத்துவதுமட்டுமல்ல தன்னம்பிக்கையின்மை, எதிர்பார்ப்புக் களைச் சமாளிக்கும் திறனின்மை தோல்வி மனோபாவம் போன்றவற்றை உருவாக்கின்றன.

## ஆம் வாசகர்களே!

ஒவ்வொரு மனித உள்ளத்தின் ஏக்கமும் தன்னை மற்றவர்கள் பாராட்டவேண்டும் என்பது தான். உண்மையான உள்ளத்துணர்வுடன் கூடிய பாராட்டுதலால் அதைப் பெறுபவருக்குக் கிடைக்கும் மகிழ்ச்சிக்கு நிகராக உலகத்தில் எதுவுமில்லை. உள்ளத்தாலான உயர்வைக் கொடுக்கும் பாராட்டுதல் எந்த அளவில் இருந்தாலும் அதைப் பெறுபவருக்கு மகிழ்ச்சியைக் கொடுக்கும், அவரை உயர்த்தும். மாறாக உதட்டளவிலான பாராட்டுதலும், பாராட்டுப் பெறுபவரது நிலையை உயர்த்தாத பாராட்டுதலும், சுயநலன் சார்ந்த பாராட்டுதலும், சுயகௌரவம் சார்ந்த பாராட்டுதலும், சுயதிருப்திக்கான பாராட்டுதலும் தவறான பாராட்டுதல்கள். இவ்வகையான பாராட்டுதல்கள் அதைக் கொடுப்பவரையும் பாதிக்கும் எடுப்பவரையும் பாதிக்கும் என்பதால் இவை தவிர்க்கப்பட வேண்டியவை என்பதை உறுதிசெய்வோம்.

# குவாண்ரம் பிறந்த கதை நுண்ணுலகியல் 24

சென்ற தடவையில் கெல்வின் கண்ட இரண்டாவது கருமேகம் என்னவென்று கூறியிருந்தேன். இந்தக் கருமேகம் மெதுமெதுவாகக் கலைக்கப்பட்டபோது அங்கிருந்து வெளியே வந்ததுதான் குவாண்ரம் என்னும் சிற்றுலகின் அதிசய பௌதீகம். மீண்டுமொரு தடவை இன்னமும் தெளிவாக, புறவூதாச் சிக்கலைப் பார்ப்போம்.. இரும்புத் துண்டு ஒன்றை வெப்பமாக்கினால் என்ன நிகழும் என்பது உங்களுக்குத் தெரிந்திருக்கும். சாதாரண இரும்புப் பட்டடைகளில் இதனை எம்மில் பலர் பார்த்திருக்கின்றோம். எமக்குத் தேவை என்பதால் அதனைக் கொஞ்சம் தெளிவாகப் பார்ப்போம். முதலில் இரும்புத் துண்டு மங்கலான சென்னிறமாகும். இன்னமும் வெப்பம் கொடுக்க, அதன் வெப்பநிலை உயர இரும்புத் துண்டு சென்னிறமாகக் காணப்படும். மேலும் அதன் வெப்பநிலை அதிகரிக்க, இரும்புத் துண்டு செம் மஞ்சள் நிறத்திற்கு வந்துவிடும். அதற்கு அப்பாலும் இரும்பை வெப்பமாக்க, இரும்புத் துண்டு நீலம் கலந்த வெண்ணிறத்தில் ஒளிரும். இனி மறுதலையாக, நீலம் கலந்த வெண்ணிறத்தில் ஒளிர்ந்து கொண்டிருக்கும் இரும்புத் துண்டினை, வெப்ப அடுப்பில் இருந்து வெளியே எடுத்து வைப்போம். என்ன மாற்றங்கள் நிகழுகின்றது எனப் பார்த்தால், இரும்புத் துண்டு தான் வந்த பாதையில் திரும்பிச் செல்வதைக் காணலாம். ஒளிர்வது நின்றபின்னரும் இரும்பு வெப்பத்தினை வீசி இறுதியில் குளிர்ந்துவிடும். அதன் பின்னராக, வெப்பமோ அல்லது வெளிச்சமோ அந்த இரும்புத் துண்டில் இருந்து வெளிவராது.

இப்படியான செயற்பாட்டினை, அதாவது வெப்பமாக்கலை, செப்பு அல்லது அலுமினியம் அல்லது இன்னொரு உலோகத்தில் செய்து பார்த்தாலும் இதே மாதிரியான முடிவுகளே பெறப்பட்டன, பெறப்படும். அதாவது சூடான பொருள் ஒன்று வெளிவிடும் வெளிச்சமோ, அல்லது வெப்பமோ அப்பொருள் எதனால் செய்யப்பட்டது என்பதில் தங்கியில்லை. அப்பொருள் பெற்றுள்ள வெப்பநிலையில் தான் தங்கியுள்ளது என்பது தெளிவாகின்றது. இதில் இருந்து வந்ததுதான் கரும்பொருட் கதிர்வீசல். இப்படியாக சூடான பொருட்கள் வெளிவிடும் வெப்பத்தை, ஒளிர்வை விஞ்ஞானிகள் கருத்தில் எடுத்து அதனை ஆய்வு செய்ய முயன்றார்கள். முயன்றார்கள் என்பதை விடுத்து, நியூட்டனின் செம்மைப் பௌதீகத்தினை மேலும் உறுதிப்படுத் நினைத்தார்கள். ஒளி, வெப்பம் என்பன மின்காந்த அலைகளாகவே சூடான பொருட்களில் இருந்து வெளிவருகின்றன. எனவே இப்படியாக வெளிவரும் மின்காந்த அலைகளின் சக்தியை அளவிட அளவிட்டார்கள். வெவ்வேறு வெப்பநிலைக-ளில், பொருட்களில் இருந்து வெளியேறும் கதிர்களின் சக்தியை அளவிட்டார்கள். அத்துடன் ஒவ்வொரு வெப்பநிலையிலும் வெளிவரவேண்டிய சக்தியின் அளவினையும் கணித்துப் பார்த்தார்கள். பரிசோதனைச் சாலையில் தயாரிக்கப்பட்ட கரும் பொருளிலும், கரும்பொருட் கதிர்வீசலின் சக்தியையும் அளந்து பார்த்தார்கள், சமன்பாடுகளின் வழியிலாகக் கணித்தும் பார்த்தார்கள். அங்குதான் சிக்கல் வந்தது.

கொள்கையளவில் அதிர்வெண் கூடக்கூட, வெளிவரும் கதிர்களின் சக்தி அளவானது கூடிக் கொண்டு போக வேண்டும். அப்படித்தான் அலைகளின் சக்தி விபரம் கூறுகின்றது. இந்த கருத்தானது, மின்காந்த அலைகளின் வரிசையில் சாதாரண பார்வை ஒளியின் அதிர்வெண்ணின் கீழ் இருக்கும் சென்னிறக் கீழ்க் கதிர்கள்வரை மிகச் சரியாக இருந்தது. ஆனால் மேலும் கதிர்களின் அதிர்வெண் அதிகரிக்க, வெளிவரும் சக்தியின் அளவு ஒரு குறிப்பிட் அளவுவரை அதிகரித்து பின்னர் சடுதியாகக் குறைந்து கொண்டு போய். இறுதியில் சில உயர் அதிர்வெண்களின் வெளிவரும் சக்தியின் அளவு இல்லாது போய்விடுகின்றது. அதாவது புறவூதாக் கதிர்களினதும் அதனைவிட உயர்வான அதிர்வெண் கொண்ட கதிர்களினதும் சக்தி வெளிப்பாடு பூச்சியமாக இருந்தது, அதாவது, பரிசோதனையின் வாயிலாகப் பெறப்பட்ட முடிவுகளில். சூடான பொருட்களில் இருந்து புறவூதக் கதிர்களோ அல்லது எக்ஸ் கதிர்களோ காமாக் கதிர்களோ வெளிவரவே இல்லை. பரிசோதனைச் சாலையில் தயாரிக்கப்பட்ட நிறை கரும்பொருட்களிலும் இந்த முடிவுகளே காணப்பட்டன. கரும்பொருட் கதிர்வீச்சின் படி, உயர் அதிர்வெண் கொண்ட அலைகளும் வரவேண்டும். ஏன் வரவில்லை? இதுதான் சிக்கல். இதனை கரும்பொருட் கதிர்வீச்சுச் சிக்கல் எனவும் புறவூதாச் சிக்கல் எனவும் கூறிக் கொண்டார்கள். என்னடா பெரும் சிக்கலாக இருக்கிறதே என எண்ணுகின்றீர்களா? இப்படித்தான் 19ம் நூற்றாண்டின் இறுதியில் வாழ்ந்த இயற்பியற் சிந்தனைவாதிகளும் கூறிக் கொண்டார்கள். ஏனெனில் இயற்பியலில் இனிப் புதியதாக எதனையும் கண்டு பிடிக்கத் தேவையில்லை, பேரண்டத்தின் இயற்பியல் விதிகள் முழுமையடைந்து விட்டன என்ற கருத்தில் இருந்தவர்கள் அல்லவா!. இந்நேரத்தில்தான் மாக்ஸ் பிளாங் தனது 42வது வயதில் இயற்பியலின் புரட்சிகரமான விளக்கத்துடன் வந்தார். தனது கண்டுபிடிப்பினை வெளிவிடுவதற்கு முன்னராகத் தனது மகன-'டம், 'நியூட்டனின் கண்டுபிடிப்புக்கு நிகரான கண்டுபிடிப்பினைக் கண்டுபிடித்துள்ளேன்' எனக் கூறினாராம். அதனை எமக்கு தேவையான அளவிலே மெதுமையாகக் கூறுகிறேன், அடுத்த தடவையில் இருந்து.

உங்களது கருத்துக்களை விளப்பரத்திற்கோ அல்லது எனக்கோ தெரிவிக்கலாம். எனது புதிய வெளியீடுகளாகிய புவியீர்ப்புப் பற்றிய வியப்பான விஷயங்கள், வியத்தகு விண்மீன்கள் ஆகிய நூல்களை விளம்பரம் காரியாலயத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

## பேரண்டம் - 100



- கனி -
416.261.1348
leptons@hotmail.ca

# ஒவ்வாமை...

14ஆம் பக்கத்தொடர்ச்சி

கடிகாரத்தின் செயின் அல்லது பட்டிதாக்கி வர இடமுண்டு. மூக்குக்கண்ணாடி பிரேமில் உள்ள உலோகம், புருவத்திலும், கன்னத்திலும், அழுத்துவதினாலும் ஒவ்வாமை நிலை ஏற்பட்டு எக்ஸிமா வருவதற்கு வழியமைக்கும். மேலும் றப்பர் பாதணியாலும் காலின் மேற்பகுதியில் தாக்கம் ஏற்பட்டு ஒவ்வாமை நிலையால் எக்ஸிமா என்கின்ற ஒட்டுக்கிரந்தி ஏற்பட இடம் அளிக்கும்.

காதுக்கு அணியும் தோடுகள், மோதிரம், சட்டைப்பின், மார்பு ஆடைக் கொழுக்கிகள், உடம்பில் ஒரே இடத்தில் தாக்கப்பட்டு ஒவ்வாமையால் ஒட்டுக்கிரந்தி (Eczema) வரலாம். அத்துடன் நாம் பாவிக்கும் சோப், பவுடர், உதட்டிற்கு பாவிக்கும் சாயப் பொருள், வாசனைத்தைலங்கள், தலை முடிக்கு பூசப்படும் சாயவர்க்கங்கள் என்பவற்றாலும் ஒவ்வாமை தன்மை ஏற்பட இடம் உண்டு.

மேலும் கூறினால் தலைச்சாயத்தில் (Paraphenylenediamine) என்கின்ற பொருளும் கூந்தல் தைலத்தில் Cetrimide Chlorocresol பொருளும், குளிக்கும் சோப்பில் Chlrosylenon என்ற பொருளும் ஒவ்வாமை நிலையை ஏற்படுத்தும் என அறிய முடிகின்றது.

தலையில் சாயம் போடும் பலருக்கு இப்படியான ஒவ்வாமை ஒட்டுக்கிரந்தி ஏற்படுவதினால் தாங்கள் சாயம் போடுமுன் தோலில் பூசி பரீட்சித்துப் பார்ப்பது மிக நன்று. பரீட்சிக்கும் முறைகள் பெரும்பாலும் சாயப்பெட்டிகளில் குறிக்கப்பட்டிருக்கும். பார்த்துக் கொள்ளலாம். மேலும் நாம் பாவிக்கும் ஆடைகளை எடுத்துக் கொண்டால் பருத்தி நூல் சாலச்சிறந்தது. ஆனால் காலநேரங்களுக்கு ஒத்துவர வேண்டும். தற்பொழுது பெரும்பாலும் தற்காலமுறையில் தயாரிக்கப்பட்ட ஆடை களில் இரசாயனக்கலவை நிறங்கள் கலந்திருப்பதை நாம் நன்கு அறிவோம். இந்த நிறச் சாயங்கள் உடலில் உடுப்பை அணியும்போது இறுக்கப்பட்டு ஒவ்வாமை நிலையால் அவ்விடம் நிறம் மாறப்பட்டு வடுக்காயங்களோடு காணப்படும். எனவே உடுப்புக்களை உடம்பில் இறுக்க அணிவது தவிர்த்துக்கொள்வது மிகநன்று. தவறின் அதிக வியர்வை, அழுத்துநிலை, அழுக்கு, உராய்வு வரிகள் ஏற்பட்டு ஒவ்வாமை காயங்கள் வரஇடம் உண்டு.

எனவே ஒரே இடத்தில் தொடர்ந்து ஒரு பொருள்



பட்டுக்கொண்டிருப்பதினால் அழற்சி நிலை ஏற்படும். இத்தன்மையை ஆங்கிலத் தில் Contact Dermatitis எனக் கூறுவர்.

மேலும் நாம் பாவிக்கும் நெற்றிப் பொட்டுவகையாலும் ஒவ்வாமை நிலை ஏற்பட இடம் உண்டு. குங்குமப் பொட்டு, சாந்துப்பொட்டு, ஸ்டிக்கர் பொட்டு என்பவற்றை எடுத்துக்கொள்ளலாம். இவற்றைத் தொடர்ந்து பாவித்துவந்தால் உரிய இடத்தை அவதானிக்கும் போது இயற்கையான சருமநிறம் மாற்றம் அடைந்து வருவதைப்பார்க்கலாம். ஆனால் இந்நிலை எல்லோருக்கும் அல்ல என்பதையும் நன்கு புரிந்து கொள்ள வேண்டும். சிலருடைய சருமத்திற்கு ஒத்துவராது என்பதேயாகும். மேலும் பொதுவில் ஒவ்வாமை ஒருவருக்கு ஏற்பட்டிருந்தால் அதன்முக்கிய குணம் குறிகளை நாம் அறிந்து கொள்வது மிக நன்மை பயக்கும். இதனால் உடனடியாக பரீட்சித்து எம்மை நாம் பாதுகாக்க முடியும். கர்ப்பம் தரித்தவர்களும் குழந்தைகளுக்குப் பால் ஊட்டும் தாய்மார்களும் மிகக் கவனத்துடன் கையாள வேண்டும். உணவுவகையில் மேல் கூறியவற்றில் ஏதாவது ஒன்றை எடுத்த பின் சிலநிமிட நேரம் கழிந்தபின் உதட்டின் பகுதி தடித்து மினுமினுப்புடன் வீங்கத்தொடங்கும். தேகத்தில் கடிஏற்பட்டு தடிப்பு நிலை காணப்படும். நாம் கடியினால் எவ்விடத்தில் சொறிகின்றோமோ அவ்விடம் தடித்து நிறம் மாறும். பெரும்பாலும் சென்நிறம் கொண்டதாக இருக்கும். (சிவப்புநிறம்)

சிலருக்கு ஒவ்வாமையால் வயிற்றுக்கடுப்புடன் வயிற்றோட்டம், சோர்வுத்தன்மை, வாந்திவருவதற்கும் இடமுண்டு. சிலருக்கு தும்மல், மூக்கரிப்பு, மூக்கடைப்பு, சுவாசக்கஸ்டம் போன்றவையும் கண் எரிவு, கண்ணீர் சொரிதல், நிறம் மாற்றத்துடன் காணப்படுவதை நாம் அறியமுடியும்.

தலைப்பகுதியில் ஒவ்வாமை நிலை ஏற்படின் கடித்த வண்ணம் இருக்கும். சொறிந்தால் நீர்வடியத்தொடங்கும். உடன் தங்கள் வைத்தியர்களை நாடிச் சிகிச்சை பெற்றுக்கொள்ள வேண்டும்.

எனவே எது காரணத்தினாலும் ஒவ்வாமை நிலை ஏற்பட்டால் உடனே உரிய வைத்தியர்களிடம் சென்று சிகிச்சை பெற்றுக்கொள்வது மிக நன்மைபயக்கும். தாமதித்தால் உடல் தீங்கு ஏற்பட்டு சிலவேளை கவலைப்பட வேண்டிவரும்.

ஒவ்வாமையினால் ஒட்டுக்கிரந்தி எனப்படும் எக்ஸிமா (Eczema) ஏற்படாதிருக்க வெளிப்பாவனைப்பொருட்களில் அவதானம் முக்கியமாகும். எனவே நம்மை நாம் பாதுகாப்பது எம்மிடமே உண்டு என்பதை நாம் கண்டு அறிந்து கொள்வது மிக நன்று.

# நிறைமொழி மாந்தர் ஆணையிற் கிளர்ந்த மறை மொழி தானே மந்திரம் என்பர்

இறைவனைப் பாடவந்த நாவரசர் 'மந்திரமும் தந்திரமும் மருந்துமாகி, தீரா நோய் தீர்த்தருளவல்லான்' என்றே பாடியுள்ளார். மேலும் மந்திரமும் மறை பொருளுமானான் என்றும் கூறியுள்ளார். எனவே அறிதற்கரிய ஆண்டவன், தீராத நோய் தீர்ப்பவன். அவனைப் போல மந்திரமும் மக்களுக்கு மாட்சிமை அளிக்கக் கூடியதாகும். நாதன் தாழ் வாழ்க என்று கூறியதற்கு முன்னர் நமசிவாய வாழ்க என்றே மணிவாசகர் கூறியுள்ளது சைவ சமயத்தவரின் மூலமந்திரமான நமச்சிவாய என்பதன் மகிமையை உணர்த்துவதாய் உள்ளதெனலாம்.



மந்திரங்கள் எல்லா மதங்களிலும் உள்ளன. எல்லா மொழிகளிலும் உள்ளன. மந்திரம் என்றால் மனோவலிமையை கொடுக்கக் கூடியது என்பதாகும். மனம், வாக்கு, காயம் சுத்தமாக இருந்து செயற்பட்டால் நம்வாக்கே மந்திரமாக மாறி பலிக்கும். இவை மூன்றும் சுத்தமில்லாவிட்டால் நம்வாக்கே நமக்கு எதிரியாகி நம்மை அழித்துவிடும். நம்வாக்கே அணுகுண்டு தான். நம் செயலும் அதுவே தான். நமது எண்ணங்களே ஹைட்ரஜன் குண்டு. ஆகவே நமக்கு எது தேவையோ அதை வேண்டி அதற்கு தகுந்தபடி இவைகளை பிரயோகம் செய்தால் வேண்டியதை அடையலாம்.

இந்த மந்திரங்கள், தந்திரங்கள், யந்திரங்கள் எல்லாம் ஒரு சிலருக்கு மட்டுமே சொந்தமானவையல்ல. இவை எல்லா மக்களுக்கும் சொந்தமானவை. மந்திரங்களுக்குரிய வல்லமை வரம்பு கடந்தது. இவற்றை பிரயோகிப்பவர் உள சுத்தியுடன் பிரயோகம் செய்தால் அவை தமது விளைவை கட்டாயம் ஏற்படுத்தவே செய்யும். எவன் ஒருவன் தன் ஆத்மாவை வசப்படுத்துகின்றானோ அவன் ஞானியாகின்றான். மனிதன் தன்னிடமுள்ள தெய்வாம்சத்தை அறிந்து கொண்டால் அவனே தெய்வம் தான்.

இராமானுஜர் பல எதிர்ப்புகளுக்கு இடையில் 'ஓம் நமோ நாராயணா' என்ற மந்திரத்தை கோபுர உச்சியில் நின்று கொண்டு காது கேட்பவர்கள் எல்லாரும் இம்மந்திரத்தை கேட்டு உச்சரித்து பயனடையுங்கள் என்று மக்களுக்கு எடுத்து கூறினார். எனவே எதையும் முறைப்படி மனம், வாக்கு, காய சுத்தியுடன் செய்தால் வெற்றி நிச்சயம்.

ஐங் என்ற தத்துவஞானி ஒரு கருங்கல்லின் மேலே அமர்ந்து கொண்டு தனது பெயரையே மந்திரமாக உச்சரித்தேதான் தெளிவு பெற்றதாகக் கூறினார். எனவே மகாசக்தி உலகெங்கும் பரவிக் கிடக்கின்றது. நம்முளளேயும் கிடக்கின்றது. அது தெரிந்து செயற்பட்டால் நாம் எல்லா நன்மைகளையும் அடையலாம்.

உங்கள் உள்ளத்திலும் இறைவன் இருக்கின்றான். எனவே காவி உடுத்து, தலைமுடி, தாடி வைத்திருக்கும் கபட சந்நியாசிகள் கால்களில் விழாதீர்கள். அப்படிச் செய்வது உங்கள் உள்ளத்தில் இருக்கும் இறைவனை கொண்டு போய் இன்னொருவர் காலில் விழச் செய்ததற்கு ஒப்பாகும். எனவே உங்கள் ஆத்மாவை கேவலப்படுத்தாதீர்கள். உங்களிடம் இருப்பது சாதாரண சக்தியல்ல. மகா பலம் வாய்ந்த பேரருட்சக்தி என்பதை உணருங்கள்.

எழுத்துக்களை அல்லது சொல்லை திரும்பத்திரும்ப பல தடவை உச்சரிக்கும் போது அதற்கு உருவேறி உத்வேகம் பெறுகின்றது. ராமநாமத்தை உச்சரித்தே பலம்பெற்றான் அனுமன் என்பர். நலம் தரும் நாமம் நாராயணா என்பதும் கருத்திற் கொள்ளத் தக்கது.

எனவே சொல் ஒன்று உருவேறி, திருவேறி ஆற்றல் பெற்று காரியத்தை சித்திக்கும் போது மந்திரம் எனப்படுகின்றது. இவ்வகையானது காரியசித்தி மந்திரம் எனப்படும்.

தாம் நினைத்தவற்றை நிறைவேற்றும் ஆற்றல்கள் அதாவது சித்துக்கள் கைவரப் பெற்றவர்கள் சித்தர்கள் எனப்படுவர். பூர்வ புண்ணிய பலனும் இறையருளும் குருவருளும் இருந்தால்தான் இத்தகைய சித்துக்களை அடையமுடியும்.

காட்டிற்கு சென்று காவிதரித்து கடுந்தவமியற்றினால்தான் சித்துக்கள் கைவரப் பெறும் என்பதல்ல. இல்லறத்தில் இருந்து கொண்டே ஐம்புலன்களை ஆற்றுப்படுத்தி அறநெறிப்பட்ட வாழ்வு வாழ்ந்தாலும் ஆற்றலுடைய சொற்கள் பிரவாகிக்கும். இல்லற ஞானிகளின் வாழ்க்கை இதற்கு எடுத்துக் காட்டாகும்.

**மந்திரம் என்பது மறையோர் வாக்கு.**



நா. க. சிவராமலிங்கம்

# நொடிப்பொழுதுகள்



இலைதுளிர் காலமங்கை
மெல்லச்சிரித்தவாறே
முல்லைச்சிரிப்பால்
கோலம் காட்டி பார்ப்போர்
மனதைக்கவர்கிறாள்
பட்டமரங்கள் துளிர்த்து நின்று
ஆடியசையும்
அழகில் மனம் பறிகொடுத்தேன்

மூன்று மாதங்கள் மூன்று நாள்களாக

கோடைகால நங்கையோ
கோடிகொடுத்தாலும் என்சேர்க்கையே
இனிது என்று இருகரம் நீட்டி
அரவணைக்கிறாள்
அவள் பிடியில்
பூங்காவிலும்
கடற்கரைகளிலும்
உல்லாசப்பிரயாணங்களிலும்
இதம்கண்டு சுகித்திருக்கும்வேளை

மூன்றுமாதங்கள் மூன்று நாள்களாக

இலையுதிர்கால தங்கையோ
பல்நிற அழகுத்தோற்றத்தில்
சிரித்துச்சிரித்து கிட்ட நெருங்குகிறாள்
மயக்கத்துடன் பார்த்து ரசித்திருக்கும்
வேளை

மூன்றுமாதங்கள் மூன்று நாள்களாக

குளிர்கால மாதரசி இடையிடையே
எட்டி எட்டிப்பார்க்கிறாள்

இலையுதிர்காலத்தங்கையோ
தன்பணி முடியும் தறுவாயை
நினைத்து முகத்தில் புன்னகை தவள
நிமிர்ந்து கையை உயர்த்தி
நேரே தூரப்பார்வை பார்க்கிறாள்
குளிர்கால மாதரசி
கண்ணுக்கெட்டிய தூரத்தில்
ஆடி அசைந்து ஒய்யாரமாக
கையை அசைத்தவாறே வருகிறாள்

நத்தார் பண்டிகை ஆரவாரம்
காதோடு வந்து மனதை இதமாக்க
குளிர்கால மகள் மெல்ல மெல்ல
அடியெடுத்து அன்ன நடையில்
அழகு நடை பயின்று வருகிறாள்
சிறுவர்களுக்கும் இளைஞர்களுக்கும்
ஏன் முதியவர்களுக்கும்
ஒரே கொண்டாட்டம்

விதி விலக்காக ஒரு சிலர்
குளிர்காலமகளுடன் ஊறவாட
முடியாத ஏக்கம்
மெல்ல முணுமுணுக்கிறார்கள்
யன்னல் வழியே எட்டிப்பார்த்து
பெருமூச்சு விடுகிறார்கள்
ஆனாலும்
பெருமூச்சுக்களே வாழ்வின்
பெருவாழ்வுக்கு உயிர் மூச்சாக
அமையும் ரகசியம் அறிவீரோ?

---ரஞ்சி கதிர்---
ranji24.kathir@gmail.com

# எங்கள் வீட்டு முருங்கைமரம்

## தவா மயில்வாகனம் கொலண்ட்



புலம்பெயர்ந்து வாழும் தமிழர்களில் நானும் ஒருவன். ஐரோப்பாவில் உள்ள சிறிய கிராமம் ஒன்றில் நான் வாழ்வதால் தமிழர்களின் மரக்கறிவகைகள் இங்கு கிடைப்பது இலகுவான விடயமல்ல. மாதத்திற்கு ஒரு தடவை ஒரு தமிழர் தூரத்தில் உள்ள ஒரு நகரிலிருந்து மரக்கறிவகைகள் மற்றும் தமிழர்களுக்கு பிடித்தமானவற்றை கொண்டு வருவார். மாதமாதம் நாங்களும் அவரது வாகனம் வரும்வரை காத்திருந்து எங்களுக்கு தேவையானவற்றை வாங்கிக்கொள்வோம். எனது தந்தை முருங்கைக்காய் கறியை பிட்டுடன் கலந்து ருசித்துச் சாப்பிடுவார்.

அதைப்பார்த்து சின்ன வயதிலிருந்தே எனக்கும் முருங்கைக்காய்கறி பிடிக்கும். எனது மகன் குழந்தையிலிருந்தே ஐரோப்பாவில் வளர்ந்தவர். பரம்பரைப் பழக்கமோ என்னவோ அவருக்கும் முருங்கைக்காய் மிகவும் பிடிக்கும். அதனால் மரக்கறி வாங்கும்போது முருங்கைக்காயும் தவறாமல் வாங்கப்படும்.

குறைந்தது ஒரு வாரத்திற்கு முன்னராவது மரத்திலிருந்து பிடுங்கப்பட்டு லாரி மற்றும் விமானத்தில் பயணம் செய்து களைப்படைந்திருப்பதை முருங்கைக்காயின் வாட்டத்திலிருந்து தெரிந்து கொள்ளலாம். ஊரில் உடனுக்குடன் மரத்திலிருந்து ஆய்ந்து கறி காய்ச்சிய நாட்கள் காலம் கடந்தாகி விட்டது. ஊரில் எங்கள் வீட்டு வளவில் ஒரு முருங்கைமரம் நீண்டு வளர்ந்து கிளைபரப்பிச் சடைத்து நிற்கும். (இப்பொழுதும் நிற்பதாக கேள்வி) அதனால் எங்கள் வீட்டில் முருங்கைக்காய்க்கு குறைவிருக்காது. முருங்கைக்காயிலிருந்து சதையை வழித்தெடுத்து காய்ச்சிய வறட்டல் கறி, முருங்கையிலைச் சுண்டல், முருங்கையிலை கலந்த நண்டுக்குழம்பு என்று அடிக்கடி முருங்கைக்காய் சமா-சாரங்கள் பரிமாறப்படும். நண்டு மணம் எடுபடும் என்பது எம்மவரின் நம்பிக்கை. எது என்னவோ அந்த முருங்கையிலை கலந்த நண்டுக்குழம்பை நினைத்தால் இப்பொழுதும் நாவும் ஈரமாகும்.

முருங்கைக்காயை ஆய்வதற்காக கொக்கத்தடியை எடுத்துவருமாறு எனது சகோதரி எனக்கு உத்தரவிடுவார். நானோ கொக்கத்தடியை எடுப்பதற்கு பதிலாக மரத்தில் துருதுருவென ஏறி காய்களை பிடுங்கிப் போடுவேன். நான் மரத்தில் ஏறியதை அறிந்து அம்மா பதறியடித்துக்கொண்டு ஓடி வருவார். தன்மகன் மரத்திலிருந்து விழுந்து கால்கையை உடைத்து விடக்கூடாதே என்பது பெற்றமனத்தின் ஆதங்கம். 'இனி ஏறினால் முதுகிலை தருவன்' பெற்றமனத்தின் பரிதவிப்பு. கடினமான வார்த்தைகளாய் வெளிவரும். ஆனால் அம்மா இல்லாத நேரம்பார்த்து முருங்கைமரத்தில் ஏறி விளையாடுவதும், காய் பிடுங்கிப் கொடுப்பதும் எனது சின்னவயது வாடிக்கையாக இருந்தது.

தமிழ்மரக்கறிகளுக்கு காலனித்துவ ஆங்கிலேயர்கள் விசித்திரமான பெயர்களைச் சூட்டினர். வெண்டிக்காயை அவர்கள் 'Ladies Finninger' என்று அழைத்தனர். எந்தப்பெண்ணின் விரல்களைப் பார்த்து இந்தப்பெயர் வைத்தனர் என்பது இன்றுவரை புரியாத புதிர். அதைப்போல முருங்கைக்காயை அவர்கள் 'Drumstick' என்றழைத்தனர். முருங்கைக்காயினாலோ அல்லது அதையொத்த ஒரு தடியினாலோ மேளம் அடிப்பதை நான் இன்றுவரை கண்டதில்லை. ஆனால் சர்வதேச ரீதியாக முருங்கை 'மொறிங்க' என்றே அழைக்கப்படுகிறது. முருங்கையிலிருந்து மொறிங்க வந்ததா அல்லது மொறிங்கவிலிருந்து முருங்கை வந்ததா என்பதை ஆர்வலர்கள் ஆராய்ந்து பார்க்கலாம்.

விற்றமின் - C, கல்சியம் மற்றும் பல தாதுப்பொருட்களைக் கொண்ட முருங்கைக்காயும் அதன் இலையும் ஆசியாவில் மட்டுமல்லாது ஆபிரிக்கா மற்றும் தென்னமரிக்க கண்டங்களிலும் உணவுக்கு பெரிதும் பயன்படுத்தப்படுகிறது. உணவுத்தட்டுப்பாடு நிறைந்த போராட்டகாலத்தில் யாழ்ப்பாண மக்களுக்கு முருங்கைமரம் தோள் கொடுத்ததை யாரும் மறந்துவிட முடியாது.

'சனமெல்லாம் இலையை உருவியெடுத்து முருங்கை மரமெல்லாம் மொட்டையாப்போச்சு' என்று அந்த கஷ்டமான காலத்தில் 'ஜோக்' அடித்து கவலை மறந்தவர்களும் உண்டு. முந்தானை முடிச்சு படம் வந்த போது நான் பதினோராம் வகுப்பு படித்துக் கொண்டிருந்தேன். அந்தப்படத்தில் பாக்கியராஜ் முருங்கைகாயில் பல விசேட குணங்கள் இருப்பதாக நகைச்சுவையாக குறிப்பிட்டது பலருக்கும் நினைவிருக்கும். எங்கள் இளைஞர் குழாத்தின் கதையளத்தலுக்கு அப்போது முருங்கைக்காயும் ஒரு கருப்பொருளாக இருந்தது. எங்களைவிட வயதில் மூத்த இளைஞர்கள் முருங்கைப்பிஞ்சின் விசேடம் பற்றி கதைகதையாகச் சொல்ல நாங்கள் திறந்தவாய் மூடாது கேட்டுக்கொண்டிருந்த வேளைகளை இப்பொழுது நினைத்தாலும் பரவசம் ஏற்படுகிறது. எது எப்படியோ என்னைப் பொறுத்தவரை இந்த முருங்கைக்காய்க்கு என்னுள் எனது ஊரின் நினைவுகளை கிளறிவிடும் அபாரசக்தி மட்டும் இருக்கிறது.

ஒவ்வொரு தடவையும் முருங்கைக்காயை நான் பார்க்கும்போது முருங்கைக்காய் கறியை ருசித்துச் சாப்பிடும் எனது தந்தை நினைவில் வருவார். முருங்கை வகையறாக்களை ருசியாக சமைத்துப்போடும் எனது சகோதரி நினைவுக்கு வருவார். கோயில் மரத்தடியில் குந்தியிருந்து கதையளந்து மகிழும் எனது நண்பர்கள் நினைவுக்கு வருவர். எல்லாவற்றுக்கும் மேலாக என்தாய், நான் மரத்திலிருந்து விழுந்துவிடக்கூடாதே என்று பெற்றமனம் நினைவுக்கு ஓடிவரும். எதையோ இழந்து போய் விட்டதான உணர்வுடன் நெஞ்சம் கனக்கும்.

# அழிவின் உக்கிரம்



ஏறத்தாழ
கிறிஸ்துவுக்கு முன்
இருபத்தைந்து ஆயிரத்தில்
லெமூரியாக் கண்டமென
ஒரே நிலமாயிருந்த
இன்றைய பாகிஸ்தானின்
ஐந்தில் ஒருபங்கு நிலப்பரப்பு
தண்ணீரில் தளம்புகிறது

வெள்ளத்தால்
அள்ளிச் செல்லப்பட்டு
இறந்துள்ளனர்
ஆயிரவர்

துண்டாடப்பட்டுள்ளன
நெடுஞ்சாலைகள்

எங்கே நமது வாழ்விடங்கள்
எனும் ஆச்சரியத்தில்
வழித்துத் துடைத்து
மறைந்துபோயுள்ளன ஊர்கள்

அகதிக் கொட்டிலுக்குள்
அஞ்சு குழந்தைகளின்
பிஞ்சுத்தாயின்
முட்டாக்கு முகத்தில்
கண்ணீர் வெள்ளம்

அனாதைப் பிள்ளைகளின்
கண் வாய்களை மொய்க்கும்
ஈக்களின் கொண்டாட்டம்

நட்பு நாடுகள்
அள்ளிக் கொடுத்தாலும்
ஐநாசபை
கிள்ளிக் கொடுத்தாலும்
எப்போது மீளப்போகிறது
இந்நாடு?

வழமைக்கு மாறான
அழிவு நிகழ்வுகள்
பூமிப் பந்தெங்கும்
அடிக்கடி
முகிழ்ந்துகொண்டு இருக்கின்றன

சீறிப்பாயும் மழை வெள்ளம்
சீனாவிலும்
மக்களைக் கொல்கிறது

மொஸ்கோ நகரம்
காடெரிந்த புகையால்
மூடப்படுகிறது

பசுமை வனங்கள்
அங்கங்கே
உலகமெங்கும்
சுடர்விட்டு எரிகின்றன

தினமும்
எங்கோ ஓரிடத்தில்
பூமி நடுங்குகிறது

டொல்பின் மீன் இனங்கள்
கடற்கரை மண்ணில் ஏறித்
தாமாகவே
தற்கொலை செய்கின்றன

சிந்துவெளி நாகரிகம்
நீரில்
மூழ்கியதன் பொருத்தப்பாடு
இப்போதுதான்
அறிவில்
தெளிவடைகிறது.



முத்துராஜா

# அனைவருக்கும் எமது நத்தார் புத்தாண்டு தின நல்வாழ்த்துக்கள்




## ஆரோக்கியத்திலும் தரத்திலும் என்றும் முதலிடம் நிரு பிராண்ட் தயாரிப்புக்களே

Niru Niru
நிரு பிராண்ட்

Tel: 416.750.1976
Web: www.niru.com
E-mail: info@niru.com

# மதுப்பழக்கம் அல்லது குடிப்பழக்கம்

'முதலில் மனிதன் மதுவை அருந்துகிறான். இறுதியாக மனிதனையே மது அருந்திவிடுகின்றது' என்ற சிந்தனையே இன்று சமூக உளவியலாளர் மத்தியில் வலுவடைந்து வருகிறது. மது (Alcohol) என்பது மன அமைதியை வழங்கும் இரசாயனப் பொருள் என்ற கருத்திலேயே வழங்கி வருகிறது. ஆரம்பத்தில் பல்வேறு இயற்கையான மதுவகைகள் மனித இனத்திற்கு மகிழ்ச்சியை ஊட்டி வந்தன. 'கள்' போன்ற குடிவகைகள் வடித்தெடுக்கப் படும் பானமாகி இருந்துள்ளன. எனினும், இன்று நூற்றுக்கணக்கான இரசாயன கலவைகளுடன் பல குடிவகைகள் மதுசார வகைகள் சமூகத்தில் நுழைந்துள்ளமை யால் பல சீரழிவுகளும் அனர்த்தங்களும் நிகழுகின்றன. உள, உடல் சமூகரீதியில் குடிப்பழக்கம் பாதிப்புக்களை ஏற்படுத்துகின்றது.

மதுப்பழக்கம் என்பது மிகவும் மோசமடையும் போது 'குடிநோய்' ஏற்பட வாய்ப்புண்டு. மதுவுக்கு அடிமையாகி போவதால் இதிலிருந்து விடுபட முடியாமல் பலருளர். குடும்பங்களை விட குடியை நம்புவர்கள் பலருளர். வெறியாட்டம், தண்ணி போடுதல், நிறைவெறி என்றெல்லாம் நாம் பாவிக்கும் சொற்கள் இவ் மதுஅடிமைகளை எதுவும் செய்வதில்லை. இவர்கள் கவலையில்லாத மனிதர்களாக தினசரி குடியில் மூழ்கி விடுவர். பாடசாலை மாணவர்கள் இளம் பிராயத்தினர், சாரதிகள், கடின உழைப்பாளிகள் மட்டுமல்ல பெண்கள் கூட இன்று இக்குடிப்பழக்கத்திற்கு அடிமையாகி தவிக்கின்றனர். செல்லுமிடமெங்கும் மதுப்புட்டிகள், மதுவாசனைகள், குடிகாரர்கள் என்பவற்றிற்கு குறைவில்லை. நாகரிகமான செயல் என்று கருதியோ அமைதியூட்டும் பானம் என்று எண்ணியோ இவர்கள் இதனை செய்கிறார்கள் என்பது புரியவில்லை.

இன்றைய சூழ்நிலையில் ஒழுக்க நெறியாளர் (Moralists), சமூக உளவியலாளர் (Social Psychologists) அனைவரும் ஒன்று சேர்ந்து இம் மதுப்பழக்கம் உள்ளவர்கள் பற்றி ஆராய்கின்றனர். உலகெங்கும் நடைபெறும் வீதி விபத்துகள், விமான விபத்துக்கள், தற்கொலைகள், கொலைகள், பாலியல் வல்லுறவுகள், வன்முறைகள், தொழிற்சாலை விபத்துகள் அனைத்திற்கும் அடிப்படையாக விளங்கும் மதுவைப் பற்றி மேலதிக ஆய்வுகள் நடைபெறுகின்றன. சமூக நலனைச் சீரழிப்பதுடன் தனிமனித வாழ்வினையும் சீர்குலைப்பதால் இதன் பேராபத்து தொடர்கிறது.

மருத்துவபாதிப்புகள் இதுபற்றி கருதும் போது குடிப்பழக்கத்திற்கு உடற் கூற்றினை காரணம் காட்டுகின்றன. இப்பழக்கத்திற்கு இவர்கள் உட்பட சில இரசாயன கூறுகள் தூண்டலாம் என்கின்றனர். அதேவேளையில் உளவியலாளர்கள் பயம், கோபம், மனத்தளர்ச்சி, கவலை, போன்றவற்றினை ஈடு செய்யவே குடிக்கின்றனர் என்கின்றனர். ஒழுக்க நெறியாளர் சமூகத்தின் சில நியமங்கள் இவர்களை இந்நிலைக்கு தூண்டலாம் என்கின்றனர். எவ்வாறாயினும் குடிப்பழக்கம் என்பது 'ஒரு வேண்டத்தகாத சமூகக் கொடுமையாகவோ அல்லது வேதனை மிக்க வேடிக்கையாகவோ உள்ளது.' காரணம் கூறமுடியாத ஒரு நிகழ்வாகவும் இது உள்ளது.



சில படைப்பாற்றல் உள்ள கலைஞர்கள் மதுப்பழக்கத்தினால் இது ஏற்படுகின்றதென நியாயம் கூறுவர். எனினும், உண்மை அதுவல்ல. இது ஒரு தவறான நம்பிக்கையே. சிலவேளைகளில் நடிகர்கள் அரசியல்வாதிகளைப் பின்பற்றி அவர்கள் போல் மாறி விடுகின்றவர்களும் உள்ளனர். நாகரிகத்திற்காக குடிப்பவர்கள் கூட தம் மனத்தினை சாந்தப்படுத்துகின்றனர். எவ்வாறெனினும் குடிப்பழக்கத்திற்கு உட்படுபவர்கள் அதிலிருந்து மீள முடியாமல் தவிக்கின்றனர்.

பொதுவாக குடிப்பழக்கம் உள்ளவர்கள் ஒருமுறை மது அருந்திய பின்பு மறுமுறை எப்போது அருந்தலாம் என்று ஏக்கநிலையில் இருப்பர். காலையில் இருந்து குடிக்க ஆரம்பிக்கும் இவர்களால் இதனை நிறுத்த முடியாது. நிலை தடுமாறி விழும் நிலைவரை குடிப்பர். மனைவி, பிள்ளைகள், நண்பர்கள் எவரது அறிவுரைகளும் ஏறாது. குறுகிய நேர மகிழ்ச்சியில் ஈடுபட்டு நிரந்தர நோயாளிகளாக மாறிவிடுகின்றனர். ஒரு தற்கொலை முயற்சியாகவே இது நிகழ்கின்றது.

மது குடிப்பதிலிருந்து நிகழ்வதினை அவதானிக்கும்போது சில உண்மைகள் புலனாகும். பல்வேறு மதுவகைகளை வாய்க்குள் ஊற்றி விழுங்கியதும் இவை இரைப்பைக்கு செல்கின்றன. செல்லும் போதே உட்புற சுவர்களில் எரிச்சலை உண்டாக்கி வயிற்றுவலியை தோற்றுவிக்கும். நெஞ்சு எரிவும் வாந்தியும் குமட்டலும் நிகழும். சிறுகுடலில் நாளடைவில் அல்சர் எனப்படும் குடற்புண் ஏற்படும். மதுசார இரசாயன இரத்த நாளம் வழியாக தலையிலிருந்து கால்வரை செறியும். மூளை, நரம்பு மண்டலங்கள் பாதிப்புறும். தடுமாற்றம், நடுக்கம், புலம்புதல் போன்ற அறிகுறிகள் ஏற்படும்.

இறுதியில் மயக்கம் கூட நிகழும். இப்படி இருந்தும் தெரிந்தும் மறுநாள் எழுந்ததும் குடிக்க ஆரம்பிப்பவர்.

மூளையைப்போல் மது கல்லீரலைப் பாதிப்பது மிக முக்கியமானது. கல்லீரல் (Liver) உடலின் இராசாயன தொழிற்சாலை போன்றது. உணவைச் செமிபாடு அடைய-செய்வதும், உணவின் நச்சுப் பொருட்களையும் அகற்றுவது இதன்வேலை. மதுவும் ஒரு நச்சுப் பொருளாகும் போது கல்லீரல் இதனை அகற்ற முயலும். எனவே மதுவுக்கும் ஈரலுக்கும் போராட்டம் நிகழும். முதலில் கல்லீரல் வென்றாலும் படிப்படியாகர் தோற்றுப்போய் விடும். கல்லீரல் படிப்படியாக பழுதடைந்துவிடும். இந்நிலையில் வயிற்றில் அமிலம் ஏற்படல், மயக்கம், இரத்தவாந்தி ஏற்படும். இந்நோய் வந்தவர்கள் பொதுவாக தப்புவது அரிது. பலகுடிகாரர்கள் இக்கல்லீரல் (Cirrhosis) நோய் காரணமாக இறக்கின்றனர். அத்துடன் மாரடைப்பு, மூளை இரத்தப் பெருக்கு, முகம் வீங்குதல் ஏற்படலாம்.

மகிழ்ச்சி ஏற்படும், மன அமைதி ஏற்படும் என்று காரணம் காட்டி குடிப்பவர்கள் கூட இறுதியில் அத்தனையும் இழந்து விடுவர். மூளையின் சிந்தனைச் சக்தி பாதிப்புறும். ஞாபக சக்தி குறையும். சுய அறிவு கெட்டுவிடும். இவர்கள் பல கொடூரமான செயல்களில் ஈடுபடுவர். அழுவார்கள், சிரிப்பார்கள், நடிப்பார்கள், தடுமாறுவார்கள், பரிதாபநிலையில் வாழ்வார்கள். சிலருக்கு பிதற்றல்நிலை (Delirium Tremens) என்னும் நோய் ஏற்படும். சிலருக்கு கற்பனை தோற்றங்கள் (Hallucinosis) எனப்படும் நோய் ஏற்படும். தன்னை யாரோ கொலை செய்ய வருகிறார்கள் என எண்ணி மனநோய்க்கு உட்படுவர். சிலர் தற்கொலை செய்து கொள்வர். நூற்றுக்கணக்கான இவ்வகை நோயாளர்கள் சமூகத்தில் வாழ்கின்றனர்.

மேற்கூறிய பல அனர்த்தங்களை உண்டாக்கும் இதனை சில நூல்களில் 'மது அரக்கன்' என்று கூட வர்ணிப்பர். சமூகத்தில் உள்ள இக்கொடிய பழக்கத்தினை நிறுத்தவேண்டின் முதலில் நோயாளிக்கு இதன் விளைவுகளை உணர்த்த வேண்டும். ஒலி ஒளிக்கருவிகள், கலந்துரையாடல்கள், ஆலோசனை வழங்குதல் என்பன பிரதானமானவை. பல இடங்களில் கணவன்மாரின் குடியை நிறுத்த மனைவியர் படும்பாடு சொல்லமுடியாது. சில இடங்களில் பெண்கள் கூட குடிப்பது வேதனை தருவது. இந்த சூழ்நிலையில் இந்நோயாளிகளுக்குப் பிடிக்க கூடிய நல்ல நண்பர்கள் உதவி செய்ய முடியும்.

அவர்கள் சுயநினைவிழந்து செய்யும் செயல்களை அவர்களுக்கு காட்ட வேண்டும். ஜப்பான் நாட்டில் உள்ள வாகனங்களில் உங்களுக்கு மனைவி பிள்ளைகள் இருக்கிறார்கள் என்ற வாசகத்தை ஒட்டிள்ளனர். நெடுஞ்சாலை களில் 'Don't Drink and Drive' என காட்டுகிறார்கள். மனோதத்துவ சிகிச்சை கூட அளித்து வருகின்றனர். தனியாகவும் குழுவாகவும் ஆலோசனை வழங்குகின்ற னர். புதிய வழிமுறைகள் கண்டறியப்பட வேண்டிய சூழ்நிலை இருக்கின்றது.




எஸ். பத்மநாதன்
சிந்தனைப் பூக்கள்

YARL WINDOW BLINDS & DRAPERY
WE ARE SPECIALIZED IN CUSTOM MADE Drapery & Blinds
Since 1991
Tel: 416.806.5397
905.201.7733
VENETIAN/VERTICAL/ROLLER WOOD/FORMWOOD BLINDS WOOD & VINYL SHUTTERS
We have experience to make your home more beautiful
CALL: N.SELVAM

Professional Pest Control
Elimination of Roaches & Mice
Call Kanthan :
416-895-4283 / 416-291-3997
• Cockroaches • Rats & Mice
• Wasps & bees • Birds
• Ants & Spiders

# சிதம்பர ரகசியம்!




என் இனிய நண்பர்களே! வாழ்த்துக்கள்! நலம் பெறப் பிரார்த்திக்கிறேன். சிதம்பர ரகசியம் போயிருக்கிறீர்களா? தில்லை நடராசரைத் தரிசித்திருக்கிறீர்களா? நமது ஈழத்து தமிழர்கள் சிதம்பரம் கோயிலை தமது சொந்தக் கோயிலாகக் கருதுவார்கள். சிதம்பரம் கோயிலுக்கு ஈழத்தில் உள்ள தமது நெற்காணிகளைக் காணிக்கையாக உறுதி எழுதி வைத்தவர்களும் உண்டு. மார்கழி மாதத்திலே திருவெம்பாவை தொடங்கியதும் சிதம்பர யாத்திரை என்பது ஈழத்துச் சைவர்களுக்கு ஓர் ஆன்மீக யாத்திரையாய் அமையும்.

பத்து நாட்கள் சிதம்பரத்தில் தங்கி இருந்து வழிபாடு செய்து, ஆருத்திரா தரிசனம் பார்த்த பின்பே ஊருக்குத் திரும்புவார்கள். சிலர் பக்கத்தில் உள்ள சீர்காழி, வைத்தீஸ்வரன் கோயில் முதலிய ஆலயங்களுக்கும் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்திற்கும் சென்று மகிழ்வர். அண்ணாமலைப் பல்கலைக்கழகத்திற்குப் பின்பக்கமாக உள்ள கோயில் திருவேட் களம் என்னும் பெயருடையது. பாடல் பெற்ற ஸ்தலம் இங்கு தான் அருச்சுனனுக்கு இறைவன் பாசுபதாஸ்திரம் கொடுத்து அருள் பாலித்தான் என்பது ஐதீகம். நிற்க.

நண்பா!
உன் மகனுக்கு சிவசிதம்பரம் என்று நீ பெயர் வைத்ததும் எனக்குத் தெரியும். உன்னைப் போல் பல ஈழத்தமிழர்கள் சிதம்பரநாதன். சிதம்பரேசன், தில்லை நாதர், தில்லைச் சிவன், தில்லை ஈசன், தில்லை நாயகி, சிவகாமசுந்தரி என்றெல்லாம் சிதம்பர நடராசபெருமானின் பெயரையும் அம்பிகையின் பெயரையும் தமது பிள்ளைகளுக்குச் சூட்டி அவர்கள் பெயரை உச்சரிக்கும் போது சிதம்பர நடராசரையும் அம்பாளையும் நெஞ்சில் இருத்தி வணங்குவார்கள். இமைப் பொழுதும் நம் நெஞ்சில் நீங்காது நடனமாடிக் கொண்டிருபவன் தானே சிதம்பர நடராசன். என்ன யோசிக்கிறாய். உன்நெஞ்சில் கையை வைத்துப்பார். அவன் நடனம் டக்...டக் என்று கேட்கும். உணர்வால், உறவால். கோயில் என்றால் சிதம்பரத்தைத் தான் குறிக்கும் என்பார்கள். ஏன்? அதுவே முதல் தோன்றிய பெரிய கோயில் என்பது கருத்து. திருச்சிற்றம்பலம் என்றும் சிதம்பரம் கோயிலுக்கு இன்னுமொரு பெயரும் உண்டு. நமது ஆலயங்களில் பஞ்சபுராணம் படிக்கும் போது தொடக்கத்திலும் முடிவிலும் திருச்சிற்றம் பலம் என்று சொல்லுகிறோமே ஏன் தெரியுமா? காணாமல் போன தேவார திருவாசகங்கள் மறைக்கப்பட்டு இருந்த இடம் தான் சிதம்பர ஆலயம். அந்தச் சுவடிகளை அன்று அரசுகட்டிலில் இருந்த மன்னன் இராசராசசோழனே பொல்லாப் பிள்ளையார் கனவில் காட்ட நனவில் கண்டெடுத்தான். அந்தத் திருமுறைச் செல்வத்தை தந்த சிதம்பரம் கோயிலுக்கு நன்றி சொல்லும் நல்ல நோக்கத்தோடு தான் அப்பாடல்களைப் பிடிப்பதற்கு முன்பும், பின்பும் திருச்சிற்றம் பலம் என்று சொல்ல வேண்டும் என்ற வழக்கம் உண்டாக்கியது.



நண்பா!
நன்றியின் பெறுமானம் கனதியானது. இதனால் தானே கொல்வது போன்ற சொல்லையும், செயலையும் அவர்கள் நமக்குச் செய்த உபகாரத்தை எண்ணிப் பொறுத்துக் கொண்டிருக்கிறோம். செய்நன்றி கொன்ற மக்களுக்கு உய்வு இல்லை என்று திருவள்ளுவரும் நம்மைப் பயமுறுத்தி பழக்கி வைத்திருக்கிறார். எதையும் சிதம்பர நடராசரிடம் ஒப்புக் கொடுப்போம். அவனுடைய சைவ நீதி நம்மை வழிநடத்தட்டும். திருச்சிற்றம்பலம் என்று எழுத்தாளர் ஜெயசிற்பி எழுதிய நாவல் நினைவிருக்கிறதா? நாக்கால் மட்டுமல்ல. பேனாவால், நாவாலால், பாடல்களால், நாடகங்களால் சிதம்பரத்தின் பெருமை என்றும் பேசப்பட்டு வருகிறது. சிதம்பரம் போக முடியாது போனால் அந்த நடராசப் பெருமானை தரிசிப்பதற்கு ஈழத்துச் சிதம்பரம் தோன்றிய வரலாறும் நீங்கள் அறிந்ததே!

நண்பா!
சிதம்பரத்தில் ஓர் இரகசிய அறை உண்டு. நடராசப்பெருமானுக்குப் பஞ்சாலாத்தி காட்டிய பின்பு, தீட்சிதர் கொஞ்சம் முன்னால் வந்து அந்த இரகசிய அறைக்கும் பஞ்சாலாத்தி காட்டுவார். எல்லோரும் அதனைக் கண்டு கைகூப்பி வணங்குவார்கள். அந்த இரகசிய அறையுள் என்ன இருக்கிறது? வழிபடும் அடியார்கள் சொன்ன துன்பங்களை எல்லாம், தில்லையம்பலவன் அந்த அறையுள் போட்டு வைத்திருக்கிறான். ஏன் தெரியுமா? ஒருவர் சொன்ன துன்பத்தை இன்னொருவர் அறியக்கூடாது. அது தீர்க்கப்படலாம் இல்லையேல் தீய்க்கப்படலாம். தீர்த்தன் நல்தில்லைச் சிற்றம்பலத்தே தீயாடும் கூத்தன். துன்பம் சொன்னவர்களுக்கு இன்பம் அளித்துக் குளிரவைக்கலாம். இன்பமளிக்க விதிக் கோடு இடம் கொடுக்காத போது அது தீயாடும் நேரத்தில் பொசுக்கப்படலாம்.

சிவபெருமான் பெரியவன். பெம்மான் பெருந்துறையான் என்பார் மாணிக்க வாசகர். பெரியோன் ஒருவன் கண்டு கொள் என்று சிவபெருமானே தன்னைப்பற்றி மாணிக்கவாசகருக்கு விளக்கமளித்தான். கடவுளே தன்நிலை விளக்கம் அளிக்க வேண்டிய சூழ்நிலை உண்டாகியது. உலகியல் வாழ்க்கையில் குடும்பம் என்றாலும், சமுதாயம் என்றாலும் பொதுவாழ்வு என்றாலும் தன்நிலை விளக்கம் தேவையே. இல்லையேல் ஊரவர் தத்தம் மனத்தவனே! எத்தனையோ துன்பங்களைப் பலர் அவனுக்குச் சொல்லி சொல்லி வழிபட்டிருப்பர். யாருடைய துன்பத்தையாவது அவன் பிறருக்குச் சொன்னானா? இல்லையே!

நமது துன்பங்களை நமது கடவுளுக்கு மட்டுமே நாம் சொல்லமுடியும். நமது தாய்க்குச் சொன்னால் அவள் கவலைப்படுவாள். தந்தைக்குச் சொன்னால் கஷ்டப்படுவார். இல்லையேல் கோபிப்பார். மனைவிக்கோ, கணவனுக்கோ சொன்னால் இழக்காரமாய் நம்மை எண்ணுவர். பிள்ளைகளுக்குச் சொன்னால் பிள்ளை பெலவீனப்பட்டுவிடும். நட்புடையோருக்குச் சொல்லலாமா? வேண்டாம். அவர்கள் இரகசியத்தைப் பரகசியப்படுத்தி பரிகசிப்புக்கு வழிகோலிவிடுவார்கள். தோழமையோடும் ஏழைமை பேசேல் என்று கூறுகிறார் ஔவைப்பாட்டி. ஆக, நமது இறைவனிடமே நாம் சொல்லுவோம். அவன் அதனை அறையில் வைத்து ஆவன செய்வான். 'யாரொடு நோவேன் யார்க்கெடுத்து உரைப்பேன் ஆண்ட நீ அருளில்லை யானால்' என்கிறார் மணிவாசகர். 'நோவற்க நொந்தது அறியாற்கு' என்பான் திருவள்ளுவன். துன்பம் என்ற வலியை, நோவை, கனத்தை அறியாதவருக்கு அதனை அனுபவிக்காதவர்களுக்கு நமது துன்பங்களைக் கேட்கும் அக்கறையோ பொறுமையோ இருக்காது என்பது அவர் அபிப்பிராயம்.

நண்பா!
சிலர் கனமான துன்பங்களோடு இரும்பாய் இறுகி இருப்பார்கள். நமது துன்பம் அவர்களுக்கு துரும்பாய் இருக்கும். ஆதலால் யாருக்கும் நமது துன்பங்களைச் சொல்லுவது சாத்தியப் படாது. நாம் கலங்கிக் கொண்டு நமது துன்பத்தைக் கூறும் போது கனத்த துன்பமுடையவர் கதறிக் கொண்டு தனது துன்பங்களைச் சொல்லி அழுவார். அழுவாரெல்லாம் தம் கவலைக்கே என்று ஒரு பழமொழி உண்டல்லவா? உதவி கேட்கப்போன நாம் உதவி செய்ய வேண்டிய நிலையும் உருவாகும். நமது இறைவன் துன்பத்தை அனுபவித்தவன் இல்லை. ஆனால் அதனை அறிந்தவன். 'துன்பமே பிறப்பே இறப்பொடு மயக்காம் தொடக்கலாம் அறுத்த நற்சோதி' என்பார் மாணிக்கவாசகர். துன்பம் அறிந்தவனான முற்றும் உணர்ந்தவனான வாழ்முதலாகிய பொருளான பெரியோனுக்கு மட்டுமே நமது துன்பங்களைச் சொல்லலாம். சொல்லுவோம்.

சொல்லி ஆறுதல் அடைவோம். துன்ப நீக்கத்துக்கான வாய்ப்புவரும் போது சிவபெருமான் நாம் எதிர்பாராமலேயே நமக்கு அருள் செய்வான். அந்த அருளைப் பெற்றதும், நாம் போற்றியோம் நமச்சிவாய புயங்களே மயங்குகின்றேன் என்றது போல் நன்றியோம் நமச்சிவாய! நன்நெறி பயந்தவனே என்று கூறி அவனை வணங்குவோம். சிதம்பர ரகசியத்தின் ஒரு புள்ளி. ஒருதுளி இது.

வேறு என்ன?
பிற பின்பு



- புலவர். ஈழத்துச்சிவானந்தன் -
(நிறுவனர் ஆதி அருள்நெறி மன்றம் - கனடா)

நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்-இலவச ஆலோசனை வழங்கப்படும்

## தீராத நோயினால் பீடிக்கப்பட்டுள்ளீர்களா?



சிறியோர் தொடக்கம் முதியோர்வரை இதுவரை தீராத வியாதியினால் பீடிக்கப்பட்டு குணமடையாமல் இருப்பவர்களுக்கு இயற்கை மூலிகைகளிலான தீங்கு விளைவிக்காத சூரணங்கள், குளிகைகள், லேகியங்கள், உயிர்ச்சத்துக்கள், பானங்கள் போன்றவற்றினாலும் சர்மத்தின் வெளிப்புறத்தே ஏற்பட்டிருக்கும் மாறாத நாட்பட்ட புண்களுக்கும், சொறியினால் ஏற்பட்டிருக்கும் காயங்களுக்கும் விபத்தினால் ஏற்பட்ட அடிகாய நோவிற்கும் ஏற்ற அனுபவ ரீதியாக கையாண்ட எண்ணையினால் குணமடைய தகுந்த ஆலோசனை! இலவசமாக வழங்கப்படும். இது தவிர தகுந்த அன்ன ஆகாரங்களினாலும் நோய்கள் நிவர்த்தி பெற வழியுண்டு.

இலவச ஆலோசனைகளுக்கு: **647.718.3909**

**வைத்திய கலாநிதி கே.ரி. கோபால்**
D.A.M.S - R.A.M.P. (SriLanka) M.H.D.C (Madras) C.D.S. _ C.N.H.P. (Canada)
Herbalist - Sidha - Ayurvedic - Homeopathic & Biochemic Family Physician
LG.Ayurvedic Medical Services (SriLanka)

# குளிர்காலத்தில் வாகனம் ஓட்டுவோருக்கு சில அறிவுரைகள்

குளிர்காலத்தில் பாதுகாப்பாக வாகனம் செலுத்துவதற்கான ஆயத்தங்களைச் செய்யுங்கள்

**குளிர்கால ரயர்கள்** (Winter Tires)
கடினமான மூலப்பொருள்களைக் கொண்டு ஆழமான வெட்டுக்களுடன் விசேடமாக தயாரிக்கப்பட்ட குளிர்கால ரயர்கள் தார்ப்பாதைகளை இறுகப்பிடிக்கும் தன்மை கொண்டவையாகும். இவை பாதையில் வழுக்குவதையும் வாகனம் புரளுவதையும் வெகுவாகக் குறைக்கும். பனிக் குவியலில் ஓட்டமுடியாமல் மாட்டிக்கொள்வதையும் இவை தவிர்க்கும்.

**குளிர் எஞ்சின் ஓயில்** (Winter Engine Oil)

5w-30 போன்ற இளகிய எஞ்சின் ஒயில் குளிர்காலப் பாவனைக்கு மிகவும் சிறந்தவை. எஞ்சினை ஸ்டாட் (Start) செய்யும் பொழுதே அவைக்குக் கூடுதலான சேதம் ஏற்படுகின்றன. இளகிய எஞ்சின் ஒயில்களைப் பாவிப்பதன் மூலம் இயந்திரத்துக்கு (Engine) ஏற்படக்கூடிய சேதத்தைக் குறைப்பதோடு, அப்படியானவை எண்ணை வடிகட்டிகள் ஊடாக இலேசாகச் செல்லக்கூடியவை.

**குளிர்கால முன்கண்ணாடி துப்புரவாக்கும் கருவி** (Winter Wiper Blades)
இந்தக் கருவி இருதட்டுகளுடன் சிறந்த



சிலிக்கோன் ரப்பரினால் செய்யப்பட்டவையாதலால் அதற்கிடையே நீர் உறைந்து ஐஸ் உருவாகுவது தவிர்க்கப்படுகிறது. இவைகளைப் பாவிப்பதால் கண்ணாடிக்கும் இந்தக் கருவிக்கும் இடையே நெருங்கிய தொடர்பு ஏற்பட்டு அதனால் கண்ணாடி ஊடாக தெளிவாகப் பார்க்கக்கூடியதாக இருக்கும்.

**முன்கண்ணாடி சுத்திகரிக்கும் நீர்** (Windshield Washer Fluid)
கண்ணாடி ஊடாகப் பார்ப்பது சிறப்பாக அமைய வேண்டுமாயின் -30° அல்லது -45° உறைவதைத் தடுக்கும் (anti-freeze) நீரைப் பாவிப்பது சிறந்தது. இவ்வகையான நீர் வகைகள் கண்ணாடியில் உறையும் ஐஸ்கட்டிகளையும் ஏனைய அழுக்குகளையும் கண்ணாடியில் இருந்து சிறந்த முறையில் நீக்க வல்லது.

**குளிர்கால வாகன ஓட்டிகளுக்கான பாதுகாப்புப் பொதி** (Winter Driving Safety Kits)
குளிர்காலத்தில் நீண்டதூரப் பயணத்தை மேற்கொள்பவர்கள் பட்டரிகளைத் தொடுக்கும் கேபிள் வயர்கள் (Booster Cables) கம்பளிகள், முதலுதவி மருந்துப்பொதி (FirstAid Box), தப்பிப்பிழைக்கும் பொதி (Survival Kits) ஆகியவற்றை கொண்டு செல்வது சிறந்தது.

**குளிர்கால வாகன பாராமரிப்புச் சேவைகள்** (Winter Maintenance Services)

குளிர்காலத்தில் பாதுகாப்பாக வாகனத்தை செலுத்த வேண்டுமாயின் குளிரூட்டும் கருவி, பிரேக், மின்சார இணைப்புகள், காற்றை வடிகட்டும் கருவி, பாதுகாப்பு பெல்ற் ஆகியவற்றை நன்கு பரிசோதித்து சிறந்த முறையில் வைத்திருத்தல் வேண்டும். குளிரூட்டும் கருவி, பிறேக், ரான்ஸ்மிசன் (Transmission) போன்றவற்றில் நீர், எண்ணை போன்றவற்றின் மட்டத்தைப் பார்த்து சரியான அளவைப் பேணல் வேண்டும். இப்படிச் செய்வதால் நடுவழியில் வாகனம் நின்று தவிக்கும் நிலையைத் தவிர்த்துக் கொள்ளலாம். எப்பொழுதும் முன்கண்ணாடியைச் சுத்தம் செய்யும் நீரின் மட்டத்தைக் கவனித்தல் வேண்டும்.


வெற்றியாளர்களின் தெரிவு...!

செந்தியின்... தமிழன் வழிகாட்டி 2012

நம்பிக்கை * உழைப்பு * நேர்மை



Senthi Chelliah

உங்கள் விளம்பரம்

From $100.00

உங்கள் விளம்பரங்களிற்கு இன்றே அழையுங்கள்

விளம்பரத் துறையின் முன்னோடிகள்

ATHAVAN PUBLICATIONS

416 615 4646 tamilsguide@rogers.com

236

நகைச்சுவைத் தொடர்

# ராசம்மா ராச்சியம்

கலகலப்பு தீசன்





திரைகடலோடியும் திரவியம் தேடு - ஔவையார்


உலகரும் முருகேசரும் யாரையோ மன்றாடி ஈழத்துப்பூராடநாரின் 'வல்வெட்டித்துறை கடலோடிகள்' புத்தகவெளியீட்டு நிகழ்ச்சிக்கு சென்றிருந்தனர்.

முருகேசர் நீண்ட பெருமூச்சு விட்டபடி சொன்னார்... நமக்குள் எத்தனையோ சரித்திரங்கள் புதைந்து கிடக்கிறன. பல மண்ணோடு மண்ணாகிப் போய்விட்டன. பல சரித்திரங்களும் சம்பவங்களும் மறைந்துவிட்டன, மறைக்கப்பட்டுவிட்டன, எரிந்துவிட்டன, எரிக்கப்பட்டுவிட்டன என அழாக்குறையாகச்சொல்ல


ஆக்களையே எரிச்சு புதைச்சு மறைச்சுப்போட்டினம். சரித்திரத்தையும் சம்பவங்களையும் மறைக்கிறது பெரிய வேலையே! என பக்கப்பாட்டுக்கு செக்கண்ட்புளோர் செல்லம்மாவை இழுத்தா ஆட்டிலறி அன்னம்மா..

பாரதியின் நினைவு தினத்தில்
'சிந்து நதியின் மிசை நிலவினிலே சேர நம் நாட்டிளம்.. பெண்களுடனே சுந்தரத்தமிழினில் பாட்டிசைத்து தோணிகளோட்டி.. விளையாடி வருவோம்'
பாடலைக்கேட்டதும் சில தினங்களுக்கு முன்
வல்வெட்டித்துறை கடலோடிகள் புத்தக வெளியீட்டுக்குச்சென்றுவந்த நிகழ்ச்சி கண்முன் வந்தது.

நாம் அறிந்த தமிழ் அறிஞர்களில் ஒருவரான ஈழத்துப்பூராடனார் கனடாவில் முதன் முதலில் தமிழ் அச்சுக்கலையை ஆரம்பித்தவர். இவர் தமிழ் அறிஞர், எழுத்தாளர், ஐம்பதுக்கு மேற்பட்ட நூல்களை எழுதியுள்ளார். அத்துடன் பல நூல்களை இலவசமாக அச்சிட்டு வெளியிட்டவர்.



அவர் கடந்த ஆண்டு டிசெம்பர் 21 இல் காலமானாலும் அவர் ஆசையில் எழுதி வெளியிடாத 'வல்வெட்டித்துறை கடலோடிகள்' என்ற நூலை புத்தக உருவில் அவரது பிள்ளைகளும் தமிழ்மக்கள் புலம்பெயர்ந்த காலத்திலிருந்து தென்னிந்தியக் கலைஞர்களை அழைத்து பல கலை நிகழ்ச்சிகளையும் றோயேர்ஸ் கேபிள் மூலம் கலாபம் தொலைக்காட்சியையும் ஆரம்பித்த விஸ்ணு என அழைக்கப்படும் விஸ்ணுசுந்தரம், மறைந்த தனது தந்தையார் சிற்றம்பலம் விஸ்ணுசுந்தரம் அவர்களுக்கு சமர்ப்பணமாக அனுபவங்களுடன் கூடிய தகவல்களைத்திரட்டி புத்தகத்தை வெளியிட்டது பெருமைப்படக்கூடியது.




மகன் தந்தைக்கு ஆற்றும் உதவி இவன் தந்தை என்நோற்றான் கொல் எனும் சொல்
பெற்றோரால் பிள்ளைகளுக்கும்
பிள்ளைகளால் பெற்றோர்க்கும் நற்பெயர் ஏற்பட வேண்டும்.

தந்தை மகற்கு ஆற்றும் நன்றி அவையத்து முந்தியிருப்ப செயல்...

வள்ளுவரின் குறள் காலம் காலமாக கருத்தோடு இருந்தாலும் எத்தனை பேர் அதனைக் கருத்தில் கொள்கிறார்கள் ?

இதேவேளை எம்.ஜி.ஆரின் படகோட்டி படத்தில்
'தரைமேல் பிறக்கவைத்தான் எங்களை தண்ணீரில் மிதக்கவிட்டான்'
'ஒருநாள் போவார் ஒருநாள் வருவார் ஒவ்வொரு நாளும் துயரம்'
'ஒரு சாண் வயிற்றை வளர்ப்பவர் உயிரை ஊரார் நினைப்பது சுலபம்'




முடிந்தால் முடியும் தொடர்ந்தால் தொடரும் இதுதான் எங்கள் வாழ்க்கை
தனியே எம்மை தண்ணீரில் மிதக்கவிட்டான்' பாடல்

கவிஞர் வாலியின் மீனவர் வாழ்வை பிரதிபலிக்கும் பாடல் வரிகள் அன்றும் இன்றும் என்றும் மறக்கமுடியாத பாடல்.

மீன்பிடிக்கவும், தொழில் வளம் தேடி இலங்கையை விட்டுப் புறப்பட்டு அரபுநாடுகளில் வேலை தேடியவர்களும்



தண்ணீரில் கண்டம் - தத்து என கீரிமலை கேணியில்கூட இறங்கிக் குளிக்காத பலர், கப்பல்களில் வேலைசெய்து கடல் தண்ணீரில் அவர்களின் கண்ணீர் கலந்த வரலாறுகள் பல.

பல குடும்ப உறவினர்களுக்கு பணத்தை டொலரிலும் பிராங்கிலும் டினாரிலும் மாற்றிச் செலவு செய்தனரேயன்றி அவர்களின் வாழ்க்கை மாற்றத்தைக் கவனிக்கவில்லை.



அன்றுதொடங்கி கப்பலோட்டிய தமிழன் வரை போராடி
இன்றுவரை கப்பலேறி கடலைக் கடக்க தமிழர் படும் பாடு எண்ணிலடங்காது. எடுத்தியம்ப முடியாது..




தரைமேல் இருக்கவைத்தான் பெண்களை கண்ணீரில் குளிக்கவைத்தான்...

## ஞாபகம்..வருகிறதா - டிசெம்பர் மாதம்

3. 1925 இல் இலங்கை வானெலியின் வானொலி சேவை கொழும்பில் ஆரம்பம்
17. 1947 இலங்கையில் தமிழரசுக்கட்சி ஆரம்பிக்கப்பட்ட தினம்
24. 1987 மக்கள் திலகம் எம்.ஜி.ஆர். நடிகர், தமிழக முதல்வர் நினைவுதினம்
24 1973 ஈ.வெ.ராமசாமி பெரியார் திராவிட கழகத்தை ஆரம்பித்தவர் நினைவுதினம்
25. பாலன் பிறப்பு கிறிஸ்மஸ் பண்டிகை
27. 1945ல் 28 நாடுகளின் ஒப்புதலுடன் உலக வங்கி ஆரம்பிக்கப்பட்டது
30. 2006 சதாம் குசைன் தூக்கிலிடப்பட்டார்
31 பல நன்மை தீமைகளைச்சந்தித்த 2011 ஆம் ஆண்டு நிறைவுபெற நல்லவை நடக்க 2012ம் ஆண்டு பிறக்கப்போகிறது.




ஆண்டுக்கு ஆண்டு தேதிக்கு தேதி ஆயிரம் இருக்குது சுபதினம்.
உங்கள் நண்பர்கள் உறவினர்களுக்கு பிறந்தநாள் வரவிருக்கிறது.
வாழ்த்துச்சொல்ல மறந்துவிடாதீர்கள்.
உயிரோடிருக்கும்போதே... வாழ்த்துங்கள், பாராட்டுங்கள்.
இறந்தபின் கல்லறையின் முன் அல்லது... சுடுகாட்டில் நின்று கண் கலங்குவதைவிட....
சிரிப்பார். சிலர் அழுவார்... நான் சிரித்துக்கொண்டே... அழுகின்றேன்






விளம்பரம் பத்திரிகையை இணையத் தளத்தில் வாசிப்பதற்கு
www.vlambaram.com



யோகா சோதிடம்
• கிரகப்பொருத்தம் பார்த்தல் • சுபமுகூர்த்தம் கணித்தல்
• பலன் பார்த்தல் • சாதகக் குறிப்புக் கணித்தல்
தொடர்புகளுக்கு: 416.299.8361

வெளிவந்துவிட்டது!



பலரால் ஆய்வு நிகழ்த்தப் பெற்ற
Dr. கோபால் அவர்களின்
எம்மை நாம் பாதுகாப்பது எப்படி?
மருத்துவ கைநூல்.
கிடைக்கும் இடம்: விளம்பரம் பத்திரிகை அலுவலகம், 5215 Finch Ave. E, #201

# ஸ்டார் 67

கடந்த டிசெம்பர் 07, 2011, புதன்கிழமை ஸ்டார் 67 திரைப்படத்தின் பிரத்தியேகக் காட்சி Scarborough Center Cineplex தியேட்டரில் காண்பிக்கப்பட்டது. இந்த திரைப்பட உருவாக்கத்திற்கு 60 இற்கும் மேற்பட்ட கலைஞர்கள், தொழில்நுட்பக் கலைஞர்களின் பங்களிப்பும் பலம் சேர்த்திருந்தது. இப்படத்தின் உருவாக்கத்திற்கு அணிசேர்த்தவர்கள்

**கமெரா - குகேந்திரன் ( ரங்கன் )**
**இசை - செந்தூரன் அழகையா**

**தயாரிப்பு - கதி செல்வகுமார்**

**கதை, வசனம் - கதி செல்வகுமார்**
**தொகுப்பு, சலனபொறியியல் - றைடன் வே. பாலசிங்கம்**
**திரைக்கதை - கதி செல்வகுமார், றைடன் வே. பாலசிங்கம்**
**இயக்கம் - கதி செல்வகுமார், றைடன் வே. பாலசிங்கம்**

நடிகர்கள்: இமான் கண்ணன், மணிமாறன், சேயோன் அல்போன்ஸ், கணபதி ரவீந்திரன், கந்தசாமி கங்காதரன், யசோதா மணிமாறன், ஜெனிசா, ஹமில்டன் கிறிஸ்டி மற்றும் சிலர்










# GUINNESS RECORD BY A TAMIL CANADIAN - 2011








Mr. Mohanathas Sivanayakam, a Tamil Canadian who broke the Guinness record. He inserted 2020 needles in the head. The previous record was held by Wei Shengchu who inserted 2009 needles on April 2009 in Italy. Under the supervision of Homeopathy Dr. Paul Joseph, Mr. Mohanathas inserted 2020 acupuncture needles on his head by himself, on Saturday, December 03, 2011 from 11.am to 11.20 p.m. at Neote's Plaza, 1193A Brimley Rd, Unit 1, Scarborough, Ontario. M1P 3G5.

Mr. Ramalingam Shanmugaratnam (Registrar of Marriage) and Mr. Shanmugam Kathirvelu (Community Worker) were the judges at this event. Thousands of people from the community were in attendence of the record breaking event. Dr. Paul Joseph often checked, recorded blood pressure and heart condition of Mr. Mohanthas.

Mr. Lingan Nadarajah, a Financial Advisor, worked tirelessly to promote this event. He welcomed the visitors and broadcasted the program through Geethavaani community radio. There were a few other community media who also promoted this event. Mr. and Mrs. Krishnan of Quality printers encouraged him and took photos of the event.

The former Guinness winners Mr. Sylvester Rajaratnam, owner of photo fast and Mrs. Meena Sakthivel, producer of "Sivappu Mazhai" Movie certified Mr. Mohanathas Sivanayakam's achievement.

Vlambaram Publications wants to congratulate Mohanathas Sivanayakam's for his great achievement.

வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் எனது உளம் கனிந்த நத்தார் புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்.


"Let me help you make the right choice"

SchurenSriskandarajah B.A.
Sales Representative

HomeLife/Future Realty Inc., Brokerage*
7 Eastvale Drive, Markham Ontario L3S 4N8

SCHUREN.CA • 416.333.9393





RE/MAX Vision Realty Inc. Brokerage.
Each Office Is Independently Owned and Operated
Office: (416) 321-2228
Email: anton.jeeva@gmail.com
Web: AntonJeeva.com
2210 Markham Rd., Suite 1, Toronto, ON M1B 5V6

Member of RE/MAX 100% Club 2007 - 2010


Anton Jeeva Arulappu B.Eng
Real Estate / Principal Mortgage Broker
(416) 575-5055


AWARD WINNING REALTOR
Specialized in bank sale homes
Preconstruction condos in downtown from $239,000
Mortgage can be arranged as low as 2.2 % ( variable)











Warden/Finch
Bedrooms: 2+1
Washrooms: 2

Bur Oak/Markham
Bedrooms: 3
Washrooms: 3

Dixie/Sandalwood
Bedrooms: 4
Washrooms: 3
Brand New Basement












Port Union/401
Bedrooms: 4
Washrooms: 3
Basement: Finished
2 years old

Midland & Danforth
Bedrooms: 1
Washrooms: 1

Want to own
a new condo unit in
Bathurst/Lakeshore
Donmills / Yorkmills
Commercial & Investment properties



Kantha Property Management Group Inc.
KPM Group Inc.

Personal and Business Loans
Investment Properties
Line of Credits
Property Management Services
Business Setup Consultancy
Bad Credit Solutions
1st and 2nd Mortgages
Bankruptcy
Residential and Commercial Leasing
Consumer Proposals

T: 416-214-6161
F: 416-465-3535

3015 Kennedy Road, Suite 205, Toronto, ON M1V 1E7
www.KPMInvestment.com, kantha@KPMInvestment.com



HARD WOOD
$250 Use for the stairs
Oak Hardwoods Select & Better $3.99
Laminate 12.3 - $1.29
Hardwood Installation - $1.50

123 - 4800 Sheppared Ave. East.
Scarborough

Contact: 416.830.3932
We do custom stairs





NuTek COMPUTERS
www.nuTechComputer.com

☑ Virus Removal
☑ Internet Sharing
☑ Computer Tune Up
☑ Computer Repair

அனைத்து கணனி திருத்த வேலைகளும் உங்கள் வீட்டில் வந்து திருத்தி தரப்படும்

416.587.1619
techsupport@nutechcomputer.com

Raj Paramasamy
A+ Certified PC Technician
Microsoft Certified Professional

SALES - SERVICE - UPGRADES